விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email: Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2048 மார்கழி 18 செவ்வாய்க்கிழமை (02.01.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 014

## வவுனியா பஸ்நிலைய பிரச்சினை முதலமைச்சராலேயே தீர்க்க முடியும்

### இ.போ.ச வட பிராந்திய தொழிற்சங்கம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வவுனியா பஸ்தரிப்பு நிலைய பிரச்சினையை வடக்கின் முதலமைச்சர் ஒருவராலேயே தீர்க்க முடியும் என வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் இணைந்த தொழிற்சங்கம் தெரிவித்ததுடன்,

வடக்கு முதமைச்சருக்கு எதிராக தமிழரசுக்கட்சி நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்தபோது அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தபோதிலும் எங்கள் பிரச்சினை தொடர்பில் முதல 23

## யாழ். மணியம் தோட்டம் துண்டி சந்திப்பகுதியில் மோட்டார் சைக்கிள் விபத்து; இரு இளைஞர்கள் உயிரிழப்பு





(யாழ்ப்பாணம்)

புதிய ஆண்டு முதலாம் நாளான நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர். யாழ்ப்பாணம் மணியம் தோட்டம் துண்டி சந்திப் பகுதியில் நேற்று மாலை 4 மணியளவில் இடம்பெற்ற இவ் விபத்தில் அதே பகுதியைச் சேர்ந்த 23 வயதான ஜோசப் அல்பிரட் ரவிராஜ் மற்றும் 33 வயதான ஆனந்தராஜா க்ரைன்சன் ஆகிய இருவரே இவ்வாறு உயிரிழந்தவர்களாவர். நேற்று மாலை குறித்த இருவரும் மணியம் தோட்டம் பகுதியில் வேகமாக மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த போது துண்டி சந்தி 23

# பிணைமுறி மோசடி தொடர்பில் நடவடிக்கை எடுத்தே தீருவேன்

### ஐ.தே.க முன்வைத்த கோரிக்கையை அடியோடு நிராகரித்த மைத்திரி



(கொழும்பு)

மத்திய வங்கி பிணை முறி மோசடி தொடர்பான விசாரணை அறிக்கையை உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்குப் பின்னர் பகிரங்கப்படுத்துமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சிலரால் விடுக்கப்பட்ட கோரிக்கையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அடியோடு நிராகரித்துவிட்டார். மேலும் ஊழல்வாதிகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

## 3 இராணுவத்தினர் உட்பட 41 பேருக்கு மரண தண்டனை

### கடந்த 13 வருடங்களில் யாழ். மேல் நீதிமன்றால் தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மேல் நீதிமன்றில் கடந்த 13 வருடங்களில் 3 இராணுவத்தினர் உட்பட 41 பேருக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. யாழ் மேல் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இடம்பெற்ற கொலைச் சம் 23

## அரச பஸ் சேவைகள் வடக்கில் முடக்கம்

### பணிப்பகிஷ்கரிப்பால் பொது மக்கள் சிரமம் நெருக்கடியில் தனியார் சிறந்த சேவை

(யாழ்ப்பாணம்)

புதுவருட பிறப்புதினமான நேற்று முதல் வடபிராந்திய போக்குவரத்துச் சபையினர் ஆரம்பித்துள்ள தொடர்ச்சியான பணிப் பகிஷ்கரிப்பு போராட்டத்தால் பெரும் சிரமங்களைப் பொது மக்கள் எதிர்நோக்கியிருந்தனர். தூர இடங்களை சேர்ந்த நோயாளர்கள் முதற்கொண்டு அனைவரும் சிரமத்தை எதிர் நோக்கியிருந்தனர்.

புதுவருட தினத்தில் உறவினர்கள் ஆலயங்கள் மற்றும் இதர தேவைகளின் நிமித்தம் பல பொது மக்கள் பேருந்துக்காக 23

### பருவச் சீட்டுள்ள மாணவர்கள்

## தனியார் பேருந்தில் இலவசமாக பயணிக்கலாம்

(வவுனியா)

பருவகால சீட்டு உள்ள மாணவர்கள் தனியார் பேருந்தில் இலவசமாக பயணிக்க முடியும் என வவுனியா மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத் தலைவர் ரி.இராஜேஸ்வரன் தெரி 23

## அரசியலமைப்புக்கு ஆதரவு வழங்குமாறு சம்பந்தன் விடுத்த கோரிக்கையை நிராகரித்தார் மகிந்த ராஜபக்ஷ

### கெஹலிய ரம்புக்வெல்ல தகவல்

(கொழும்பு) புதிய அரசியலமைப்பிற்கு ஆதரவு வழங்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் முன்வைத்த வேண்டுகோளை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேரடியாகவே சந்தித்து 23

### பிணைமுறி தொடர்பில்

## ஐ.தே.கட்சி பயப்படாது

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் ஒப்படைக்கப்பட்ட மத்திய வங்கி பிணை முறிமோசடி தொடர்பிலான ஜனாதிபதி விசா 23

## வாய்க்காலில் விழுந்த குழந்தை உயிரிழப்பு

### புத்தாண்டு அன்று கிளிநொச்சியில் சோகம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இரத்தினபுரம் பகுதியில் வாய்க்காலில் விழுந்த ஒன்றரை வயதான குழந்தையொன்று உயிரிழந்துள்ளது.

ராஜேந்திரகுமார் யுகினேஸ் என்ற ஆண் குழந்தை நேற்று திங்கட்கிழமை காலை 9.00 23

## சுவாசக் குழாய்க்குள் உணவு அடைத்ததில் குடும்பஸ்தர் பலி

### அண்ணாந்து படுத்துக்கொண்டு வாந்தி எடுத்ததால் ஏற்பட்ட விபரீதம்

(யாழ்ப்பாணம்)

அண்ணாந்து படுத்துக்கொண்டு வாந்தி எடுத்தமையால் சுவாசக் குழாய் அடைத்து மூச்சு திணறி குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். இதில் கிளிநொச்சி அழகாபுரி இராமநாதபுரத்தை சேர்ந்தவரும் 4 பிள்ளைகளின் தந் 23

### சிவராம் கொலையுடன்

## புளொட்டுக்கு தொடர்பில்லை - சித்தார்த்தன்

(யாழ்ப்பாணம்)

மூத்த ஊடகவியலாளர் சிவராம் படுகொலையுடன் புளொட்டுக்கும் எந்தத் தொடர்புமில்லை 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கிராம அலுவலரின் வீட்டின் மீது கல் எறிந்தனரென 6 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அரியாலை தென்கிழக்கு-மணியந்தோட்டம் கிராம அலுவலரின் வீட்டுக்கு கற்கள் வீசி அடாவடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் 6 இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர் என யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

அரியாலை தென்கிழக்கு ஜே/89 கிராம அலுவலரின் வீட்டுக்கு நேற்றுமுன்தினம் கல்வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டது. அது தொடர்பில் கிராம அலுவலரால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. அவரது வீட்டுக்கு சேதம் ஏதும் ஏற்பட வில்லை.

கிராம அலுவலரால் முறைப்பாட்டின் அடிப்படையில் 6 இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் விசாரணைகள் இடம் பெறுகின்றன என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம)

**Spoken /Business English/ ICT**

For those working, migrating & Students 3rd Batch பயிற்சி நெறிகள் காலம்:-Jan-Feb நேரம் 08.30 மு.ப-12.30 பி.ப (திங்கள்-வெள்ளி)

1.நுண்திறனும் தொழில்வழிகாட்டியும்
2.Business / Spoken English
3.MS Office. ICT equivalent to NVQ level 3

முதல் 2 நெறிகளுக்கும் கட்டணம் ரூபா: 4000/-
3ம் நெறிக்கு கட்டணம் ரூபா:6000/-

நேரடித்தேர்வுக்கு 3, 4 Jan 2018 திகதிகளில் காலை 10.30இக்கு சமுகமளிக்கவும். மேலதிகவிபரங்களுக்கு இயக்குனர், NTI, 077 650 5580

**Northern Technical Institute. NTI**

(1979) YMCA Building, 107, 2/1 Kandy Rd, Jaffna.

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

**A/L Day Class**

அரசியல் விஞ்ஞானம்
N.பாபு
வரலாறு
S.பிரபா
ஆரம்பம்:ஜனவரி
06 சனிக்கிழமை 9.00 am
Economics Hall
யாழ்நகர்
**ஐடியல் அக்கடமி**
சண்டிலிப்பாய்
தரன் கல்வியியற் கல்லூரி
(988)

**யாரிடம் பேசுவது?**

யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் எதுவுமே முடியவில்லை ....
என்பன போன்ற எண்ணங்களா?
எம்முடன் பேசுங்கள்.
**கை கொடுக்கும் நண்பர்கள்**
104, 4 ம் குறுக்குத்தெரு. யாழ்ப்பாணம்
*மதசார்பற்றது *ரகசியமானது * இலவச சேவை
021 222 8117, 077 900 8776
வவனியாவில்: (024) 324 4444
(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)
(சி-489)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




**செல்வி முரளிதரன் லோஜிதா**

யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் கல்வி பயின்று 2017 க.பொ.த உயர்தர கலைப்பிரிவு பரீட்சையில் 3A சித்தி அடைந்து மாவட்ட மட்டத்தில் 7ஆவது நிலையைப் பெற்று பாடசாலைக்கும் எமக்கும் பெருமை சேர்த்துத் தந்த எமது அன்புத் தங்கை செல்வி முரளிதரன் லோஜிதாவை வாழ்த்துவதுடன் அவர் மேன்மேலும் கல்வியில் பல உயர்வுகளை அடைய வேண்டும் என வாழ்த்துகிறேன்.

(சி-1056)

"அபியகம்"
மனோகரா, அல்வாய்

வாழ்த்துபவர்
A.நிமல்ராஜ் (அண்ணா)

# 10ஆம் ஆண்டு நினைவு



தயா | கஜன் | வினித்

2009ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2ஆம் திகதி முல்லைத்தீவு பேருந்து நிலையத்தில் ஏற்பட்ட விமானத் தாக்குதலின் போது உயிரைச் சாய்த்துக்கொண்ட தயா, கஜன், வினித் ஆகியோரின் 10ஆம் ஆண்டு நினைவலைகள்



பணி தனை சுமந்த உத்தமர்கள்
கயன், வினித், தயா மும்மலர்கள் கருகியது
அன்னியவன் எரிகுண்டு மழையில்.
இவன் தமிழ் மகன் அன்றோ!
"மனிதம் மதிக்கப்படாத அவலம்"



(சி-1018)

இடம்:-கணுக்கேணி,
முள்ளியவளை

உங்கள் நினைவில் துயருறும்
குடும்பத்தினர், உற்றார், உறவினர்கள்,
நண்பர்கள், ஊழியர்கள்

# பிணைமுறி மோசடி தொடர்பில்
# 3ம் திகதி ஜனாதிபதி விசேட உரை

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி பிணை முறிமோசடி தொடர்பான அறிக்கை மற்றும் அதன் பரிந்துரைகள் குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஊடகங்களுக்கு விசேட உரையாற்றவுள்ளார். நாளை 3ஆம் திகதி அவர் உரை நிகழ்த்தத் திட்டமிட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (இ-7)





# ரூ.13 இலட்சத்து 98000 பெறுமதியான சொத்துக்கள் நேற்று திட்டமிட்டு தீக்கிரை

## வீட்டில் நிறுத்தப்பட்ட மோ.சைக்கிளும் கடலில் கட்டப்பட்ட படகும் நாசம்

(கரணவாய்)

வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார்சைக்கிளும் கடலில் கட்டப்பட்டிருந்த படகும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளதால் 13 இலட்சத்து 98 ஆயிரம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக பருத்தித்துறைப் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

நேற்று திங்கட்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் பிள்ளையார் கோவிலடி இன்பசிட்டிபகுதியைச் சேர்ந்த நவரட்ண ராஜா கோணேஸ்வரன் என்பவரது சொத்துக்களே இவ்வாறு தீக்கிரையாக்கப்பட்டு ள்ளன. வீட்டில் நிறுத்தி வைக் கப்ப ட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று தீக்கிரையாக்கப் பட்டு ள்ளது. வீட்டில் நுழைந்த நால் வரே மோட்டார் சைக்கிளை தீக்கிரையாக்கியதாக முறையிடப்பட்டுள்ளது.

மேலும் அவரின் படகு கடலில் கட்டப் பட்ட நிலையில் அதுவும் தீக் கிரையாக்கப்பட்டுள்ளது. இதனால் நான்கு இலட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதி யான வெளியிணைப்பு இய ந்திரமும் மூன்று இலட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான படகும் அதற்குள் இருந்த 5 இலட்சத்து 10 ஆயிரம் ரூபா பெறுமதியான வலையும் எரிந்துள்ளதாக பருத்தித்துறை பொலிஸில் முறையிடப்பட்டதையடுத்து பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (இ-60)

### யாழ்.மாவட்டத்திலுள்ள
# 11 பொலிஸ் நிலையங்களுக்கு எதிராக 39 முறைப்பாடுகள் 2017 இல் பதிவு
## தேசிய பொலிஸ் ஆணைக்குழு தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள 11 பொலிஸ் நிலையங்களுக்கு எதிராக பொதுமக்களால் 2017 ஆம் ஆண்டில் மட்டும் 39 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள தேசிய பொலிஸ் ஆணைக் குழுவில் பணிப்பாளர் சு. சண்முகரட்ணம் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்திலுள்ள வட்டுக்கோட்டை, அச்சுவேலி, சுன்னாகம், மானிப்பாய், இளவாலை, நெல்லியடி, யாழ்ப்பாணம், கோப்பாய், கொடிகாமம், சாவகச்சேரி, பருத்தித்துறை ஆகிய 11 பொலிஸ் நிலையங்களுக்கு எதிராக 39 முறைப்பாடுகளும் மன்னார், வவுனியா ஆகிய பொலிஸ் நிலையங்களிற்கு எதிராக தலா ஒரு முறைப்பாடுகளும் பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கு எதிராக 4 முறைப்பாடுகளும் கடந்த ஆண்டு பொது மக்களால் பொலிஸ் நிலையங்களுக்கு எதிராகவும் மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கு எதிராகவும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த முறைப்பாடுகளில் 35 முறைப்பாடுகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ள நிலையில் மீதமாகவுள்ள வழக்குகளின் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-15)

# அம்பாந்தோட்டை துறைமுகத்தில் சீனாவின் தேசியக் கொடி



(கொழும்பு)

அம்பாந்தோட்டை மாகம்புர துறைமுகத்தில் நேற்றுக் காலை சீன நாட்டின் தேசியக் கொடி ஏற்றப்பட்டுள்ளது.

குறித்த துறைமுகமானது கடந்த டிசெம்பர் மாதம் 9 ஆம் திகதி சைனா மேர்சன்ட் போட் ஹோல்டிங்ஸ் நிறுவனத்திடம் கையளிக்கப்பட்ட பின்னர் முதற் தடவையாக நேற்று சீனாவின் தேசியக் கொடி ஏற்றப்பட்டது.

இதற்கு முன்னர் அங்கு இலங்கை தேசியக்கொடி மற்றும் துறைமுக அதிகார சபையின் கொடி என்பன ஏற்றப்பட்டிருந்ததுடன், இலங்கையின் தேசியக்கொடி ஏனைய கொடிகளை விட ஒன்றரை அடி உயரத்தில் ஏற்றப்பட்டிருந்தது.

எனினும், கடந்த இர ண்டு நாட்களுக்கு முன்பு இலங்கையின் கொடியின் உயரம் குறைக்கப்பட்டு ஏனைய கொடிகளின் உயரத்துக்கு சமனாக கொண்டு வரப்பட்டு சீனாவின் கொடி ஏற்றப்பட்டது. (இ-7)

# அரசை தூக்கிஎறியும் போராட்டம் ஆரம்பம்
## ஜே.பி.பி.தலைவர் அறிவிப்பு

(கொழும்பு)

தேசிய அரசாங்கம் கலைவதை பிரதான இரண்டு கட்சிகளும் விரும்பவில்லை. இரு தரப்பினரும் அமைச்சுப் பதவிகளை துறக்கவும் விரும்பப்போவதில்லை. ஆகவே 2020 ஆம் ஆண்டு வரை



யில் இவர்கள் பொய்யான காரணிகளை கூறிக்கொண்டு ஆட்சியை தொடர்வார்கள் என மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது. உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் வெற்றி மூலம் அரசாங்கத்தை ஆட்டம் காண வைக்கும் எமது போராட்டம் தொடரும்.

மக்கள் விடுதலை முன்னணியின் செய்தியாளர் சந்திப்பு கட்சி தலைமை அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது. இதில் தேசிய அரசாங்கம் தனது உடன்படிக்கை காலத்தை கடந்து செயற்பட்டு வருகின்றமை குறித்து வினவிய போதே கட்சியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ)



# ஆரம்பமே இப்படியா... மழையால் போட்டி இரத்து

நியூசிலாந்து-மேற்கிந்தியத் தீவுகள் மோதிய 2ஆவது 'ரி20' போட்டி மழையால் பாதியில் கைவிடப்பட்டது.

நியூசிலாந்துக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள மேற்கந்தியத் தீவுகள், அங்கு மூன்று போட்டிகள் கொண்ட சர்வதேச 'ரி20' தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டியில் நியூசிலாந்து வென்றிருந்த நிலையில்,

நேற்று, 2ஆவது போட்டி மவுண்ட் மவுன்கனுய் நகரில் நடந்தது. நாணயச்சுழற்சியில் வென்ற மேற்கிந்தியத் தீவுகள் முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது. மழையால் போட்டி தொடங்க தாமதமானது.

நியூசிலாந்து அணிக்கு மார்டின் கப்டில் (2) ஏமாற்றினார். அபாரமாகஆடிய முன்ரோ, சிக்ஸர், பவுண்டரிகளாக விளாசினார். பிராத்வைட் வீசிய 5ஆவது ஓவரில் ஒரு சிக்சர், 3 பவுண்டரி அடித்த இவர், 18 பந்தில் அரைசதமடிததார். வில்லியம்ஸன் வீசிய 6வது ஓவரில் தொடர்ச்சியாக 4 பவுண்டரி அடித்த இவர், 23 பந்தில் 66 ஓட்டங்கள் (3 சிக்சர், 11 பவுண்டரி) எடுத்து ஆட்டமிழந்தார். அடுத்து வந்த பிலிப்ஸ் (10), ரொம் புரூஸ் (3) நிலைக்கவில்லை.

நியூசிலாந்து அணி, 9 ஓவரில் 4 விக்கெட்டுக்கு 102 ஓட். எடுத்திருந்த போது, மழையால் போட்டி நிறுத்தி வைக்கப்பட்டது. அணித்தலைவர்வில லியம்ஸன் (17), கிட்சன் (1) ஆட்டமிழக் காமல்இருநதனர்.

தொடர்ந்து மழை நீடித்ததால், போட்டியை பாதியில் இரத்து செய்வதாக நடுவர்கள் அறிவித்தனர்.

3ஆவது மற்றும் கடைசி போட்டி நாளை இதே நகரில் நடக்கிறது.

18

நேற்று, நியூசிலாந்தின் கொலின் முன்ரோ, 18 பந்தில் அரைசதமடித்தார். இதன்மூலம் அதிவேக அரைசதமடித்த நியூசிலாந்து வீரர்கள் பட்டிய லில் முதலிரணடுஇடங்களை தனதாக்கினார். ஏற்கெனவே இவர், 2016ல் ஆக்லாந்தில் நடந்த இலங்கைக்கு எதிரான போட்டியில் 14 பநதில் இம் மைல்கல்லை எட்டினார். இப்பட்டியலில் 3ஆவது இடததில் கப்டில் (19 பந்து, எதிர் இல ஙகை, ஆக்லாந்து, 2016) உள்ளார்.

சர்வதேச அரங்கில், இந்தியாவின் யுவராஜ் சிங், 12 பந்தில் (எதிர்-இங்கிலாந்து, 2007,டர்பன்) அரைசதமடிததது உலகசாதனையாகஉள்ளது.

ஆரம்பமே இப்படியா:..

நேற்று, நியூசிலாந்து, மே. தீவுகள் மோதிய 'ரி20', புத்தாண்டில் நடத்தப்பட்ட 1ஆவது சர்வதேச போட்டி. ஆனால மழையால் போட்டி பாதியில் ரத்தானது, ரசிகர்களுக்கு ஏமாற்றம் அளித்தது.

## மாணவர்கள் புதிய அனுமதி

### சிவபூமி பாடசாலை

(சிறுவர் மனவிருத்திப் பாடசாலை
கோண்டாவில் - யாழ்ப்பாணம்)

2018ஆம் ஆண்டுக்குரிய புதிய மாணவர் அனுமதி நடைபெறுகின்றது. எனவே நேரடியாக எமது பாடசாலை அலுவலகத்தில் விண்ணபப்படிவங்களை பெற்றுக் கொள்ளலாம்.

முகவரி:- சிவபூமி பாடசாலை, கோண்டாவில், யாழ்ப்பாணம்.
தொ.பே.- 021 222 7938

(2223)

### சிவபூமி பரடசாலை

(சிறுவர் மனவிருத்திப் பாடசாலை
கனகபுரம் - கிளிநொச்சி)

2018ஆம் ஆண்டுக்குரிய புதிய மாணவர் அனுமதி நடைபெறுகின்றது. எனவே நேரடியாக எமது பாடசாலை அலுவலகத்தில் விண்ணபப்படிவங்களை பெற்றுக் கொள்ளலாம்.

முகவரி:- சிவபூமி பாடசாலை, 1ம் ஒழுங்கை, கனகபுரம், கிளிநொச்சி.
தொ.பே.-021 222 7938

(2224)

## ஆண்டு பன்னிரண்டில் நீங்கா நினைவினில்



அமரர்
**கணபதிப்பிள்ளை கணேசன்**

திதி: அபரபக்க பிரதமை

குடும்பத்தின் குல
விளக்கே! உங்கள்
ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல
பரம்பொருளை
வேண்டி நிற்கும்:

உங்கள்
குடும்பத்தினர்

தோற்றம்: 17.07.1927 மறைவு: 16.12.2005

துன்னாலை மத்தி,
கரவெட்டி.

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
24 - 09 - 1980

இறப்பு
02 - 01 - 2016

### கெங்கேஸ்வரன் தீபா

எம் செல்ல மகளே! நீங்கள்
மறைந்து இரண்டு ஆண்டுகள்
மறைந்தோடி விட்டன அம்மா
எத்தனை ஆண்டுகளானாலும்
உமது நினைவுகள் எம்
நெஞ்சை விட்டகலாது இந்நாளில்
உமது ஆத்மா சாந்தியடைய
ஒவ்வொரு நாளும் பிரார்த்திக்கின்றோம்

உமது பிரிவால் தாங்கொணாத் துயரில் ஆழ்ந்திருக்கும்:
குடும்பத்தினர், அன்புக் கணவர், மகள் ஷாலு

(C-1057)

## மரண அறிவித்தல்

தோற்றம்
1936 - 08 - 15



மறைவு
2018 - 01 - 01

### திருமதி
### சுப்பிரமணியம் தங்கம்மா

வயாவிளானைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் தங்கம்மா நேற்று (2018.01.01) காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - இளையபிள்ளை தம்பதியரின் அருமை மகளும் காலஞ்சென்றவர்களான முருகன் - பூரணம் தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் விஜயசேனா (கனடா), கருணாநிதி (ஜேர்மனி), அரசரத்தினம் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் அமுதகௌரி (கனடா), சிவபாலசுந்தரம் (ஜேர்மனி), மஞ்சுளா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.01.2018) செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

செல்லாச்சியம்மையார் வீதி,
சுன்னாகம்.

தகவல்:
இ.இராசா (பெறாமகன்)
077 072 0972

(2226)

# புலிகளின் காலத்திலேயே ஜனநாயகப் போராட்டம் பலத்துடன் இருந்தது

## மாவை சேனாதிராசா சுட்டிக்காட்டு



(அம்பாறை)

தமிழர்களுடைய ஜனநாயக போராட்ட வரலாற்றில் மிகவும் உச்சமான பலமாக இருந்தது தமிழீழ விடுதலைப் புலிகளின் காலம் என்பதனை யாவரும் அறிந்திருப்பீர்கள் என யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட வேட்பாளர்களை தேர்தல் தொடர்பாக தெளிவூட்டும் கலந்துரையாடல் நேற்று திங்கட்கிழமை நற்பிட்டி முனைசுமங்கலிதிருமணமண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இன்றைய காலத்திற்கு ஏற்றாற்போல் எதிர்கால சந்ததியினராகிய இளைஞர்களை அரசியல் களத்தில் இறக்க வேண்டிய தேவையும் உள்ளது. அதனைக் கருத்தில் கொண்டு எமது கூட்டமைப்பானது இம்முறை முன்னாள் போராளிகளையும் தேர்தலில் களமிறக்கியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆயுத போராட்டமானது 2009 மே.18 அன்று ஒரு எல்லையை அடைந்தது. அதன் பிற்பாடு தமிழ் மக்களுடைய உச்ச பலம் வலு விழந்து காணப்பட்டது. அவ்வாறு இருந்தபோதும் எமது மக்கள் தங்களது பலத்தினை தேர்தல் காலங்களில் வாக்குப் பலம் மூலம் நிரூபித்து வெற்றியும் கண்டிருக்கின்றார்கள்.

இதே போன்றுதான் ஆயுதப்போராட்டம் முடிவுற்றதன் பின்பு நடைபெற்ற அனைத்துத் தேர்தல்களிலும் எமது மக்கள் த.தே. கூட்டமைப்புத்தான் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்பதனை நிரூபிக்க தவறவில்லை.

அவ்வாறு நிரூபித்ததன் காரணமாகத்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச வேண்டும் என சம்பந்தன் தலைமையிலான குழுவினை அமெரிக்கா அழைத்து தமிழ் மக்கள் தொடர்பான பிரச்சினைகளைக் கேட்டறிந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது என மாவை சேனாதிராசா தெரிவித்தார். (இ-7)

# 1400 பக்க அறிக்கையை ஆராய்ந்த பின்னரே என்ன நடவடிக்கை என்பது குறித்து தீர்மானம்

## ஜனாதிபதி செயலகம் தகவல்



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்பட்டுள்ள மத்திய வங்கி பிணை முறி மோசடி குறித்த விசாரணை அறிக்கை தொடர்பாக என்ன நடவடிக்கை எடுப்பது என்பது குறித்து முடிவெடுப்பதற்கு முன்னர், ஜனாதிபதி செயலக அதிகாரிகள் அதனை முழுமையாக ஆராயவுள்ளனர்.

மத்திய வங்கி பிணை முறி மோசடி தொடர்பாக விசாரணை நடத்த கடந்த ஜனவரி மாதம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வினால் உருவாக்கப்பட்ட உச்சநீதிமன்ற நீதியரசர் கே.ரி.சித்ரசிறி தலைமையிலான- ஆணைக்குழு தமது அறிக்கையை நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதியிடம் கையளித்துள்ளது.

இது தொடர்பாக தகவல் வெளியிட்டுள்ள ஜனாதிபதி செயலக அதிகாரிகள் விசாரணை அறிக்கை தொடர்பாக என்ன நடவடிக்கை எடுப்பது என்று முடிவு செய்வதற்கு முன்னர், அறிக்கையை முழுமையாக ஜனாதிபதி செயலக அதிகாரிகள் ஆராயவுள்ளனர்.

இந்த அறிக்கை விரிவான ஒன்று. அதிகாரிகள் இதனை ஆராய்வதற்கு சற்று கால அவகாசம் தேவைப்படும்.

இந்த அறிக்கை, சாட்சியங்கள், இணைப்புகள், பரிந்துரைகளை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது. 100 இணைப்புகளுடன் இந்த அறிக்கை மொத்தம் 1400 பக்கங்களைக் கொண்டதாக உள்ளது." என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை, 70 சாட்சியங்களையும் இந்த அறிக்கை உள்ளடக்கியுள்ளதாக கூறப்படுகிறது.

இந்த அறிக்கையில் ஐ.தே.க.வினர் மீது அதிகளவான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளதோடு முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் மீதும் அதிகபடியான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கை ஊடாக ஐ.தே.கவின் எதிர்கால அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும் சுதந்திரக் கட்சியினர் திட்டமிட்டு வருவதாகவும் தெரிய வருகின்றது.

இருப்பினும் உள்ளூராட்சி தேர்தலின் பின்பே இந்த அறிக்கையை பகிரங்கப்படுத்த ஜனாதிபதி திட்டமிட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. (இ)

# இராசி பலன்

02.01.2018
மார்கழி 18, செவ்வாய்க்கிழமை,
சூரிய உதயம் காலை 6.27 மணிக்கு
பூரணை முற்பகல் 9.21 மணிவரை
திருவாதிரை பிற்பகல் 1.37 மணிவரை
சுபநேரம் 11.00-12.30 மணிவரை
இராகுகாலம் 3.30-5.00 மணிவரை
உதயம் நடேசர் ஆருத்திரா தரிசனம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | சந் |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>கேட்டை, மூலம்<br>அதிகாலை 5.45 மணிக்கு<br>கடக-சந் | | ராகு |
| கேது | | | |
| சூரி, சுக், சனி | புத | குரு,செவ் | |

**மீனம்:** மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், பேச்சில் கனிவு பிறக்கும், வாகன யோகத்தால் வளம் காண்பீர்கள், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள்.

**மேடம்:** தைரியத்தோடு செயற்பட்டு சாதனை படைக்கும் நாள், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், வம்பு வழக்குகளை சமாளித்து வளம் காண்பீர்கள்.

**இடபம்:** தொழிலை விருத்திசெய்ய திட்டங்கள் தீட்டுவீர்கள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், வாக்கு மேன்மையுண்டு, பணப்புழக்கம் கூடும்.

**மிதுனம்:** எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்ல விதமாக நடைபெறலாம், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**கும்பம்:** பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள், புதிய சொத்துக்கள் வாங்கும் எண்ணம் உருவாகும், தொழில் நலன் கருதி அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள்.

**கடகம்:** அன்றாட பணிகள் நன்றாக நடைபெற இறைவனைப் பிரார்த்திப்பீர்கள், பணப் புழக்கம் அதிகரித்தாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், சயன சுகக் குறைவான நாள்.

**மகரம்:** தேவைகள் பூர்த்தியாகும் நாள், பழைய பிணக்குகளைத் தீர்க்க முழு மூச்சுடன் செயற்படுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, போசன நன்மையுண்டு.

**சிம்மம்:** பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், பொதுவாழ்வில் புகழ்கூடும் நாள், சிறப்பான நாள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**தனுசு:** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தொலைபேசி வழியில் எதிர்பார்த்த தகவல்கள் வந்து சேரலாம், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள்.

**விருச்சிகம்:** நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதி காண வேண்டிய நாள், எடுத்த காரியத்தில் அதிக அக்கறை காட்டும் நிலை ஏற்படலாம், பயணங்களின் போது கவனம் தேவை.

**துலாம்:** தடைகளைத் தகர்த்து தன்னிறைவு காணும் நாள், குடும்பத்தினரிடையே ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், திடீர் பயணங்கள் இடம்பெறலாம்.

**கன்னி:** திறமைகள் வெளிப்படும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

# மதகுருமார்களுடன் தமிழ்த் தேசியப் பேரவையினர் சந்திப்பு





(யாழ்ப்பாணம்)



உள்ளூராட்சித் தேர்தலில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் சைக்கிள் சின்னத்தில் போட்டியிடும் தமிழ்த் தேசிய பேரவையினர் தமது தேர்தல் பிரசார நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் பொருட்டு மதகுருமார்களை சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுள்ளனர்.

அந்த வகையில் தமிழ்த் தேசியப் பேரவையின் யாழ் மாநகர முதல்வர் வேட்பாளர் வி.மணிவண்ணன், துணை முதல்வர் வேட்பாளர் ஆ. தீபன் திலீசன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் மற்றும் வேட்பாளர்கள் ஆகியோர் இணைந்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை யாழ். ஆயர் இல்லத்தில் யாழ். மறை மாவட்ட ஆயர் பேரருட்திரு ஜஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை மற்றும் யாழ் மறை மாவட்ட குரு முதல்வர் அருட்திரு ஜெபரட்ணம் அடிகளார் ஆகியோரைச் சந்தித்து ஆசீர்வாதம் பெற்ற னர்.

நேற்று திங்கட்கிழமை நல்லை ஆதீனத்தில் நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் மற்றும் சின்மயா மிஷன் யாழ்.வதிவிட ஆச்சாரியார் ஆச்சிரமத்தில் சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்கிரத சைதன்யா சுவாமிகள் ஆகியோரைச் சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து நல்லூர் ஆலயத்தில் வழிபாடுகளில் ஈடுபட்டனர். (இ-4-9)




நல்லூர் சிவன் கோவிலில் நேற்று முன்தினம் வேட்டைத்திருவிழா சிறப்பாக இடம்பெற்றது. (படங்கள்:- ஐ.சிவசாந்தன்)

## ஏற்றுமதி தரத்திலான பனைசார் கைப்பணி உற்பத்தி மையம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

பனை அபிவிருத்திச் சபையினால் பனைசார் உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதி அபிவிருத்தியினை நோக்காகக் கொண்டு அண்மையில் ஏற்றுமதி தரத்திலான பனைசார் கைப்பணி உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கான நிலையமொன்று சபையின் ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் கட்டடத்தொகுதியில் சபையின் தலைவர் வைத்திய கலாநிதி இராஜலிங்கம் சிவசங்கரால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பனைசார் கைப்பணிப் பொருட்களுக்கு வெளிநாடுகளில் அதிகரித்த கேள்வி நிலவுகின்றமையால் சபையானது புதிய தொழில் நுட்பத்துடன் கூடிய ஏற்றுமதி தரத்திலான பனைசார் கைப்பணிப் பொருட்களை உற்பத்தி செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யத் திட்டமிட்டுள்ளது.

இதன் மூலம் பனை சார் கைப்பணி உற்பத்தியில் ஈடுபடும் பனையை நம்பி வாழும் குடும்ப அங்கத்தவர்களின் பொருளாதார நிலையினை மேம்படுத்திக் கொள்ள முடியும்.

இதுமட்டுமல்லாமல் தற்போது பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பாவனையினை அரசாங்கம் தடை செய்துள்ளமையினால் இயற்கைச் சூழலுக்கு ஏற்ற தன்மை கொண்ட பனைசார் கைப்பணிப் பொருட்கள் மீது உள்ளூர் வாடிக்கையாளர்களும் அதிக நாட்டம் கொண்டு அவற்றை கொள்வனவு செய்து வருகின்றனர்.

இந்த வகையில் பனை வளத்தின் உச்சப் பயன்பாட்டினை பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் எதிர்வரும் காலங்களில் சபை முகாமையானது நவீன தொழில் நுட்பங்களைப் பயன் படுத்தி மிகவும் தரம் மிக்க பனைசார் உற்பத்திகளை வாடிக்கையாளர்களுக்கு ஏற்ற வடிவமைப்புகளில் தயாரித்து சந்தைப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் பனை அபிவிருத்திச் சபையின் பொது முகாமையாளர் பாலசுப்பிரமணியம் சுதாகரன் தெரிவித்துள்ளார்.

மேலும் ஏற்றுமதி நோக்கத்திற்காக பனைசார் கைப்பணி உற்பத்திப் பொருட்களிற்கான கட்டளைகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் அக்கட்டளைகள் யாவும் உரிய காலப்பகுதியில் நிறைவேற்றப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து கரவெட்டியில் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் 2018 ஆம் ஆண்டுக்கான கரவெட்டி அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை கரவெட்டி கமநல அபிவிருத்தி திணைக்களத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடல் நிகழ்வில் யாழ். மாவட்ட உதவி ஆணையாளர் இ.நிசாந்தன், பெரும்பாக உத்தியோகத்தர் மற்றும் சக உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். 2017 ஆம் ஆண்டுக்கான நிறைவு விழாவும் நடைபெற்றது. (இ-60)

## வீட்டுக் காணியில் மோட்டார் குண்டு

(கரணவாய்)

பற்றைகள் வளர்ந்து காணப்படும் வீட்டுக்காணி ஒன்றிலிருந்து வெடி பொருட்கள் கண்டு பிடிக்கப்பட் டுள்ளதாக வல்வெட்டித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்திற்கு பின்புறமாக உள்ள காணியில் வெடி பொருட்கள் இருப்பது தொடர்பில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வல்வெட்டித் துறை பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து பொலிஸார் சென்று பார்த்த போது கைக்குண்டு மோட்டார் குண்டு என்பன காணப்பட்டன.

அதனை மீட்பதற்கான நீதிமன்ற உத்தரவை பொலிஸார் பெற்றுள்ளனர். (இ-60)

## சுண்டுக்குளியில் அதிகாலை வீட்டிற்குள் நுழைந்து திருட்டு

### புதுவருட ஆராதனைக்குச் சென்று திரும்பியவருக்கு அதிர்ச்சி

(கரணவாய்)

புதுவருட ஆராதனைக்காகச் சென்றவரின் வீட்டில் நேற்று அதிகாலை திருட்டுச் சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மத்தியூஸ் வீதியிலுள்ள த.விஜயகுமார் என்பவரது வீட்டிலே இத்திருட்டு இடம் பெற்றுள்ளது. புதுவருடப் பிறப்பினை முன்னிட்டு வீட்டார் அதிகாலை 3 மணியளவில் ஆராதனைக்கு சென்று விட்டு பின்னர் வீட்டிற்கு வந்த போதே ஜன்னல் உடைந்து திருடப்பட்டமை தெரியவந்தது.

வீட்டில் இருந்த ஒரு சங்கிலி, ஒரு சோடி காப்பு, ஒரு மோதிரம், பெறுமதியான தொலைபேசி, பெறுமதியான கைக்கடிகாரம் என்பன திருடப்பட்டுள்ளன. இது தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. (இ-60)

## தரம்-7 முதல் உயர்தர மாணவர்களுக்கு இன்று முதல் பாடசாலை ஆரம்பம்

(யாழ்ப்பாணம் )

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் தரம் 7 முதல் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு இன்று (02-01-2018) பாடசாலை ஆரம்பமாகும். அத்துடன் 2018 இல்ல மெய்வல்லுநர் போட்டிக்கான தெரிவுக்கூட்டமும் நடைபெறும். அனைத்து மாணவர்களும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள் என அதிபர் அறிவித்துள்ளார். (இ)

## க.பொ.த.உயர்தரப் பெறுபேறுகள்-2017

**யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்**

கலைப்பிரிவு

த.சுஜந்தினி-3ஏ, ஆ.சருண்யா -2ஏபி,மோ.ரபீனா-2ஏபி,சி.சுகந்தா-ஏ2பி,வி.அஸ்மிதா-2பிசி, பா.கிருத்திகா-2பிசி,

**யா/கொக்குவில் இந்துக் கல்லூரி**

கலைப்பிரிவு

ய.சிந்துஜா-ஏ2சி, ரா.தாட்சாயினி-2பிசி,ரா.துசல்யா-2பிசி,ஜெ.ராம வர்மன்-ஏபிசி, ர.நிலாயினி-ஏபிசி, ப.கவிதாரணி-ஏபிஎஸ், கு.கல்பனா-ஏபிசி, வ.சித்திரா-ஏபிசி.

**யா/மாதகல்சென் யோசப் மகா வித்தியாலயம்**

கலைப்பிரிவு

வி.சாந்தரூபினி-3ஏ, பா.வினோபா-2ஏசி, எ.ஆன் மேரி தனேசிகா-பி2சி.

வர்த்தகப் பிரிவு

ர.தாரணி-பி2சி, கோ.கயாழஜனி-2சிஎஸ்.

வர்த்தகம்

சி.ஸ்ரீகௌசி-3ஏ, க.கோபிகா-ஏ2பி.

கலைப்பிரிவு

க.தமிழரசி-3ஏ, பி.மேரி சிந்துஜா-3ஏ, த.தரவ்கினி-ஏ2பி, ச.துஷாயினி-ஏபிசி, ச.காயத்திரி-3பி.

**யாழ்.சாவகச்சேரி இந்துக் கல்லூரி**

கணிதப் பிரிவு

த.சதுலக்சன்-3ஏ, நா. கோபிசங்கர்-3ஏ,ஜெ. ஜெயதாரணி-3ஏ,ந. வர்ணராஜ்-2ஏபி,மு.மதுராந்தகி-2ஏபி, கு.திலக்சன்-ஏ2பி, இ.விபானி-ஏ2பி, சி. இளங்குமரன்-ஏ2பி, உ.விதுஷன்-2ஏபி, சி.யாழினி-ஏபிசி, த.லக்சிகா-ஏபிசி, இ.பிரலன்சா-ஏபிசி, க.கஜீபன்-ஏ2சி, ச.சங்கர்ஜி-ஏ2சி,வ.யனுசன்-ஏ2சி, ச.விதுஸ்லா- ஏ2சி, யோ. பிந்துசன்-2பிசி,க.தர்சன்-பி2சி, இ. அபிநயா-ஏ2எஸ், யோ. அனோஜன்-பி2சி, த,யதுர்ஷா-பி2சி, ம.கீதானந்த்-பி2சி, மௌ. மைட்றேஜன்-பி2சி, இ. ரமணரூபன்-பி2சி,பா.தினுசன்-பிசிஎஸ்,இ.பிரதீப்-பிசிஎஸ், ஆ.சாரங்கன்-3சி, த.தசிதா-3சி, பு.மிதுலன்-3சி.

**யா/அச்சுவேலி மத்திய கல்லூரி**

கணிதப் பிரிவு

தி.திஜிதரன்-2ஏபி,ம. விதுர்சன்-2சிஎஸ், சி.கௌதமன்-சி2எஸ்.

உயிரியல் பிரிவு

சி.சிவலோஜி-பி2சி.

கலைப் பிரிவு

க.கிரிதரன்-ஏ2பி, சி.லவண்சிகா-2பிசி,சி.தனுபரன்-2பிசி

# ஊழல், மோசடி மன்னர்களுக்கு பெப்ரவரி 10இல் தக்க பதிலடி

## மக்களிடம் கோருகிறார் ஜே.வி.பியின் தலைவர் அநுர

(கொழும்பு)

நாட்டின் பொருளாதாரத்தை வீழ்த்தும் பாரிய மோசடிகளில் ஈடுபட்ட ஊழல்வாதிகளுக்கு எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பாடம் புகட்ட வேண்டும் என்று ஜே.வி.பி.தெரிவித்துள்ளது.

எயார் லங்கா மோசடி போன்று பாரிய மோசடிகள் தொடர்பில்விசாரணை ஆணைக் குழுக்களின் அறிக்கைகள் மூடி மறைக்கப்பட்டதைப் போன்று இலங்கை மத்திய வங்கியின் மோசடி தொடர்பிலான விசாரணை அறிக்கையும்மூடிமறைக்கப்படக்கூடாது என்றும் ஜே.வி.பி. வலியுறுத்தியுள்ளது.

ஜே.பி.வியின் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பு பத்தரமுல்லையிலுள்ள கட்சியின் தலைமையகத்தில் நேற்று இடம் பெற்றது.

இதில் கலந்துகொண்ட அக்கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க கருத்து வெளியிட்டார்.

"எமது நாட்டின் அபிவிருத்தியை அழிக்கின்ற படலத்திற்கு சமானமானதே இந்த மோசடியாகும். இந்த மோசடிகளுக்கு குரல் எழுப்புவதைப் போன்று அதில் ஈடுபடுகின்றவர்களுக்கு தண்டனை பெற்றுக்கொடுக்கும் போராட்டம் பரிணாமமடைய வேண்டும். விசேடமாக மத்திய வங்கி மோசடியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தொடர்புபட்டிருப்பதாக காரணங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அதேபோல மத்திய வங்கியின் ஆணைக்குழுவுக்கு முன்பாக அரச அமைச்சர்கள் உட்பட பிரதமரும் அழைக்கப்பட்டிருந்தார்.




நல்லாட்சி அரசாங்கத்தை அமைத்து சில நாட்களில் இடம்பெற்றதே இந்த மோசடியாகும். எனவே ஒருபோதும் மூடிமறைப்பதற்கு இடமளிக்காமல் குற்றவாளிகளுக்கு தண்டனையை வழங்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். ஜே.வி.பி. என்ற வகையில் நாங்கள் குறைந்த பட்சமாக் பிரதான இரண்டு, மூன்று மோசடி சம்பவங்களில் மோசடியாளர்களுக்காவது தண்டனையைப் பெற்றுக்கொடுக்க தலையீடு செய்கிறோம். ஒருபோதும் கைவிடப்படாத கடமையாக இதனை பார்க்கின்றோம்.

நாட்டுமக்களுக்கு ஒன்றை கூற விரும்புகிறோம். ஒவ்வொரு இடங்களிலும் சென்று மோசடிகள் பற்றி பேசுகிறீர்கள். ஒவ்வொரு இடங்களிலும் மோசடியாளர்கள் மீதான விமர்சனம், அதுகுறித்து எழுதுகிறீர்கள். இந்த மோசடியாளர்களுக்கு எதிராக மக்களிடம் இருக்கின்ற பலமான ஆயுதத்தை பயன்படுத்தும் தினமாக பெப்ரவரி 10ஆம் திகதியை பார்க்கின்றோம். மோசடியாளர்கள், அவர்களைப் பாதுகாக்கின்ற கும்பல் மற்றும் சட்டத்தின் நிழலில் பாதுகாப்பை பெறுகின்ற ஊழல், மோசடியாளர்களுக்கு எதிர்காலத்திலும் அவற்றை செய்யாமலிருக்கும் வகையில் பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி சிறந்த பாடமொன்றை கற்பிக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். (இ-7)

## சட்டவிரோதமாக இயங்கிவந்த வானொலிச் சேவை சுற்றிவளைப்பு



(கொழும்பு)

கண்டி மாவட்டத்தின், தெரணியகல நகரில் சட்டவிரோதமாக இயங்கிவந்த வானொலிச் சேவை நிலையமொன்று இலங்கை தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினரால்நேற்று சுற்றிவளைக்கப்பட்டது.

இலங்கை தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் வழங்கப்படும் அனுமதிப்பத்திரமின்றி, இலங்கை வானொலி சேவை அலைக்கற்றை சட்டத்திற்கு முரணாக, இந்த வானொலி சேவை இயங்கியுள்ளமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, நவீன சோதனை உபகரணங்களைப் பயன்படுத்தி, இந்த வானொலி சேவை நிறுவனத்தை ஆணைக்குழுவினர் நேற்று சுற்றி வளைத்து, வானொலி சேவையை முன்னெடுத்துச் செல்வதற்குப் பயன்படுத்தப்பட்ட தொழில்நுட்ப உபகரணங்கள் உள்ளிட்ட அனைத்துப் பொருட்களையும்கைப்பற்றியுள்ளனர்.

இதேவேளை சட்டவிரோத வானொலி சேவையை முன்னெடுத்துச் சென்ற நான்கு பேர், குற்றப் புலனாய்வு திணைக்களத் தினரின் உதவியுடன் கைது செய்யப்பட்டுள்ளனர். (இ-8)

## துப்பாக்கியுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

திஸ்ஸமஹாராம, வீரவில கரபாதிய பகுதியில் சட்டவிரோதமான முறையில் துப்பாக்கியை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில், ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே, சந்தேக நபரை நேற்று கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து, 20 கஞ்சா செடிகளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேக நபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளதுடன், மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (இ-8)

## புத்தாண்டை மணல் சிற்பத்தால் வரவேற்ற சுதர்சன் பட்நாயக்




(புவனேஸ்வர்)

2018ஆம் ஆண்டை மணல் சிற்ப கலைஞர் சுதர்சன் பட்நாயக் பூரி கடற்கரையில்தனது எழில்மிகும்மணல் ஓவியத்தால் வரவேற்றுள்ளார்.

இந்தியாவின் ஒடிசா மாநிலத்தை சேர்ந்த சுதர்சன் பட்நாயக் மகிழ்ச்சியான சம்பவங்கள் மற்றும் துக்க நிகழ்வுகளை பூரி கடற்கரையில் மணல் சிற்பங்களாக செதுக்கி மக்கள் மனதில் பதிய வைத்து வருகிறார்.

தேசிய அளவில் தலைசிறந்த மணல் சிற்ப கலைஞராக திகழும் இவர், சர்வதேச அளவில் பல நாடுகளில் நடைபெற்ற போட்டிகளிலும் பங்கேற்று பரிசுகளை வென்றுள்ளார்.

புத்தாண்டையொட்டி பூரி கடற்கரையில் 30 அடி உயர ஜெகநாதர் சிற்பத்தை நேற்று அவர் உருவாக்கினார்.

இந்த சிற்பத்தின் மூலம் இவர் புதிய சாதனை படைத்துள்ளார்.

இந்நிலையில், 2018 ஆம் ஆண்டை பூரி கடற்கரையில் தனது எழில்மிகும் மணல் சிற்பத்தால் வரவேற்றுள்ளார்.

இந்த இரு சிற்பங்களையும் ஒடிசா மக்கள் மட்டுமின்றி, வெளிமாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த மக்களும் கண்டுகளித்து வருகின்றனர். (இ)


## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்:உத்தரம்<br>கி.பா: 43 செவ் 12 இல்<br>உயரம்: 165cm<br>தகைமை/தொழில்: BA ஆசிரியர்<br>தொ.இ: G/5686 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் செவ் 1 இல்<br>தகைமை/தொழில்: கணனி பொறியியளாளர் சிங்கப்பூர்<br>தொ.இ: B/7298 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: BSc/விரிவுரையாளர்<br>தொ.இ: G/7213 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்:சதயம்<br>தகைமை/தொழில் O/L/வெளிநாடு மட்டும்<br>தொ.இ: B/7300 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்:உத்தராடம் சூரி,செவ் 12இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L/ சொந்ததொழில்<br>தொ.இ: G/6402 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 14 செவ் 12 இல்<br>உயரம்: 6'1"<br>தகைமை/தொழில்: Diploma/ அவுஸ்ரேலிய குடியுரிமை<br>தொ.இ: B/5372 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்:ரேவதி<br>கி.பா: 25<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:LLB<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/6404 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 18<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: சொந்த தொழில்<br>தொ.இ: B/5373 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# உள்ளூராட்சி தேர்தல் முறைப்பாட்டு அலுவலகம் வவுனியாவில் திறப்பு

(குருமன்காடு)

எதிர்வரும்பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பாக வவுனியா மாவட்ட முறைப்பாடுகளைப் பதிவு செய்வதற்காக வவுனியா மாவட்ட செயகலக த்தில் முறைப்பாட்டு அலுவலகம் (உதவி மாவட்ட செயலாளர் அலுவலக அறை) திறந்து வைக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பான முறைப்பாடுகளை குறித்த அலுவலகத்தில் நேரடியாகவோ அல்லது தொலைபேசி மற்றும் மின்னஞ்சல் முகவரிக்கு தெரியப்படுத்த முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. தொலைபேசி இல. 024 222 2138, தொலைநகல் 024 222 2138, மின்னஞ்சல் முகவரி vavvunia. complaint gmail.com ஆகும். (2-250)

# காட்டு யானைகளால் வேலங்குளத்தில் வாழ்வாதார பயிர்ச்செய்கை அழிப்பு

வவுனியா வடக்கு நெடுங்கேணி வேலங்குள கிராமத்தில் நள்ளிரவு வேளைகளில் யானைகள் புகுந்து பயன் தரும் மரங்களான தென்னை, வாழை, மா, பலா போன்றவற்றை சேதப்படுத்தியும் அழித்தும் வருகின்றன. அதேநேரம் கிராமத்தில் இருக்கின்ற வீடுகளையும் தாக்கி உடைத்து வருகின்றன.

இதனால் மக்கள் அச்சத்துடன் வாழ்வதாக தெரிவிக்கப்படுகின்றது. வனஜீவராசிகள் திணைக்களத்தினால்விரைவாக யானை பாதுகாப்பு வேலி போட்டுத்தரும்படி பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை முல்லைத்தீவு தென்னியங்குளம் பகுதியில் காட்டு யானைகள் உட்புகுந்து நெற்பயிர்களை அழித்து வருகின்றன.

முல்லைத்தீவு, துணுக்காய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட தென்னியன்குளம் பகுதியில் தற்போது காட்டு யானைகளின் தொல்லை அதிகளவிலே காணப்படுகின்றது.

குறிப்பாக இப்பகுதியில் காட்டு யானைகள் பெருமளவான பயிர்ச்செய்கைகளையும் பயன்தரு மரங்களையும் அழித்து வருகின்றன.

நேற்று முன்தினம் இரவு குடிமனையினுள் புகுந்த யானைகள் நெற்செய்கைகளை அழித்து நாசம் செய்துள்ளன. இதனால் விவசாயிகள் நட்டத்தை எதிர்கொண்டுள்ளனர். (2-315)

# புதுவருட வியாபாரம் பாதிப்பு

## நகரசபை வாக்குறுதி வழங்கியது போல் பழைய இடத்தில் இடம் வழங்குங்கள்

### வவுனியா அங்காடி வியாபாரிகள் வேண்டுகோள்

(குருமன்காடு)

புதுவருடத்தை முன்னிட்டு நடைபெற்றுவரும் வியாபாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக வவுனியா அங்காடி வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக நகர சபைக்கு சொந்தமான இடத்தில் வியாபாரம் செய்து வந்த அங்காடி வியாபாரிகள் துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் அமைப்பதற்காக அந்த இடத்தில் இருந்து வெளியேற்றப்பட்டு நகர சபைக்கு முன்பாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ள நிலையில் வீதி ஓரங்களில் புதிதாக வியாபாரம் செய்வதற்கு வேறுநபர்களுக்குவவுனியா நகரசபை அனுமதி வழங்கியுள்ளதால் புதுவருட தினத்திற்கான தங்களின் வியாபாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக குற்றஞ்சாட்டியுள்ளனர். அத்துடன் நகரசபை வாக்குறுதி வழங்கியது போல் மிக விரைவாக பழைய இடத்தை தங்களுக்கு மீண்டும் வழங்க வேண்டும் என்றும் அவர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.(2-281-250)

# வவு.மத்திய பேருந்து நிலையம் மூடப்பட்டது; பொலிஸார் குவிப்பு



(பனிக்கன்குளம்)

வவுனியா பேருந்து நிலையத்தின் இரண்டு பக்க நுழைவாயில்களும் பரல்கள் கொண்டு நேற்று தொடக்கம் பேருந்துகள் உட்செல்வதற்கு தடை செய்யப்பட்டு பேருந்து நிலையத்திற்கு செல்வதற்கான பாதை மூடப்பட்டது.

இந்த நடவடிக்கை நேற்றையதினம் வவுனியா நகர சபைச் செயலாளர் எஸ். தயாபரனினால்முன்னெடுக்கப்பட்டது.

அத்துடன் மூடப் பட்டிருந்த பாதையில் பொலிஸார் குவிக்கப்பட்டு கண்காணிப்பில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.


இவ்விடயம் தொடர்பாக வவுனியா நகரசபை செயலாளரிடம் வினவிய போது,

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் பணிப்புரைக்கமைய வவுனியா நகரசபைக்குரிய பேருந்து நிலையம் நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணியில் இருந்து மூடப்பட்டுள்ளது.

பொது மக்கள் தமது பிரயாணங்களை புதிய பேருந்து நிலையத்தில் இருந்து மேற்கொள்ளுமாறு அவர் கேட்டுக் கொண்டார். (2-281)




# குடிநீர்த் திட்டத்தை நடைமுறைப்படுத்த மின்சாரம் வழங்குவதில் இழுத்தடிப்பு



(மல்லாவி)

முல்லைத்தீவு, துணுக்காய் கோட்டைகட்டியகுளம், அம்பலப்பெருமாள்குளம் ஆகிய கிராமங்களுக்கான சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்த் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு மின்சாரம்வழங்குவதில் அதிகாரிகள் இழுத்தடிப்புகளை மேற்கொண்டு வருவதாக இப்பகுதி பொது அமைப்புகள் தெரிவிக்கின்றன. ஐம்பது வரையான குடும்பங்கள் குடிநீரைப் பெற்றுக் கொள்வதில் நெருக்கடியை எதிர்கொண்ட நிலையில் கொழும்பில் இருந்து வருகை தந்த நிறுவனம் ரூபா 23 இலட்சம் வரையான நிதியை செலவு செய்து குறித்த குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தை உருவாக்கியுள்ள நிலையில் குறித்த நிலையத்திற்கு முன்பாக இருந்து மின்சாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு துணுக்காய் பிரதேச செயலகத்திற்கு சென்றபோது துணுக்காய் பிரதேச செயலகம் மின்சாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான ஒழுங்குகளை மேற்கொள்வில்லை எனவும் குறிப்பாக இக் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைந்துள்ள காணியை பிரதேச செயலகம் உறுதிப்படுத்துவதன் மூலமே மின்சார சபையினரால் மின்சாரம்வழங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். ஆனால் பிரதேச செயலகம் காணியை உறுதிப்படுத்துவதில் இழுத்தடிப்புகளை மேற்கொண்டு வருவதாகவும் துணுக்காய் பிரதேச செயலகம் காணியை உறுதிப்படுத்தி மின்சாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு வழியேற்படுத்துமாறு இப்பகுதி பொது அமைப்புகள் வலியுறுத்துகின்றன. குறித்த குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைந்துள்ள பகுதி அரச காணியில் அமைந்துள்ளது எனவும் பொது அமைப்புகள் தெரிவிக்கின்றன. (2-15)

# காணி வழங்கப்படுமிடத்து பேருந்து நிலையம் அமைக்கப்படும்

### புதுக்குடியிருப்பு பிரதேசசபை செயலாளர் தெரிவிப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பகுதியில் நவீன வசதிகளைக்கொண்ட பேருந்து நிலையம் ஒன்றை அமைக்குமாறு பிரதேச வர்த்தகர்கள், பொதுமக்கள் ஆகியோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் உப நகரங்களில் ஒன்றாகக் காணப்படும் ஒட்டுசுட்டான் பகுதியில்போக்குவரத்து சேவைகளின் இணைப்பு மையமாகக் காணப்படுகின்றது.

இந்நிலையில் ஒட்டுசுட்டான் பகுதியில் பேருந்து நிலையம் ஒன்று அமைக்கப்படாமையால் பயணிகளும் பொதுமக்களும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்நிலையில் இப்பகுதியில்பேருந்து நிலையம்ஒன்றை அமைத்துத்தருமாறு பல்வேறு தரப்புக்களும் கோரிக்கை விடுத்துள்ளன.

இவ்விடயம் தொடர்பாக புதுக்குடியிருப்பு பிரதேச சபை செயலாளருடன் தொடர்பு கொண்டு வினவியபோது இப்பகுதியில் பேருந்து நிலையம் ஒன்றை அமைப்பதற்கு காணி கோரப்பட்டுள்ளதாகவும் அதற்கான காணி வழங்கப்படுமிடத்து பேருந்து நிலையத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமென தெரிவித்தார். (2-315)

# 12 நீர்ப்பாசனக்குளங்களின் கீழ்

## 11 ஆயிரத்து 283 நிலப்பரப்பில் இவ்வாண்டு காலபோக நெற்செய்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழுள்ள 12 நீர்ப்பாசனக்குளங்களின் கீழும் 11 ஆயிரத்து 283 நிலப்பரப்பில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் வவுனிக்குளம் நீர்ப்பாசனத்திணைக்களத்திற்குட்பட்ட 12 குளங்களின் கீழும்11ஆயிரத்து 283 ஏக்கர நிலப்பரப்பில் இவ்வாண்டுகாலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதாவது வவுனிக்குளத்தின் கீழ் 6 ஆறாயிரத்து 60 ஏக்கரும், தென்னியன்குளத்தின் கீழ் 850 ஏக்கர், ஐயன்கன்குளத்தின் கீழ் 952 ஏக்கரும், அம்பலப்பெருமாள் குளத்தின் கீழ் 623 ஏக்கரும், கல்விளாங்குளத்தின் கீழ் 400 ஏக்கரும், மருதன்குளத்தின் கீழ் 450 ஏக்கரும், பழைய முறிகண்டிக் குளத்தின் கீழ் 356 ஏக்கரும் கோட்டைகட்டியகுளத்தின் கீழ் 405 ஏக்கரும் கொல்லவிளான் குளத்தின் கீழ் 262 ஏக்கரும், மல்லாவிக்குளத்தின் கீழ் 325 ஏக்கரும் தேறாங்கண்டல் குளத்தின் கீழ் 300 ஏக்கரும் பனங்காமம் குளத்தின் கீழ் 300 ஏக்கருமர்க மொத்தம் 11 ஆயிரத்து 283 ஏக்கர் நிலப்பரப்பில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நீர்ப்பாசனத்திணைக்கள தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(2-315)

# பெண் மதுவரிப் பரிசோதகர் இன்மையால்

## குற்றச் செயல்களில் ஈடுபடுகின்ற பெண்களை கைது செய்வதில் பாரிய பிரச்சினை

(கண்டாவளை)

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இயங்கி வருகின்ற மதுவரித்திணைக்களங்களில் பெண் மதுவரிப் பரிசோதகர்கள் இல்லாத நிலையில் குற்றச் செயல்களில் ஈடுபடுகின்ற பெண்களை கைது செய்வதில் பல்வேறு பிரச்சினைகள் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் யுத்தத்தின் பின்னரான மீள்குடியமர்வையடுத்து பின்தங்கிய கிராமங்களில் சட்டவிரோத கசிப்பு உற்பத்திகள் அதிகளவில் காணப்படுகின்றன. இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு பொலிஸாரும் மதுவரித் திணைக்கள அதிகாரிகளும் விசேட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில்பின்தங்கிய பிரதேசங்களில் இவ்வாறான சட்டவிரோதச் செயற்பாடுகளில் பெண்கள் அதிகளவில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறு குற்றச் செயல்களில் ஈடுபடுகின்ற பெண்களை கைது செய்வதற்கு பொலிஸ் நிலையங்களில் பெண் பொலிஸார் இருக்கின்ற போதும், மதுவரித்திணைக்களங்களில் பெண் மதுவரிப்பரிசோதகர்கள் இன்மையால் இவ்வாறான பெண்களைக் கைது செய்வதில் பல்வேறுபட்ட பிரச்சினைகள் காணப்படுகின்றன.

தற்போது வவுனியா அலுவலகத்தில் மட்டும் பெண் உத்தியோகத்தர் இருப்பதாகவும் அவர் மூலமாகவே இவ்வாறான நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டியிருப்பதாகவும் இவ்வாறு குற்றச்செயல்களில் ஈடுபட்டு நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் குறிப்பிட்ட சில பெண்களுக்கு எதிராக நீதிமன்றினால் பிறப்பிக்கப்பட்டிருக்கின்ற பிடியாணைகளை நிறைவேற்றுவதில் பாரிய பிரச்சினைகள் காணப்படுவதாகவும் மதுவரித் திணைக்களம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.(2-315)

# இரண்டு வெவ்வேறு குற்றச் சம்பவங்களில் பத்து மணி நேரத்தினுள் 8 பேர் கைதாகினர்

(மல்லாவி)

தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் கடந்த 10 மணி நேரத்திற்குள் 2 வெவ்வேறு குற்றச் சம்பவங்களின் போது 8 சந்தேக நபரைக் கைது செய்ததுடன் தடயப் பொருட்களையும் கைப்பற்றியுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையத்தின் பதில் பொறுப்பதிகாரி நூவான் ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.


இச்சம்பவம் கடந்த 30 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் நான்கு மணி தொடக்கம் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 2 மணி வரையான காலப்பகுதியில் நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, கடந்த 30 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் நான்கு மணியளவில் வட்டக்கச்சி கல்மடு கிராமத்தில் விற்பனை செய்யும் நோக்கோடு தமது உடைமையில் 15 லீற்றர் கசிப்பை வைத்திருந்த 3 சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளதுடன், கசிப்புக் குடிப்பதற்காக வந்திருந்த 5 சந்தேக நபர்களையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதேவேளை, நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இரண்டு மணியளவில் நெடுங்கேணியில் உள்ள அரச காட்டுப் பகுதியில் இருந்து சட்டவிரோதமான முறையில் வெட்டப்பட்ட சுமார் 10 இலட்சம் ரூபா பெறுமதியான 14 முதிரை மரக் குற்றிகளை மகேந்திர பிக்கப் வாகனத்தில் ஏற்றி யாழ்ப்பாணத்திற்கு கடத்திச் சென்ற போது பொலிஸார் தம்மை துரத்தி வரும் தகவல் கிடைத்து விரைவாக தப்பிச் சென்ற பிக்கப் வாகனத்தில் சென்றோர் சுண்டிக்குளம் சந்திப்பகுதிக்கு அண்மையாக வேகக் கட்டுப்பாட்டை இழந்து தடம்புரண்டு விபத்துக்குள்ளான நிலையில், மரக் குற்றிகளை அந்த இடத்திலேயே விட்டுவிட்டு விபத்துக்குள்ளான வாகனத்துடன், சாரதி படுகாயமடைந்த நிலையில் தப்பிச் சென்றுள்ளார்.

இந்நிலையில், சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் மரக்குற்றிகளை கைப்பற்றியுள்ளதுடன் தப்பிச் சென்ற பிக்கப் வாகனம்,அதன் சாரதி தொடர்பாகவும் தகவல்களை திரட்டி வருகின்றனர்.

மேற்படி இரண்டு சம்பவங்களின் போதும், கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்கள் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருப்பதுடன், கைதான சந்தேக நபர்களிடம் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் விசாரணைகளின் பின்னர் தடயப் பொருட்களுடன் சந்தேக நபர்களை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரி நூவான் ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார். (2-15)

# வற்றாப்பளை- புதுக்குடியிருப்பு வீதி மக்கள் பாவனைக்கு நேற்று திறப்பு



(பனிக்கன்குளம்)

கேப்பாப்பிலவு இராணுவ முகாம் அமைத்து தடை செய்யப்பட்ட வற்றாப்பளை- புதுக்குடியிருப்பு வீதி மக்கள் பாவனைக்கு திறந்துவிடப் பட்டுள்ளது.

கேப்பாப்பிலவு இராணுவ முகாம் அமைத்து தடைசெய்யப்பட்ட வற்றாப்பளை- புதுக்குடியிருப்பு வீதி நேற்று அதிகாலை 5 மணிமுதல் மக்கள் பாவனைக்கு திறந்து விடப்பட்டுள்ளது.

மிக நீண்ட காலமாக மக்கள் கோரிக்கையாக இருந்த குறித்த வீதி நேற்று திறந்துவிடப்பட்டுள்ளது.

வற்றாப்பளை-புதுக்குடியிருப்பு வீதியானது யுத்தம் முடிவடைந்து மக்கள் மீள் குடியேறியபோது கேப்பாப்பிலவு கிராமம் இராணுவத்தால் கையடக்கப்படுத்தப்பட்டிருந்து. அத்தோடு குறித்த வீதியும் சுமார் 1.5 கிலோ மீற்றர் வரை மறிக்கப்பட்டு இதற்கு மாற்றீடாக சுமார் 4 கிலோ மீற்றர் காட்டு வழியாக புதிதாக பாதை அமைக்கப்பட்டது.

இதனால் மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்து வந்தோடு இந்தப் பாதையை திறந்து விடுமாறு கோரிய நிலையில் கேப்பாப்பிலவு மக்கள் தமது நிலம் கோரி போராடி 307 ஆவது நாள் அவர்களது காணிகளுக்குச் செல்ல இராணுவம் அனுமதித்தோடு வீதியும் மக்கள் பாவனைக்காக திறந்து விடப்பட்டுள்ளது.

இருப்பினும் கேப்பாப்பிலவில் மீதமுள்ள 100 குடும்பங்களுக்கான 181ஏக்கர்காணியை விடுவிக்குமாறு மக்கள் தொடர்ந்து போராடி வருவது குறிப்பிடத்தக்கது. (2-281)

# காணாமலாக்கப்பட்டோரின் பிரச்சினையை தேர்தல் பிரசாரங்களில் தவிர்த்துக்கொள்ளுங்கள்

## அரசியல் கட்சிகளிடம் உறவினர்கள் வலியுறுத்து

(பரந்தன்)

காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களுக்கு எவ்வித தீர்வையும் பெற்றுத்தாரதவர்கள் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இந்த விடயத்தை பிரசாரத்திற்குப் பயன்படுத்துவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என கிளிநொச்சி வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் வடக்கு-கிழக்கு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தினதும் கிளிநொச்சி சங்கத்தினதும் தலைவியுமான யோகராசா கனகரஞ்சனி ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு எட்டு வருடங்களை கடந்த நிலையிலும் காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களுக்கு எவ்வித தீர்வும் கிடைக்கவில்லை, நாங்கள் நம்பிய எங்களது பிரதிநிதிகளாலும் எங்களுக்கு ஏமாற்றம். இந்த நிலையில் நாங்கள் எங்களது பிரச்சினைகளுக்காக வீதியில் இறங்கிப் போராட்டத்தை ஆரம்பித்து நேற்றுடன் 316 ஆவது நாட்கள்.

இந்த 316 ஆவது நாளாகவும் இரவு-பகலாக நாங்கள் பல்வேறு நெருக் கடிகளுக்கு மத்தியில் வீதி யில் போராடி வருகின்றோம். நாங்கள் எல்லோராலும் கைவிடப்பட்டுள்ளோம்.

இந்த புதிய வருடத்திலாவது எங்களது விடயத்தில் அரசியல் தரப்பினர்கள், அக்கறை செலுத்த வேண்டும், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு நாட்டின் தலைவர் மற்றும் பிரதமர் ஆகியோர் உரிய பதிலை வழங்க வேண்டும், அதற்கு தமிழ் தலைமைகள் அழுத்தம் கொடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்த அவர் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வினைப் பெற்றுத்தர முடியாதவர்கள் எங்களின் பிரச்சினையை தேர்தல் காலங்களில் பிரசாரத்திற்காகப் பயன்படுத்தக் கூடாது. அதனை காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களான நாங்கள் விரும்பவுமில்லை. ஏற்றுக் கொள்ளவும் மாட்டோம் எனவும் தெரிவித்தார். (2-312)

# டாடா ஹன்டர் வாகனம் -மோ.சைக்கிள் விபத்து ; இளைஞர்கள் படுகாயம்!

(மல்லாவி)

டாடா ஹன்டர் ரக வாகனம் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்த நிலையில் முன்னால் பயணித்த மோட்டார் சைக்கிள் மீது மோதுண்ட விபத்துச் சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர்கள் இருவர் படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு புதுக்குடியிருப்பு பிரதேச வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 6.30 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

புதுக்குடியிருப்பு நகரப் பகுதியில் இருந்து முல்லைத்தீவு நோக்கிச் செல்லும் வீதியிலுள்ள சிவன் ஆலயத்திற்கு அண்மையாக முன்னால் சென்ற மோட்டார் சைக்கிளை பின்னால் பயணித்த டாடா ரக ஹன்டர் வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்த நிலையில் மோதி விபத்துக்குள்ளான நிலையில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர்கள் இருவர் தலைப் பகுதி உட்பட கை, கால்களில் படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு புதுக்குடியிருப்பு பிரதேச வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, விபத்தினை ஏற்படுத்திய ஹன்டர் வாகனம் சம்பவ இடத்தில் இருந்து தப்பிச் சென்ற நிலையில் பிரதேச இளைஞர்கள் மோட்டார் சைக்கிளில் துரத்திச் சென்று மறித்து புதுக்குடியிருப்பு பொலிஸாரிம் ஒப்படைத்துள்ளனர்.

இச்சம்பவத்தின் போது, புதுக்குடியிருப்பு 7 ஆம் வட்டாரம் சிவநகரைச் சேர்ந்த எஸ்.சதீஷ்வரன் (வயது-36), புதுக்குடியிருப்பு ஆனந்தபுரம் பகுதியைச் சேர்ந்த எஸ். நிதர்சன் (வயது-18) ஆகியோரே படுகாயமடைந்தவராவர்.

தகவல் கிடைத்து சம்பவ இடத்துக்குச் சென்ற புதுக்குடியிருப்பு பொலிஸார் விபத்துக்குள்ளான வாகனங்களை மீட்டு பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றதுடன், ஹன்டர் ரக வாகனத்தின் சாரதியை கைது செய்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (2-15)

## இ.போ.ச. ஊழியர்கள் பணிப்பகிஷ்கரிப்பு

# வவுனியா பழைய பேருந்து மூடப்பட்டமையை கண்டித்து வர்த்தகர்கள் கடைகளை மூடி கறுப்புக்கொடி கட்டி எதிர்ப்பு

(குருமன்காடு)

வவுனியாவில் 195 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட புதிய பேருந்து நிலையத்தில் இருந்து தனியார் மற்றும் இ.போ.ச. பேருந்துகள் சேவைகளை முன்னெடுக்குமாறு வடக்கு மாகாண முதலமைச்சர் உத்திரவிட்டமையை கண்டித்து வடக்கு மாகாண இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்கள் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

புதிய பேருந்து நிலையமானது கடந்த ஒருவருட காலமாக செயற்படாமல் உள்ள நிலையில் நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணியில் இருந்து பழைய பேருந்து நிலையத்தை மூடி புதிய பேருந்து நிலையத்திற்கு அனைத்து பேருந்து சேவைகளும் செல்ல வேண்டும் என முதலமைச்சர் உத்தரவிட்டிருந்தார்.

இந் நிலையில் நள்ளிரவு 12 மணிக்கு வவுனியா நகர சபை செயலாளர் மற்றும் பொலிஸார் இணைந்து பழைய பேருந்து நிலையத்தை பரல்களைக் கொண்டு பேருந்துகள் உள்செல்ல முடியாதவாறு மூடியிருந்தனர்.

இந் நிலையில் தாம் நீண்ட காலமாக பயன்படுத்திய பழைய பேருந்து நிலையத்தை மூடியமைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் வடக்கு மாகாணம் பூராகவும் இலங்கை போக்குவரத்துச் சபையின் ஊழியர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை வவுனியா பழைய பேருந்து நிலையம் மூடப்பட்டமையை கண்டித்த அதனைச் சூழ இருந்த வர்த்தகர்கள் கடைகளை மூடியும் கறுப்புக்கொடிகளை கட்டியும் தமது எதிர்ப்பை தெரிவித்துள்ளனர்.

எனினும் இன்றைய தினம் முதலாம் தவணைக்காக பாடசாலை ஆரம்பமாகவுள்ள நிலையில் தையலகங்களை நடத்தும் வர்த்தகர்கள் மாணவர்களின் நலன்கருதி கடைகளை திறந்திருந்ததுடன் கடைகளை மூடுமாறு தெரிவித்த வர்த்தகர்களுடன் முரண்பாட்டிலும் ஈடுபட்டிருந்தனர்.

இந் நிலையில் தனியார் பேருந்து உரிமையாளர்கள் பயணிகளின் நலன் கருதி பழைய பேருந்து நிலையத்தில் இருந்து புதிய பேருந்து நிலையம் வரை இலவச பேருந்து சேவையை முன்னெடுத்துள்ளதுடன் வடக்கு மாகாணத்திற்கான அனைத்து சேவைகளையும் அதிகரித்துள்ளனர்.

இதேவேளை அறிவித்தல்கள் பொதுமக்களுக்கு போதுமானதாகக் கிடைக்காமையினால் பயணத்தை மேற்கொள்ள வந்த பயணிகள் புதிய பேருந்து நிலையத்தில் இருந்து அனைத்து தனியார் சேவைகளும் ஈடுபட்டு வருவதனால் சிரமத்தை எதிர்கொண்டிருந்தனர்.

இந் நிலையில் இன்றைய தினம் இ.போ.ச. பேருந்துகள் பணிபகிஷ்கரிப்பில் ஈடுபடும் பட்சத்தில் பருவச்சீட்டுக்களை பெற்றுள்ள பாடசாலைக்கு செல்லும் மாணவர்கள் தனியார் பேருந்துகளில் இலவசமாகப் பயணிக்க முடியும் என வவுனியா மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் எஸ். ரி.இராஜேஸ்வரன் தெரிவித்தார். (2-250)

# நெத்தலியாற்று காட்டில் இயங்கிய கசிப்பு நிலையம் சுற்றிவளைப்பு

(மல்லாவி)

தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள நெத்தலியாற்றுக் காட்டுப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையத்தை சுற்றி வளைத்த பொலிஸார் கசிப்பு 60. லீற்றரையும், கசிப்புக் கோட 400 லீற்றரையும் கைப்பற்றியதுடன் சம்பவ இடத்தில் வைத்து 2 சந்தேக நபர்களைக் கைது செய்ததுடன் கசிப்பு உற்பத்தி நிலையத்தையும் நிர்மூலமாக்கியுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரி நூவான் தர்சனா தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை எட்டு மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

தருமபுரம் பொலிஸ் நிலையத்திற்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து தருமபுரம் நெத்தலியாற்றுப் காட்டுப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் இய்ங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையத்தை சுற்றி வளைத்து கசிப்பு காய்ச்சிக் கொண்டிருந்த நிலையில் தடயப் பொருட்களை கைப்பற்றிய பின்னர் கசிப்பு உற்பத்தி நிலையத்தை நிர்மூலமாக்கியதுடன், சந்தேகத்தின் பேரில் சம்பவ இடத்தில் வைத்து இரண்டு சந்தேக நபர்களையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

விசாரணைகளின் பின்னர் தடயப் பொருட்களுடன் சந்தேக நபர்களை கிளிநொச்சி மாவட்ட நீதமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரி நூவான் தர்சனா தெரிவித்துள்ளார். (2-15)



கேப்பாப்பிலவு பிள்ளையார் ஆலயத்தில் இராணுவத்தினரின் ஏற்பாட்டில் நேற்று பொங்கல் பொங்கி விசேட வழிபாடு நடைபெற்றதைப் படங்களில் காணலாம்.

(படங்கள்:- பனிக்கன்குளம் செய்தியாளர்)

# 12 கிராமங்களில் புனரமைக்கப்பட்ட ஏற்று நீர்ப்பாசனத்திட்டம் செயலிழப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு வவுனிக்குளத்தின் கீழுள்ள 12 கிராமங்களில் பல மில்லின் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட ஏற்றுநீர்ப்பாசனத் திட்டங்கள் செயலிழந்த நிலையில் காணப்படுகின்றன.


முல்லைத்தீவு மாவட்டத்தில் பாரிய நீர்ப்பாசனக் குளங்களில் ஒன்றான வவுனிக்குளத்தின் கீழான குடியேற்றத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போது ஏற்று நீர்ப்பாசனத்திட்டங்களும் அறிமுகப்படுத்தப் பட்டிருந்தன.

யுத்த காலத்தில் இவை முழுமையாக சேதமடைந்து கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டன.

யுத்தம் முடிவடைந்த பின்னர் மக்கள் மீள்குடியேறியதையடுத்து செயலிழந்த ஏற்று நீர்ப்பாசனத்திட்டங்கள் மீள் புனரமைப்புச் செய்யப்பட்டு விவசாயிகளிடம் கையளிக்கப்பட்டு அவை கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டன.

அதாவது செல்வபுரம், பாண்டியன்குளம், கரும்புள்ளியான், விநாயகபுரம், பாலிநகர், கறுப்பிகுளம், புகழேந்திநகர், பாரதிநகர், திருநகர், வளநகர், கொத்தம்பியாகுளம் ஆகிய பகுதிகளில் 470 விவசாயக் குடும்பங்கள் நன்மையடையக்கூடிய நிலையில் மேற்கொள்ளப்பட்ட 12 ஏற்று நீர்ப்பாசனத்திட்டங்கள இவ்வாறு செயலிழந்த நிலையில் காணப் படுகின்றன. (2-315)

# மகத்துவம் நிறைந்த வல்லாரைக் கீரையின் மருத்துவ குணங்கள்





வல்லாரை உண்பதும் நன்று, நல்லாரைக் காண்பதும் நன்று என்ற முதுமொழிக்கு ஏற்ப சர்வ வல்லமை மிக்க கீரையாக வல்லாரைக் கீரை விளங்குகிறது. இந்தக் கீரையுடன் பால் கலந்து அரைத்து சாப்பிட வேண்டும். வல்லாரை விழுதை தொடர்ந்து மாதக் கணக்கில் சாப்பிட்டு வந்தால் நரை மறைந்து இளமை தோற்றம் திரும்பும்.

உடலில் ஏற்படும் கட்டிகள், புண்கள் ஆகியவற்றை சரி செய்து விடும் ஆற்றல் வல்லாரைக்கு உண்டு. வல்லாரைக் கீரையுடன் மிளகு, துளசி இலை ஆகியவற்றை சம அளவு எடுத்து மெழுகு பதமாக அரைத்து மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு வெந்நீரில் கலந்து சாப்பிட்டால் காய்ச்சல் குணமாகும்.

யானைக்கால் நோய் உள்ளவர்கள் வல்லாரைக் கீரையை தொடர்ந்து காலில் வைத்துக் கட்டி வந்தால் யானைக்கால் நோய் எளிதில் குணமாகும். வல்லாரைக் கீரையை அரைத்து, அதை சாப்பிட்டு வந்தால் விரை வீக்கம், வாயு வீக்கம், தசை சிதைவு போன்றவை குணமாகி விடும். இந்தக் கீரையில் இரும்புச்சத்து, சுண்ணாம்புச்சத்து, உயிர்ச் சத்துகள் மற்றும் தாது உப்புக்கள் ஏராளமாக அடங்கியுள்ளன. இரத்தத்திற்கு தேவையான சத்துக்களை, சரிவிகித அளவில் கொண்டுள்ளது.


வெரிகோஸ் வெயின் என்று சொல்லக் கூடிய கால் நரம்புகளை பாதிக்கும் பிரச்சினைக்கும் இந்த வல்லாரை ஒரு மிக சிறந்த நிவாரணியாக விளங்குகிறது. வல்லாரைக் கீரை மத்திய நரம்பு மண்டலத்தை பலப்படுத்தக் கூடியதாக விளங்குகிறது. நரம்பு மண்டலங்களைப் பலப்படுத்துவதன் மூலம் நமது செயற்பாடுகள் மிகவும் சீராக அமைவதற்கு இது மிகுந்த உதவியாக அமைகிறது.

மன அழுத்தத்தை தடுத்து நிறுத்துகிறது. வல்லாரைக் கீரை நோய் எதிர்ப்பு மருந்தாகவும் பயன்படுகிறது. மேலும் உடலில் உள்ள நோய்க் கிருமிகளை அழிக்கும் சக்தியும் வல்லாரைக்கு உண்டு. வல்லாரைக் கீரையை வலியை போக்கக் கூடிய ஒரு மேற்பூச்சு மருந்தாகவும் பயன்படுத்த முடியும். வல்லாரைக் கீரையை நீர் விடாமல் நன்றாக பசை போல் அரைத்துக் கொள்ள வேண்டும். இந்த பசையை வீக்கம் உள்ள இடத்தில் ஒரு பற்று போல் போட்டு வந்தால் வீக்கம் படிப்படியாக குறைய ஆரம்பிக்கும்.

மூளை நன்கு செயற்பட தேவையான ஊட்டச்சத்துக்களை, தகுந்த முறையில் பெற்றிருக்கிறது. எனவே தான், இதனை சரசுவதிக் கீரை என்றும் அழைக்கின்றனர். இரத்த சுத்திகரிப்பு வேலையைச் சிறப்பாக செய்கிறது. தொண்டைக்கட்டு, காய்ச்சல், உடற்சோர்வு, பல் நோய்கள் மற்றும் படை போன்ற தோல் நோய்களை வேரறுக்கும் வல்லமை கொண்டது. இந்தக் கீரையை கொண்டு பல் துலக்கினால், பற்களின் மஞ்சள் தன்மை நீங்கும். வல்லாரைக் கீரையுடன் நல்ல நீர் சேர்த்து அரைத்து வல்லாரை ஜூஸாக்கி தினமும் 25 மில்லி அல்லது 30 மில்லி குடித்து வர மாரடைப்பு நம்மை நெருங்காது.

மருத்துவ உலகம்

# நீரிழிவை கட்டுப்படுத்தும் பீன்ஸின் மருத்துவ குணங்கள்



பீன்ஸில் இரும்பு, கல்சியம், மக்னீசியம், மாங்கனிசு மற்றும் பொட்டாசியம் நிறைந்துள்ளது. பீன்ஸ் சாப்பிட்டு வந்தால் அதில் உள்ள ஃப்ளேவோனாய்டுகள் புற்றுநோயை உண்டாக்கும் செல்களின் வளர்ச்சியைத் தடுத்து புற்றுநோய் வருவதற்கான வாய்ப்பைத் தடுக்கும்.

வேகவைத்த காய்களைத் தான் மனிதக் குடலானது எளிதில் சீரணிக்கும். மற்றும் அதன் சத்துகளை எளிதாக உட்கிரகிக்கும். பீன்ஸ் சாப்பிட்டால், அது குடலியக்கத்தை சீராக்கி, செரிமான பிரச்சினைகள் ஏற்படாமல் தடுக்கும்.

100 கிராம் பீன்ஸில் நார்ச்சத்து 9 சதவீதம் உள்ளது. இந்த நார்ச்சத்தானது குடலின் உட்புறச் சுவர்களைப் பாதுகாத்து நச்சுத் தன்மைகளை வெளியேற்றும் தன்மை கொண்டது. புற்று நோயைக் குணப்படுத்தும் தன்மை பீன்ஸ்'க்கு உண்டு என்று அண்மையில் ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

இரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவைக் கட்டுப்பாட்டுடன் வைப்பதற்கு பீன்ஸ் பெரிதும் உதவியாக இருக்கும். ஏனெனில் அதில் உள்ள காபோவைதரேட் மெதுவாகக் கரைவதால் அது இரத்தத்தில் அளவுக்கு அதிகமாக சர்க்கரை சேர்வதைத் தடுக்கும்.


பீன்ஸில் ஆன்டி ஒக்சிசன்கள், புரோட்டின், நார்சசத்து, காம்ப்ளக்ஸ் காபோவைதரேட், விற்றமின்கள் மற்றும் கனிமச் சத்துக்களான பொட்டாசியம், ஃபோலேட், காப்பர், இரும்புச் சத்து, மாங்கனிஷ், பொஸ்பரஸ் மற்றும் மக்னீசியம் இருப்பதால், இது உடலில் ஊட்டச்சத்து குறைபாடு ஏற் படுவதைத் தடுத்து உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள உதவும் இதயத்திற்கு சிறந்தது.

பீன்ஸில் உள்ள சிலிகான் என்னும் கனிமச்சத்து எலும்புகளை வலுவாகவும், ஆரோக்கியமாகவும் வைத்துக்கொள்ள உதவும். மேலும் மற்ற காய்கறிகளை விட இந்தக் காய்கறியிலுள்ள சிலிகான் எளிதில் உறிஞ்சப்படுவதோடு செரிமானமும் அடையும்.

சிலருக்கு கோதுமை, பார்லி போன்ற தானியங்களில் உள்ள க்ளுடனால் அலர்ஜி ஏற்படலாம். அத்தகையவர்கள் தானியங்களுக்கு பதிலாக பீன்ஸ் சாப்பிட்டால், தானியங்களால் கிடைக்கக் கூடிய சத்துக்களை பீன்ஸ் மூலம் பெறலாம்.

பச்சை பீன்ஸில் உள்ள கரோட்டினாய்டுகள் சருமத்தின் தரத்தை அதிகரித்து, முதுமையை எதிர்த்துப் போராடும்.

# கொழுப்பை பக்குவமாக குறைக்கும் பூண்டு



நலமாக வாழ இயற்கையாக கிடைக்கும் காய் கறிகளையும் பழங்களையும் உண்டு வாழ்ந்தாலே போதும். ஆனால் நடைமுறை வாழ்வில் தற்போது அனுபவித்து வரும் செயற்கையான வாழ்க்கையால் அவதிப்படுவதுதான் மிச்சம்.

உடல் எடையை குறைப்பதில் நாம் தினமும் வீட்டில் பயன்படுத்தப்படும் பூண்டு எந்த அளவிற்கு உதவி செய்கிறது தெரியுமா?

இந்த கீழ்வரும் செய்முறையின் அடிப்படையில் பூண்டில் கஞ்சி செய்து தினமும் குடித்துவர உடல் எடை மிக வேகமாகக் குறைய ஆரம்பிக்கும்.

**தேவையான பொருட்கள்:**

பூண்டு - 15 பல் (தோல் நீக்கப்பட்டது), புழுங்கல் அரிசி - ஒரு கப் (வறுத்து, உடைத்தது), சீரகம், மிளகு - தலா கால் டீஸ்பூன் (உடைத்தது),வெந்தயக்கீரை - ஒரு கைப்பிடி அளவு, இந்துப்பு - தேவையான அளவு, மோர் - ஒரு கப், தண்ணீர் - 4 கப்

**செய்முறை:**

உடைத்த புழுங்கல் அரிசி, பூண்டு, மிளகு, சீரகம், இந்துப்பு, வெந்தயக்கீரை, தண்ணீர் ஆகியவற்றை குக்கரில் சேர்த்து, மூடி 3 விசில்விட்டு இறக்கவும். ஆறியதும் நன்கு மசித்து, மோர் சேர்த்து குடிக்கலாம். காலை, மாலை வேளைகளிலும் இதை சாப்பிடலாம்.

இதனை மதிய உணவில் நாம் இயல்பாகவே அதிக கலோரிகளை எடுத்துக் கொள்வோம். அதற்கு பதிலாக இந்த கஞ்சியைக் குடித்து வந்தால் பசியும் அடங்கும். குறைந்த கலோரியில் நிறைவான, சத்தான உணவைச் சாப்பிடவும் முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

நம் உடலில் அதிகரித்துள்ள கொழுப்பை ,அதிக அளவில் மெடபாலிசம் செய்து வெகுவாகக் குறைகிறது. அது மட்டுமில்லாமல், இரத்த ஓட்டத்தையும் அதிகரிக்கச் செய்கிறது. புற்று நோய் வருவதை தடுகிறது. இதுபோன்ற பல நன்மைகள் இருக்கின்றன.

# ஏமாற்றுக்காரர்களை எமது மக்கள் சரியாக புரிந்துகொள்ள வேண்டும்

## வரதர் கூறுகிறார்



(கொழும்பு)

மக்களிடம் வாக்குகளைப் பெற்றுக்கொண்டு அற்ப சலுகைகளைப் பெற்றுக் கொண்டவர்கள் மக்களுக்கான உரிமையினை பெற்றுக் கொடுக்கவில்லையென இணைந்த வடக்கு, கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் தெரிவித்துள்ளார்.

தமிழர் சமூக ஜனநாயக கட்சி நேற்று முன்தினம் மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்பாகவிருந்து தேர்தல் பிரசார நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்தது.

இதன் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில்.

மக்களுக்கான வேலைகளை செய்யாமல் அற்ப சலுகைகளை பெற்றுக் கொண்டு மக்களை ஏமாற்றும் ஏமாற்றுக்காரர்களை மக்கள் சரியாக புரிந்துகொள்ள வேண்டும். அவர்களை மக்கள் புறக்கணிக்க வேண்டும்.

அதன் மூலமே நேர்மையானவர்கள், நல்லவர்கள் மற்றும் சமூக சிந்தனையுடையவர்கள் பிரதிநிதிகளாக வருவதற்கான சந்தர்ப்பம் ஏற்படும்.

எதிர்காலத்தில் மக்கள் எமக்கான ஆதரவினை வழங்குவதன் மூலம் வடக்கு, கிழக்கினை இணைத்து ஆட்சியதிகாரத்தினை செய்ய முடியும் என தெரிவித்துள்ளார். (இ-8)

# விபத்து; இரு இளைஞர்கள் பலி!



(கொழும்பு)

காலி அகுரெஸ்ஸ பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் இரண்டு இளைஞர்கள் உயிரிழந்தனர்.

இசை நிகழ்ச்சி ஒன்றிற்கு சென்றுவிட்டு மோட்டார் சைக்கிளில் திருப்பிக் கொண்டிருந்த இருவரே நேற்று அதிகாலையில் இவ்வாறு விபத்துக்கு முகம்கொடுத்துள் ளனர்.

சம்பவத்தில் காயமடைந்த மற்றும் ஒருவர் கராபிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

22 மற்றும் 23 வயதானவர்களே விபத்தில் பலியாகினர். (இ-8)

# புதையல் தோண்டிய மூன்று பேர் கைது

கண்டி - தலாதும்பய பகுதியில் புதையல் தோண்டும் நோக்கில் அகழ்வு பணியில் ஈடுபட்டிருந்த மூன்று பேர் பொலிஸாரால் கைது செய்யபட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் குறித்த சந்தேகநபர்கள் கைது செய்யப்படும் போது சுமார் 15 அடி ஆழத்திற்கு குழி தோண்டப் பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து அகழ்வுக்கு பயன்படுத்தப் பட்ட உபகரணங்களும்கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-8)

# மகிந்தவை பிரதமராக்கும் பயணம் ஆரம்பம்

## பந்துல குணவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

சர்ச்சைக்குரிய மத்திய வங்கி பிணைமுறி விவகாரத்தில் ஐக்கிய தேசியக் கட்சியே பொறுப்புக்கூற வேண்டும். மத்திய வங்கி பிணைமுறி ஊழல்வாதிகளுக்கு சட்டத்தின் மூலமாக அதியுச்ச தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று பொது எதிரணியின் பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன வலியுறுத்தினார்.

2020 இல் மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக்கும் பயணம் இந்த ஆண்டில் இருந்து ஆரம்பிக்கின்றது எனவும் அவர் தெரிவித்தார்.

சர்ச்சைக்குரிய பிணைமுறி விவகாரம் தொடர்பான ஆணைக்குழுவின் அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இவ்விடயம் குறித்து கருத்துக் கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்.

மத்திய வங்கி பிணைமுறி ஊழல் விடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சியே குற்றத்திற்கான முழுமையான பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதை நாங்கள் தொடர்ச்சியாக கூறி வந்தோம். இப்போதும் நாங்கள் அதே நிலைப்பாட்டில் இருந்தே கருத்து வெளியிடுகின்றோம். ஆட்சி மாற்றம் ஏற்பட்டு 50 நாட்களுக்குள் மத்திய வங்கியில் இடம்பெற்ற பாரிய நிதி மோசடி விவகாரத்தில் உண்மைகளை மூடி மறைக்க பல சதித்திட்டங்கள் இடம்பெற்றன.

எனினும் கோப் குழுவின் செயற்பாடுகளின் பின்னர் ஜனாதிபதி மூலமாக அமைக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழு மூலமாக அவை தடுக்கப்பட்டு இப்போது ஒரு முடிவு எட்டப்பட்டுள்ளது. விசாரணை ஆணைக்குழு தமது அறிக்கையினை ஜனாதிபதிக்கு வழங்கியதுடன் நிறுத்திவிடக் கூடாது. அடுத்தகட்ட நடவடிக்கைகளை துரிதமாக முன்னெடுக்க வேண்டும்.

மத்திய வங்கி பிணைமுறி ஊழல் விவகாரத்தில் குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை வழங்கப்படவேண்டும். ஏனைய ஊழல்களுக்கு எதிராக குரல் எழுப்பும் நபர்கள் இந்த விடயத்தில் அதிக அழுத்தம் கொடுக்க வேண்டும். மத்திய வங்கியில் மேற்கொண்ட கொள்ளை சாதாரண விடயம் அல்ல. இது மக்களின் பணத்தை கொள்ளையடித்த மிகப்பெரிய தேசத்துரோக செயலாகும்.

ஆகவே சட்டத்தின் அதியுச்ச தண்டனையினை குறித்த குற்றவாளிகளுக்கு வழங்க வேண்டும். ஜனாதிபதி தனது அதிகாரங்களை பயன்படுத்தி மத்திய வங்கி ஊழல்வாதிகளையும் அவர்களுடன் தொடர்புபட்ட சகல தரப்பையும் தண்டிக்க வேண்டும். இல்லையேல் இந்த நாட்டு மக்கள் ஜனாதிபதிக்கு கொடுத்த மக்கள் வரத்தை அவரே மீறிய தாக அமையும்.



2015 ஆம் ஆண்டு தேர்தலின் பின்னர் மகிந்த ராஜபக்ஷ இந்த நாட்டினை புதிய அரசாங்கத்திற்கு ஒப்படைத்த போது இந்த நாடு பூரண அபிவிருத்தி கண்ட நாடாக இருந்தது. எனினும் இன்று இரண்டு ஆண்டுகள் பூர்த்தியாகியுள்ள நிலையில் நாட்டின் நிலைமைகள் முழுமையாக மாற்றம் கண்டுள்ளன. அன்று எமது ஆட்சியில் ஏற்படுத்தப்பட்ட அபிவிருத்திகள் அனைத்தும் இன்று நிறுத்தப்பட்டுள்ளன, வேலைத்திட்டங்களை கைவிட்டுள்ளனர், கிராமங்கள் அழிந்து வருகின்றன.

விவசாயிகளின் வாழ்வாதாரம் அழிக்கப்பட்டு வருகின்றது. இந்த அரசாங்கம் நாட்டினை முழுமையாக சர்வதேச நிறுவனங்களின் கைகளில் ஒப்படைத்து எமது வளங்களை சூறையாடும் நிலைமையினை ஏற்படுத்தியுள்ளது. இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஒரு மாதத்தில் மத்திய வங்கியில் கொள்ளையடித்து இன்று ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் நகர்வுகளுக்கு மத்திய வங்கியின் கொள்ளையடித்த நிதியே வழங்கப்பட்டு வருகின்றது. ஐக்கிய தேசியக் கட்சியின் சகல செயற்பாடுகளும் அர்ஜுன் மகேந்திரன் கொள்ளையடித்த நிதியில் இருந்தே வழங்கப்பட்டு வருகின்றது.

ராஜபக்ஷக்களின் ஆட்சியில் கொள்ளையடித்ததாக கூறினார்கள், தாங்கள் தூய்மையான அரசியலை முன்னெடுப்பதாக தெரிவித்தனர். ஆனால் இன்று ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கமே மிகவும் மோசமான கொள்ளைக்கார ஆட்சியாக மாற்றம் கண்டுள்ளது. எம்மை குற்றவாளிகள் என கூறியவர்கள் இன்றுவரை அவற்றை நிரூபிக்க முடியாத நிலையில் உள்ளனர். எமது ஆட்சியில் குற்றங்கள் இடம்பெற்றவில்லை என கூறவில்லை, எனினும் ஒருசிலர் செய்த குற்றங்கள் காரணமாக பொறுப்பை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டது. மகிந்த ராஜபக்ஷவை தண்டிக்கவே எமது மக்களும் வாக்களித்தனர்.

எனினும் நாட்டுக்கு தகுதியான தலைவர் மகிந்த ராஜபக்ஷதான் என்பதை அவர் ஆட்சியில் இல்லாத போதே மக்கள் விளங்கிக் கொண்டனர்.

ஆகவே இப்போது நாம் ஆரம்பித்துள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பொதுஜன முன்னணியின் வெற்றியில் இருந்து நாம் மீண்டும் எமது பயணத்தை ஆரம்பிக்க வேண்டும். அதேபோல் 2018 ஆம் ஆண்டு ஆரம்பிக்கும் போது மகிந்த ராஜபக்ஷவை நாட்டின் பிரதமராக்கும் எமது பயணத்தை ஆரம்பிப்போம். அடுத்த பொதுத் தேர்தலில் நாட்டின் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவே. அதில் எந்த மாற்றமும் இல்லை. அதற்கான போராட்டமே ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனவும் மேலும் தெரிவித்தார். (இ-8)

# ரஜினியின் அரசியல் பிரவேசம் குறித்து நாமல் எம்.பி.வாழ்த்து



(கொழும்பு)

தனது அரசியல் பிரவேசம் குறித்து நடிகர் ரஜினிகாந்த் அறிவித்தமையை அடுத்து அவருக்கு, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ வாழ்த்து தெரிவித்துள்ளார்.

தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் தளத்தில் அவர் தனது வாழ்த்து செய்தியை பதிவிட்டுள்ளார்.

தனது தந்தை மகிந்த ராஜபக்ஷவுக்கு மிகவும் பிரியமான நடிகர் ரஜினிகாந்த் என குறிப்பிட்டுள்ள அவர், ரஜினியின் அரசியல் வாழ்க்கை சினிமாவை போன்று ஆகிவிடக்கூடாது எனவும் தெரிவித்துள்ளார்.

நடிகர் ரஜினிகாந்த் நேற்று முன்தினம் சென்னையில் இடம்பெற்ற ரசிகர்கள் சந்திப்பின் போது தாம் அரசியலுக்கு வருவது உறுதி எனவும் அது காலத்தின் கட்டாயம் எனவும் தெரிவித்திருந்தார். ரஜினிக்கு கடல் கடந்து வந்த முதலாவது வாழ்த்துச்செய்தி இதுவென தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன. (இ-8)

# வனஜீவராசிகள் திணைக்களம் மறுசீரமைக்கப்படும் -மைத்திரி

(கொழும்பு)

வனஜீவராசிகள் திணைக்களத்தை மறுசீரமைப்பு செய்வதன் மூலம் யானைகள் பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக்கொள்ளலாம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

வனஜீவராசிகள் திணைக்களத்தில் வளப் பற்றாக்குறை காரணமாக யானைகளை கட்டுப்படுத்தல் உள்ளிட்ட பல விடயங்கள் காலதாமதமாவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.



பொலநறுவை, வேஹெரகல பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பிலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

எனவே, குறித்த திணைக்களத்துக்கு தேவையான வளங்களை குறைவில்லாமல் பெற்றுக்கொடுத்து அதனை முழுமையாக மறுசீரமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (இ-8)

# சட்டத்தை மீறும் வேட்பாளர்களுக்கு கடும் எச்சரிக்கை

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தல் பரப்புரையின் ஒரு அங்கமாக, தனிப்பட்ட அல்லது பொது நிதியில் இருந்து பணத்தையோ அல்லது பொருள் மானியத்தையோ வழங்கும் வேட்பாளர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் மகிந்த தேசப்பிரிய எச்சரித்துள்ளார்.

"தேர்தல் சட்டங்களின் படி தேர்தல் பரப்புரைகளின் போது வேட்பாளர்கள் மானியங்களை வழங்குவது சட்ட விரோதமாகும். அது ஒரு இலஞ்ச வழக்காக கருதப்படும்.

தேர்தல் திணைக்களத்தின் உத்தரவுகளை அரசாங்க அதிகாரியோ அல்லது அரசாங்க நிறுவனமோ, தேர்தல் சட்டங்களை மீறினால், அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

மத அமைப்புகளுக்கு நிதி வழங்குவது, கல்விக்கான பொருட்களை வழங்குவது போன்ற நடவடிக்கைகளில், அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள் ஈடுபடுவது அவதானிக்கப்பட்டுள்ளது.



தேர்தல் பரப்புரையின் ஒரு பகுதியாக இத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அரசாங்க நிதியிலான உதவிகளை பொதுமக்களுக்கு வழங்குவதை எதிர்வரும் பெப்ரவரி 15ஆம் திகதி வரை இடைநிறுத்தி வைக்குமாறு பிரதேச செயலகங்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களுக்கு தேர்தல் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

களஞ்சியப்படுத்தி வைப்பதற்குச் சிக்கலான, கால்நடைகள், தாவரங்கள், விதைகள் மற்றும் இதுபோன்ற பொருட்களை மாத்திரம் விநியோகிக்குமாறு பிரதேச செயலகங்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளன.


ஏனைய களஞ்சியப்படுத்தக்கூடிய பொருட்களின் விநியோகங்களை பெப்ரவரி 15 வரை நிறுத்தி வைக்குமாறும் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

அத்துடன், குறிப்பிட்ட அரசியல் கட்சிகளால் வாக்குகளுக்காக வழங்கப்படும் அரச நிதியிலான உதவிகளை பொதுமக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டாம்.

இந்த உதவிகளை அரசாங்கத்திடம் இருந்து பெறும் உரிமை இருக்கிறது என்பதை பொதுமக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இவை அரசாங்க நிதியில் இருந்தே வழங்கப்படுகின்றன என்பதை அவர்கள் அறிய வேண்டும்" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# அமெரிக்காவுக்கான பாலஸ்தீனத் தூதுவர் திருப்பியழைப்பு



(பாலஸ்தீனம்)

இஸ்ரேலின் தலை நகராக ஜெருசலேமை ஒரு தலைப்பட்சமாக அறிவித்ததைத் தொடர்ந்து, அமெரிக்காவுக்கான தனது தூதுவரைத் திருப்பியழைக்கவுள்ளதாக, பாலஸ்தீனம் அறி வித்துள்ளது.

இந்நிலையில், அமெரிக்காவுக்கான பாலஸ்தீன தூதுவர் ஹுஸம் சொம்லொட்டை (Husam Zomlot) திருப்பியழைப்பதற்கான அறிவித்தலை பாலஸ்தீன வெளிவிவகார அமைச்சு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை விடுத்துள்ளதாக, சர்வதேச ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

புனித நகரான ஜெருசலேமை தமது நாடுகளின் தலைநகரமென்று இஸ்ரேலும் பாலஸ்தீனமும் கூறி வந்த நிலையில், கடந்த டிசெம்பர் மாதம் 6ஆம் திகதி இஸ்ரேலின் தலைநகராக ஜெருசலேமை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அங்கீகரித்திருந்தார்.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்பின் இந்தத் தீர்மானத்தைத் தொடர்ந்து, அமெரிக்காவால் முன்னெடுக்கப்படும் எந்தவொரு அமைதி உடன்பாட்டையும் தான் ஏற்கப் போவதில்லையென, பாலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூட் அபாஸ் தெரிவித்திருந்தார்.

இஸ்ரேலின் தலைநகராக ஜெருசலேமையை அங்கீகரித்தமையை மீளப் பெற்றுக் கொள்ள வேண்டுமென ஐ.நா.வலியுறுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-8)

# அணு ஆயுதங்களை இய எப்பொழுதும் எனது மேசை

## வடகொரிய ஜனாதிபதி அமெரிக்காவுக்கு எச்சரிக்கை



(சியோல்)

அணு ஆயுதங்களை இயக்கும் கருவி எப்பொழுதும் எனது மேசை மீது உள்ளது என வடகொரிய ஜனாதிபதி கிம் ஜான் உன் தெரிவித்துள்ளார்.

வடகொரியா ஏவுகணை பரிசோதனை மற்றும் அணு ஆயுத சோதனையில் ஈடுபட்டு வருவதற்கு அமெரிக்கா, ஜப்பான் மற்றும் தென் கொரியா உள்ளிட்ட உலக நாடுகள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. ஐ.நா. அமைப்பு அந்நாட்டுக்கு பொருளாதார தடையும் விதித்தது.

ஆனால் எதனையும் கவனத்தில் கொள்ளாமல் தொடர்ந்து அணு ஆயுத பரிசோ

# சீனத் தொலைக்காட்சியிலும் ரஜினியின் அரசியல் பிரவேசம்



(பீஜிங்)

சுப்பர்ஸ்டார் ரஜினியின் அரசியல் பிரவேசம் குறித்த செய்தி இந்தியா முழுவதிலும் பிரபலமான நிலையில், சீன தொலைக்காட்சியிலும் செய்தி ஒளிபரப்பப்பட்டது.

நடிகர் ரஜினிகாந்த் தனது அரசியல் நிலைப்பாட்டை அறிவிக்க போவதாக கடந்த 26 ஆம் திகதி தெரிவித்தார். அதையடுத்து அவர் என்ன அறிவிப்பு வெளியிடுவார் என்ற எதிர்பார்ப்பு தமிழகம் மட்டுமன்றி இந்தியா முழுவதும் எழுந்தது. வெளிநாடு வாழ் இந்தியர்களும் ரஜினியின் அரசியல் பிரவேசம் குறித்த தகவல்களை தமிழக நண்பர்களிடம் கேட்டு தெரிந்து கொண்டனர்.

இந்த நிலையில் அரசியலுக்கு வருவது உறுதி என்றும், தனிக்கட்சி தொடங்கி சட்டசபை தேர்தலில் 234 தொகுதிகளிலும் போட்டியிடுவேன் என்றும் நேற்று முன்தினம் அவர் அறிவித்தார்.

இந்த செய்தி அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியது. இதை தமிழ், ஆங்கிலம், இந்தி, தெலுங்கு, மராத்தி, குஜராத்தி என அனைத்து செய்தி நிறுவனங்களும், ஊடகங்களும் முக்கிய செய்தியாக (பிரேக்கிங் நியூஸ்) வெளியிட்டன.

ஆனால், கடல் கடந்துள்ள சீனாவின் முன்னணி செய்தி நிறுவனமான சீனா ஜின் ஹீவா' நியூ தொலைக்காட்சி இச்செய்தியை ஒளிபரப்பியது. இது சீனா வின் முன்னணி செய்தி நிறுவனத்தின் தொலைக்காட்சியாகும்.

ரஜினிக்கு சிங்கப்பூர், மலேசியா, ஜப்பான், சீனா உள்ளிட்ட நாடுகளில் ஏராளமான ரசிகர்கள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அன்று ஜெயலலிதா போயஸ் கார்ட மீண்டும் அரசியல்



(சென்னை)

ஜெயலலிதாவைப் போன்று நடிகர் ரஜினி காந்த் போயஸ்கார்டனில் இருந்து தனது அரசியல் பணியை தீவிரமாக மேற்கொள் வதால் பிற கட்சிகளுக்கு கடும் சவாலாக இருப்பார் என பேசப்படுகிறது.

ஜெயலலிதா இருந்த வரையில் பரபரப்பான அரசியல் களமாகவே காணப்பட்டது. தமிழக அரசியலில் தவிர்க்க முடியாத சக்தியாக திகழ்ந்த ஜெயலலிதா தனது போயஸ் கார்டன் இல்லத்தில் இருந்தே பல சாதனைகளை படைத்தார். கூட்டணி பேச்சு வார்த்தையில் தொடங்கி அ.தி.மு.கவின் கொள்கை முடிவுகள் அனைத் தையுமே அவர் அங்கு வைத்துதான் முடிவு செய்தார்.

இதனால் அவர் ஆட்சியில் இருந்தபோதும் சரி, இல்லாத நேரத்திலும் சரி போயஸ்கார்டன் பகுதி பரபரப்பு களமாகவே காணப்பட்டது. இசட் பிளஸ் பாதுகாப்பு பிரிவின் கீழ் இருந்த ஜெயல லிதா வீட்டு முன்பு எப்போதுமே பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருக்கும். இதையெல்லாம் தாண்டி அ.தி.மு.க. தொண்டர்கள் ஜெயலலிதாவை பார்ப்பதற்காக வீட்டு அருகில் காத்து கிடப்பார் கள். வீட்டில் இருந்து வெளியே செல்லும் போதும், வீட்டுக்கு வரும்போதும் ஜெயலலிதாவின் கார் மெதுவாக செல்லும். தொண்டர் களை பார்த்து அவர் கையசைத்து விட்டு செல்வார்.

அம்மாவ பார்த்தாச்சிப்பா என்கிற சந்தோஷத்துடனேயே அ.தி.மு.க. தொண்டர்கள் அங்கிருந்து புறப்பட்டு செல்வார்கள். இப்படி நீண்ட நாட்களாகவே தமிழக அரசியல் களத்தின் தவிர்க்க முடியாத மையமாகவே காட்சி அளித்த போயஸ் கார்டன் பகுதி ஜெயலலிதாவின் மரணத்துக்கு பிறகு களை இழந்து காணப்பட்டது.

இந்த நிலையில் ஜெயல லிதாவின் வீட்டு அருகில் வசித்து வரும் தமிழ் திரை உலகின் சுப்பர் ஸ்டார் ரஜினி, அர்சியலில் குதித்துள்ளார். இதனால் போயஸ் கார்டன் பகுதி மீண்டும் பரபரப்பை எட்டியுள்ளது.

போயஸ்கார் டனில் இருந்து மீண்டும் ஒரு அரசியல் புயல் வீசத் தொடங்கி இருப்பதாகவே அரசி யல் பார்வை யாளர்கள் இதனை வர்ணித்துள்ளனர்.

ஜெயலலிதா உயிரோடு இருந்த காலகட்டத்தில் அவர் போயஸ்கார்டன் இல்லத்தில் இருந்து வெளி யில் செல்லும் போதெல்லாம் அங்கே காத் திருக்கும் பத்திரிகையாளர்கள் கேள்வி கணைகளை தொடுப்பார்கள்.

கடந்த சில நாட்களா கவே போயஸ் கார்டன் பகுதி யில் மீண்டும் அதே நிலை தான் காணப்படுகிறது. ரஜனி யின் ரசிகர்கள் சந்திப்பு நடந்த கடந்த 6 நாட்களும் பத்திரி கையாளர்கள் போயஸ் கார் டன் இல்லத்தில் காத்து கிடந்தனர்.

# சுற்றுலாத் தலத்தில் பாரிய விபத்து!

## அமெரிக்கர்கள் 10 பேர் பலி



(மெக்சிக்கோ சிற்றி)

மெக்சிக்கோ நாட்டின் பிரபல சுற்றுலாத் தலத்தில் இரண்டு கார்களும், மோட்டார் சைக்கிளும்மோதிய விபத்தில் 10 அமெரிக்கர்கள் பரிதாபமாக பலியானதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வட அமெரிக்கா கண்டத்தில் உள்ளது மெக்சிக்கோ நாடு. இங்குள்ள பிரசித்தி பெற்ற சுற்றுலாத் தலம் அகா புல்கோ. இந்தப் பகுதியில் தினமும் ஏராளமான வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வந்து குவிவது வழக்கம்.

இந்நிலையில், அகாபுல்கோ நகருக்கும், ஜிகுவா டானேஜோ நகருக்கும் இடையே உள்ள நெடுஞ்சாலையில் ஒரு மோட்டார் சைக்கிளும், 2 கார்களும் நேற்றுக்காலை மோதிக் கொண்டன. இந்த விபத்தில் 2 குழந்தைகள் உட்பட 10 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும், 2 பேர் படுகாயமடைந்தனர்.

விபத்து குறித்த தகவல் அறிந்ததும் மீட்புப்படையினர் அங்கு விரைந்து வந்து மீட் புப் பணிகளில் ஈடுபட்டனர். படுகாயமடைந்தவர்கள் அம் லன்ஸ்களில் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இதுகுறித்து அதிகாரிகள் தெரிவிக்கையில், விபத்தில் பலியானவர்களில் மற்றவர்கள் 26 வயதுமுதல்76வயதுவரையிலானவர்கள் அதே நேரத்தில் இந்த விபத்தில் பலியானவர்களில் வெளிநாட்டினர் யாராவது உள்ளனரா எனவும் விசாரணை நடத்தி வருகிறோம் என் தெரிவித்துள்ளனர். (இ-8)

# வெளிநாடு

## யக்கும் கருவி
## சை மீதுள்ளது

### கை

தனையில் வடகொரியா ஈடு பட்டு வந்தது. அமெரிக்காவின் மைய பகுதியை தாக்கும் வலிமை எங்களிடம் உள்ளது என அதன் ஜனாதிபதி கிம் ஜான் உன் தெரிவித்தார்.

இந்த நிலையில் புது வருட தினத்தினை முன்னிட்டு நேற்று கிம் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றும் போது.

வடகொரியாவுக்கு எதிராக போர் தொடங்க அமெரிக்க அரசால் முடியாது. அமெரிக்காவின் முக்கிய நகரங்கள் அனைத்தையும் தாக்கும் வலிமை கொண்ட அணு ஆயுதங்கள் எங்களிடம் உள்ளன.

எங்களது அணு ஆயுதங்களின் இலக்கிற்கு உள்ளேயே மொத்த அமெரிக்காவும் உள்ளது. அணு ஆயுதங்களை இயக்கும் கருவி எப்பொழுதும் எனது மேசை மீது உள்ளது.

இது உண்மை எனத் தெரிவித்துள்ளார். (இ-8)

## அமெரிக்காவுடன் நல்லுறவை தொடர்வதற்கு ரஷ்யா விருப்பம்

### ட்ரம்புக்கு புடின் கடிதம்

(மொஸ்கோ)

அமெரிக்காவுடனான நல்லுறவை தொடர விரும்புவதாக அந்நாட்டின் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் கடிதம் அனுப்பியுள்ளார்.



ஐரோப்பிய யூனியனில் இணைய விரும்பிய உக்ரைன் நாட்டின் ஒரு பகுதியை ரஷ்யா தனது இராணுவப் பலத்தால் தனியாக பிரித்து கடந்த 2014ஆம் ஆண்டு கிரிமியா என்ற தனி நாட்டை உருவாக்கியது. இதனால், அமெரிக்கா - ரஷ்யாவுக்கு இடையில் கடந்த மூன்றாண்டுகளாக அதிகப்படியான முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

மேலும், சிரியா, ஈரான் ஆகிய நாடுகளுடனான நிலைப்பாட்டில் ரஷ்யாவும், அமெரிக்காவும் எதிரும் புதிருமாக இருந்து வருகின்றன. கடந்த ஆண்டு நடந்து முடிந்த அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ரஷ்யாவின் தலையீடு அதிகமாக இருந்ததாக குற்றச்சாட்டு எழுந்தது. இது தொடர்பாக, அமெரிக்க அரசு விசாரித்து வருகிறது.

இந்நிலையில், அமெரிக்காவுடனான நல்லுறவை தொடர விரும்புவதாக அந்நாட்டின் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்புக்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் கடிதம் அனுப்பியுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்புக்கு புத்தாண்டு வாழ்த்துகளை தெரிவித்து ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் அனுப்பியுள்ள இந்தக் கடிதத்தில், 'சம மரியாதை மற்றும் பரஸ்பர நன்மதிப்புடன் கூடிய நீண்டகால நடைமுறை சாத்தியமான நல்லுறவை அமெரிக்காவுடன் தொடர ரஷ்யா விரும்புகிறது. உலகை அச்சுறுத்தும் சவால்களை எதிர்கொள்ளவும், நிரந்தரத்தன்மை உருவாகவும் அமெரிக்கா - ரஷ்யாவுக்கு இடையிலான ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைகள் முக்கியமானதாகும்' என குறிப்பிட்டுள்ளார். (இ-8)

## தா-இன்று ரஜினி
## ர்டனில்
### யல் புயல்



என்றும் அறிவுறுத்தியுள்ளார்.

அதே நேரத்தில் அரசியல் பிரவேசம் பற்றிய அடுத்தடுத்த நடவடிக்கைகளில் அவர் தொடர்ச்சியாக ஈடுபடுவார். குறிப்பாக கட்சி பெயர், சின்னம் கொடி, கொள்கைகள் பற்றிய அறிவிப்புகளை அவர் படிப்படியாக வெளியிடுவார்.

அது என்ன? என்கிற எதிர்பார்ப்பு இப்போதே ஏற்படத் தொடங்கி விட்டது. இதன் மூலம் வரும் நாட்களில் அரசியல் களத்தில் ரஜினியால் பரபரப்புக்கு பஞ்சம் இருக்காது என்றே கூறலாம்.

தமிழகத்தை பொறுத்த வரையில் அ.தி.மு.க., தி.மு.க. ஆகிய 2 திராவிடர் கட்சிகளும் பலம் வாய்ந்தவையாக உள்ளன. அமைப்பு ரீதியாகவும் இந்த கட்சிகள் பலம் வாய்ந்தவையாகவே உள்ளன. இப்படி அடித்தளம் மிக்க இந்த கட்சிகளை ஜெயித்துக் காட்டுவது என்பது ரஜினிக்கு சவாலாகவே இருக்கும்.

அதே வேளையில் தமிழக மக்கள் இப்போது மாற்றத்துக்காக காத்திருக்கிறார்கள் என்கிற கணிப்பும் உள்ளது. இதனை தனக்கு சாதகமாக்கி போயஸ் கார்டனில் இருந்து புறப்பட்டுள்ள ரஜினி என்கிற அரசியல் புயல் திராவிடக் கட்சிகளை சாய்க்குமா? என்கிற கேள்வியும் எழுந்துள்ளது. (இ-8)

ர்த்து அவர்

கிற சந்தோ
டர்கள் அங்
ப்படி நீண்ட
ளத்தின் தவி
ட்சி அளித்த
லிதாவின்
ந்து காணப்

வின் வீட்டு
ரை உலகின்
தித்துள்ளார்.
தி மீண்டும்

ண்டும் ஒரு
ருப்பதாகவே
ர் இதனை

த காலகட்ட
இல்லத்தில்
ாதெல்லாம்
கயாளர்கள்
ள்.
பஸ் கார்டன்
லை தான்
கள் சந்திப்பு
கையாளர்கள்
கிடந்தனர்.




அரசியல் பிரவேசம் பற்றி பல்வேறு கேள்விகளையும் எழுப்பினர். இதன்மூலம் அன்று ஜெயலலிதாவால் பரபரப்பாக காணப்பட்ட போயஸ் கார்டன் பகுதியில் இன்று ரஜினியால் மீண்டும் பரபரப்புக்களமாக மாறிப் போய் உள்ளது.

அரசியல் பிரவேசம் பற்றி நேற்று முன்தினம் அதிகார பூர்வமாக அறிவித்த ரஜினி, கட்சி தொடங்கும் வரையில் அரசியல் பற்றி எதுவும் பேச மாட்டேன் என்றே கூறி இருப்துடன் ரசிகர்களும் அதையே கடைப்பிடிக்க வேண்டும்

## ஒரே நாளில் 16 தடவை புத்தாண்டு கொண்டாடிய விண்வெளி வீரர்கள்

சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தில் பணியில் இருக்கும் 6 விண்வெளி வீரர்கள் நேற்று ஒரே நாளில் 16 முறை புத்தாண்டு தினத்தை கொண்டாடினர்.



விண்ணில் சர்வதேச விண்வெளி ஆய்வு மையம் உள்ளது. அங்கு பல்வேறு நாடுகளைச் சேர்ந்த விண்வெளி வீரர்கள் கட்டுமான பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் அங்கு ரஷ்யா, அமெரிக்கா மற்றும் ஜப்பானை சேர்ந்த 6 வீரர்கள் 2 வாரங்களுக்கு முன்பு சென்றனர். கடந்த 2 வார விண்வெளி பயணத்திற்கு பின்பு இவர்களது உடலில் ஏற்படும் மாற்றங்களை கண்டு பிடிக்க ஆராய்ச்சி மேற்கொள்ளப்படுகிறது.

அதன்படி அவர்கள் விண்வெளியில் உடற்பயிற்சி செய்வார்கள் இதன்மூலம் விண்வெளியில் எப்படி எல்லாம் உடல் மாற்றம் ஏற்படுகிறது என்பதை கண்டுபிடிக்க முடியும்.


மேலும் இந்த 6 விண்வெளி வீரர்களும் நேற்றுக் காலையில் இருந்து பூமியை முன்னும் பின்னுமாக 90 நிமிடத்துக்கு ஒருமுறை சுற்றுவார்கள். அதன் காரணமாக இவர்களுக்கு 16 தடவை சூரிய உதயம் ஏற்படும்.

எனவே அவர்களுக்கு நேற்று 16 தடவை புத்தாண்டு கொண்டாட்டம். உலகிலேயே இதுபோன்ற சாதனையை இதுவரை யாரும் நிகழ்த்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-8)

## ஊழல் வழக்குகளிலிருந்து தப்பிக்க ராணுவத்துடன் நவாஸ் ரகசிய பேச்சு

(லாகூர்)

ஊழல் வழக்குகளில் இருந்து தப்பிக்க பாகிஸ்தானின் மிகப்பெரிய அதிகார மையமான ராணுவத்துடன் ரகசிய பேச்சுவார்த்தை நடத்தி சமரச நடவடிக்கை மேற்கொள்ள நவாஸ் செரீப் முடிவு செய்துள்ளார்.



பனாமா ஊழல் வழக்கில் பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் செரீப் பதவி இழந்தார். அவரது மகன்கள், மகள் மற்றும் மருமகன் மீதும் 3 ஊழல் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

உச்ச நீதிமன்ற உத்தரவின் பேரில் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்) கட்சி தலைவர் பதவியையும் நவாஸ் செரீப் இராஜினாமா செய்துள்ளார்.

ஊழல் வழக்குகளில் தண்டனை வழங்கி விட்டால் குடும்பத்தினர் அனைவரும் சிறைக்குச் செல்ல நேரிடும். இதனால் நவாஸ் செரீப் குடும்பத்தினரின் அரசியல் ஆட்டம் கண்டுள்ளது.

எனவே, பாகிஸ்தானின் மிகப்பெரிய அதிகார மையமான ராணுவத்துடன் ரகசிய பேச்சுவார்த்தை நடத்தி சமரச நடவடிக்கை மேற்கொள்ள நவாஸ் செரீப் முடிவு செய்துள்ளார்.

அதற்கு சவுதி அரேபியா மன்னர் சல்மான், பட்டத்து இளவரசர் முகமதுபின் சல்மான் ஆகியோர் நடுவராக இருந்து சமரசம் செய்து வைக்கின்றனர்.

அதற்காக நவாஸ் செரீப் கடந்த 30 ஆம் திகதி விமானம் மூலம் சவுதி அரேபியா புறப்பட்டு சென்றார்.

ஏற்கனவே நவாஸ் செரீப் தம்பியும், பாகிஸ்தானில் உள்ள பஞ்சாப் மாகாண முதலமைச்சருமான ஷாயிஸ் செரீப் கடந்த வாரமே சவுதி அரேபியா சென்று பேச்சுவார்த்தைக்கான ஏற்பாடுகளை செய்துள்ளார்.

நவாஸ் செரீப்பின் இத்தகைய நடவடிக்கைக்கு எதிர்க்கட்சித் தலைவர் சயீத் குர்ஷித்ஷா கண்டனமும், எதிர்ப்பும் தெரிவித்துள்ளார்.

பாகிஸ் தான் தெக்ரிக் இ-இன்சாய் கட்சி தலைவர் இம்ரான் கானும் கண்டித்துள்ளார். (இ-8)

# வேட்பாளர்கள் பற்றிய தகவல்களை இராணுவம் வைத்திருக்க வேண்டும்

## தளபதி சேனநாயக்க தெரிவிப்பு



(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் பற்றிய தகவல்களை இராணுவம் வைத்திருக்க வேண்டும் என்று இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் மகேஸ் சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

பிபிசி சிங்கள சேவைக்கு கருத்து வெளியிட்டுள்ள அவர், "வேட்பாளர்கள் மற்றும் சமூகத்தின் ஏனைய உறுப்பினர்களின் விபரங்களைத் திரட்டுவதால், அவர்கள் கண்காணிக்கப்படுவதாக அர்த்தமில்லை.

வேட்பாளர் அல்லது ஏனையவர்களுக்கு இராணுவப் பாதுகாப்பு அளிக்க வேண்டிய சூழல் ஒன்று ஏற்பட்டால், அவர்களைப் பற்றிய பின்னணித் தரவுகள் இரீாணுவத்துக்குத் தேவை.

அத்தகைய ஒரு சூழல் ஏற்பட்ட பின்னர் தகவல்களைச் சேகரிப்பதற்காக காத்திருக்க வேண்டியதில்லை.

சட்டம் மற்றும் ஒழுங்கு விவகாரத்தை கையாள்வது பொலிஸாரின் கடமை என்றாலும், தகவல் சேகரிப்பு தேவையாக உள்ளது..முன்னாள் படையினர், இராணுவத்தில் இருந்து தப்பியோடியவர்கள் தேர்தலில் போட்டியிட முனைந்தால், அவர்கள் பற்றிய தகவல்கள் இராணுவத்துக்குத் தேவை" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, மற்றொரு கேள்விக்குப் பதிலளித்துள்ள இராணுவத் தளபதி, போரின் போது இராணுவம் போர்க்குற்றங்களை இழைத்தது என்று கூறப்படும் குற்றச்சாட்டுகளை நிராகரித்துள்ளார்.

இராணுவம் சித்திரவதைகளில் தொடர்புபடவில்லை என்றும் ஜோசப் முகாம் இப்போது இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-8)

# தெஹிவளை பகுதியிலுள்ள தொழிற்சாலையில் தீ விபத்து

(கொழும்பு)

தெஹிவளை பகுதியிலுள்ள பொலித்தீன் உற்பத்தி தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தினால் பாரிய சேதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தெஹிவள்ளை -அத்திடிய பகுதியில் அமைந்துள்ள பொலித்தீன் உற்பத்தி தொழிற்சாலையிலேயே நேற்று திங்கட்கிழமை அதிகாலை குறித்த தீ பரவியுள்ளது.



இந்நிலையில் இரண்டு தீயணைப்பு வாகனங்களை பயன்படுத்தி தீயை அணைத்துள்ளதாக கொழும்பு தீயணைப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த தீப்பரவலால் பொலித்தீன் உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் பல இரசாயன பொருட்கள் அழிவடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் குறித்த தீ பரவியதற்கான காரணம் தெரிவிக்கப்படாத நிலையில், இது குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-8)

# தேர்தல் சட்டங்களை மீறிய 44 பேர் கைது!

(கொழும்பு)

வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டதிலிருந்து இதுவரையான காலப்பகுதியில், தேர்தல் சட்டங்களை மீறிய 44 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் துறை தலைமையகம் தெரிவித்துள்ளது.

மேலும், தேர்தல் சட்டங்களை மீறிய 57 சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, புத்தளம் பிரதேசத்தில் தேர்தல் விதிமுறைகளை மீறி வாக்காளர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக கொண்டுவரப்பட்ட 625 புனித குர்ஆன் நூல்கள் மீட்கப்பட்டுள்ளன.

கற்பிட்டி பிரதேச சபைக்கு ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவரின் வீட்டில் இருந்து இந்த நூல்கள் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-8)

# அரசியல் சுதந்திரத்தை அர்த்தமுள்ளதாக மாற்றியமைக்க ஒன்றிணைவோம் -பிரதமர்

(கொழும்பு)

சமூக, அரசியல் சுதந்திரத்தை மிகவும் அர்த்தமுள்ளதாக மாற்றியமைக்கும் பாதையில் அனைவரும் ஒன்றிணைவோம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ள புத்தாண்டுச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

நல்லாட்சி அரசாங்கம் அமைக்கப்படும்போது நாட்டில் பாரிய சமூக, பொருளாதார, அரசியல் வீழ்ச்சி காணப்பட்டதுடன், கடுமையான கஷ்டங்களுக்கு மத்தியில் கூட நிலைபேறான அபிவிருத்திச் செயற்பாடு ஊடாக பொருளாதார ஸ்திரத்தன்மையை நோக்கிச் செல்ல நாம் நடவடிக்கை மேற்கொண்டோம்.

கடந்த காலப்பகுதியில் மக்களுக்கு சமூக, அரசியல், மானிட சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கும், சர்வதேச ரீதியாக எமது நாடு தொடர்பாகக் காணப்பட்ட எதிர்மறையான மனப் பாங்குகளை மாற்றியமைக்கவேண்டும்.

நட்புணர்வு மிக்க சூழலொன்றைக் கட்டியெழுப்பவும் முக்கிய கவனத்தினைச் செலுத்தி நடவடிக்கை மேற்கொண்டோம். தற்போது எமக்கு அவற்றின் சிறந்த பிரதி



பலன்களைப் பெற்றுக் கொள்ள முடியுமான நிலைமை காணப்படுகிறது.

நல்லாட்சி அரசாங்கம் இதுவரைக்கும் மேற்கொண்ட வேலைத்திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதுடன், 2018 ஆம் ஆண்டு துணிச்சல் மிகுந்த ஆண்டாக அமைய வேண்டும் எனப் பிரார்த்திக்கிறேன் எனவும் பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-8)

# இன்று ஒரு தகவல்

## விரோதித்தும் விலகியும் சாதிக்க முடியாதவை!

குடும்ப உறுப்பினர் ஒருவர் சரியில்லை; அலுவலக ஊழியர் ஒருவர் சரியில்லை; பங்குதாரர் சரியில்லை. குத்தகைதாரர் சரியில்லை; எதற்கும் சரிப்பட்டு வரமாட்டேன் என்கிறார்கள்.

உடனே மற்றவர்களுக்கு என்ன தோன்றும்? எக்கேடோ கெட்டுப் போகட்டும்! என்று தோன்றும் அல்லது இந்த ஆளை ஒரு வழி பண்ணிட்டுத்தான் அடுத்த வேலை! என்று தோன்றும்.

சாக்கடையை மற்றவர் மீது வீச எண்ணுபவர் முதலில் தன் கையை அசிங்கமாக்கிக் கொள்வதைப் போல் இவர்களை ஒரு வழி பண்ண வேண்டும் என்று செயல்படுகிறார்கள். முதலில் தாங்கள் பாதிக் கப்படுவதற்குக் காரணமாகிவிடுகிறார்கள். பழி வாங்குவதாகவோ அவமானப்படுத்துவதாகவோ எண்ணிக் கொண்டு, முதலில் தங்களின் மன அமைதிக்கு வழி வகையில்லாதபடி நடந்து கொள்கிறார்கள். எனவே இது நிரந்தரத் தீர்வு ஆகாது.

எக்கேடோ கெட்டுப் போகட்டும் என்று விலகியிருப்பவர்களை மேற்கூறியவர்கள் நிம்மதியாக இருக்க விடுவது இல்லை. மேலும் மேலும் பிரச்சினைகளை உண்டு பண்ணியபடி இருப்பார்கள். காலமெல்லாம் இவர்களால் தொல்லைதான்.

எனவே இதுவும் நிரந்தரத் தீர்வு ஆகாது.

இவர்களைச் சரி செய்ய வேண்டுமானால் விரோத வழியும் விலகிப் போகும்; வழியும் சரிப்பட்டு வராது. அப்படியானால் என்னதான் வழி?

இவர்களைச் சரி செய்ய முதல் கட்டமாக நம் கௌரவப் . போர்வையிலிருந்து வெளிப்பட்டு அதைச் சற்றே உதறி மடிக்க வேண்டும்.

ம்! என்னது! நான் இறங்கிப் போவதா இவனிடம்? என்கிற நினைப்பைத் தூக்கி எறிய வேண்டும்.

இறங்கிப் போவது என்பது இந்த விடயத்தில் இழுக்கு அல்ல. இறுதி வெற்றியை நாம் அடையப் போவதற்கான உத்தரவாதம் இது.

அவர்களுடன் எப்போதும் போல் இருந்து மனம் விட்டுப் பேசுவதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்கி அவர்களின் மனக்குறைகளை பரிவுடன் பரிசீலித்து அனுதாபம் காட்டி நடந்துகொண்டாலே பாதியளவு வழிக்கு வந்துவிடுவார்கள்.


பேசிக்கொண்டு இருந்தவர்களை அவர்களை பேசவைத்து ஓய வைத்து முடிந்தாயிற்றா என்று கேட்டு அவர்களைக் கேட்டுக் கொள்ளும்மனநிலைக்குக்கொண்டுசென்று நன்மைக்காகச் சொல்லப்படுவதை ஏன் அனர்த்தம் செய்து கொள்ள வேண்டும் என்பதை உணர்த்தி அவர்களது சிறுசிறு தேவைகளைப் பூர்த்தி செய்து தந்தால் இந்த மனிதரா இத்தனைகாலம் இவ்வளவு வம்பு பண்ணினார் என்று எல்லோருமே வியக்கும் வண்ணம் மாறிவிடு வார்கள்.

அன்பு, அனுதாபம், பரிவு,உதவிகள் ஆகியவற்றுக்கு மடங்கி விழாத மனிதனே உலகில் இருக்க முடியாது.

விரோதித்தும் விலகியும் சாதிக்க முடியாத அனைத்தையும் அனுசரித்து நட ந்தே சாதித்துவிட முடியும்.

**லேனா தமிழ்வாணன்**

# ஆனந்த வாழ்வளிக்கும் ஆதிரை தரிசனம்



இந்து சமயத்தின் முழு முதற் கடவுளான சிவபெருமானின் ஆடல் வடிவம் நடராஜ வடிவமாகும். அவரின் அந்த திருநடனத்தினால் இவ்வுலகம் சுழன்று கொண்டிருக்கிறது. சிவனுடைய நாட்டியக் கோலத்தை மனதில் நினைத்தால் விரிசடை, தூக்கிய திருவடி, முயலகளை மிதிக்கும், திருவடி, புலித் தோலாடை அணிந்து சிவகாமி சகிதம் ஆடுவதாகவே தோன்றும் சிவபெருமானின் ருத்திரதாண்டவம் உலகை அழிக்கும் என்றும் ஆனந்த தாண்டவம் உலகை காக்கும் என்று புராணங்கள் கூறுகின்றன. அவ் ஆடல் வடிவை சிறப்பிக்கும் வகை யில் வருடத்திற்கு ஆறுமுறை சிவனுக்கு விழாவாக சைவர்களால் கொண்டாடப் படுகிறது. இது வருடத்தில் வருகின்ற ஆறு திருவாதிரைகளின் போது அனுட்டிப்பதால் இறைவனுக்கு "ஆதிரையான்" என பெயர் கிடைத் தது. மார்கழி மாத திருவாதிரை நட்சத்திரத்துக்கு முன்னுள்ள ஒன் பது தினமும் திருவெம்பாவை என கொண்டாடப்பட்டு ஆதிரையன்று நடராஜரை அபிஷேகம் செய்வித்து தேரில் ஏற்றி கோவிலை வலம்வரச் செய்வர். இத்திருவாதிரை மகிமை பற்றி சங்கர சங்கிதை கூறுகின்றது. இந்த விரதத்தை அனுட்டித்ததால் வியாக்ர பாத முனிவருக்கு உபமன்யு கிடைத்ததாகவும் கார்க்கோடகன் பாம்பு வானுலகை அடையவும் அந்தணர் ஒருவர் மனித உடலோடு வானுலகம் சென்று திரும்பிவந்ததாகவும் புராணங்கள் கூறுகின்றன.

திருநாவுக்கரசர் திருவாரூரில் இடம் பெற்ற திருவாதிரை விழா வின் சிறப்பை பின்வருமாறு பாடியுள்ளார்.

"முத்து விதான மணிப்பொற் கவரி முறையாலே பக்தர்களோடு பாவையர் சூழப் பலிப்பின்னே வித்தகக் கோல வெண்டலை மாலை விரதிகள் அத்தனாரூ ராதிரை நாளாவது வண்ணம்"

எனவே நாமும் பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்களைப் போற்றி விரதமிருந்து மும்மலத்தை அறுத்து இவ்வையகத்தில் வாழ்வாங்கு வாழ்வோம்.

த.அபிநாத்
தரம்- 10
யாழ்.இந்துக்கல்லூரி

## கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள 3 பொலிஸ் நிலையங்களுக்கு எதிராக மக்களால் ஆறு முறைப்பாடுகள் பதிவு

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள 3, பொலிஸ் நிலையங்களுக்கு எதிராக பொது மக்களால் 6, முறைப்பாடுகள் யாழ்.மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ளதேசியபொலிஸ்ஆணைக்குழுவில் மேற் கொள்ளப்பட்டுள்ளதாக வட க்கு மாகாண தேசியபொலிஸ்ஆணைக்குழுவின் பணிப்பாளர் சு. சண்முகரட்ணம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் பொது மக்களால் இந்த முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதில் பொதுமக்களால் பொலிஸ் நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பா ட்டின் மீது எவ்விதமான நடவடிக்கைகளையும் பொலிஸார் மேற்கொள்ளவில்லை என்பதே பிரதான காரணமாக உள்ளது.

இந்நிலையில், கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திற்கு எதிராக 4 முறைப்பாடுகளும்மல்லாவி பொலிஸ் நிலையம் மற்றும் மாங்குளம் பொலிஸ் நிலை யம் ஆகியவற்றுக்கு எதிரா கவும் தலா ஒரு முறைப் பாடுகள் வீதம் 2 முறைப் பாடுகளுமாக மொத்தம் 6, முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (இ-15)

## பேருந்து பாலத்தில் மோதி விபத்து நடத்துநர் பலி! 27 பேர் படுகாயம்

(கொழும்பு)

கொழும்பிலிருந்து தனமல்வில நோக்கிச் சென்ற இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்து பாலத்தில் மோதி விபத்துக்குள்ளானது.

ரண வர்னாவ பாடசாலைக்கு அருகிலுள்ள பாலத்தில் மோதியே இந்த விபத்து நிகழ்ந்துள்ளது. இந்த அனர்த்தம் நேற்றுக்காலை இடம் பெற்றுள்ளது.



இந்த விபத்தில் 27 பேர் காயமடைந்துள்ளதுடன், நடத்துநர் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் காயம டைந்தவர்களில் 18 பேர் தனமல்வில வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விபத்தை ஏற்படுத்திய சாரதி அவ்விடத்தில் இருந்து தப்பிச் சென்றுள்ளதாகவும் அவரைக் கைது செய்வதற்கு பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.(இ-8)

# இலட்சனைகள் முக்கியமல்ல இலட்சியமே முக்கியம்–ஹக்கீம்

(கொழும்பு)

இலட்சனைகள் முக்கியமல்ல இலட்சியமே முக்கியமாகும் என, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலை வரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள காங் கேயனோடை பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வேட்பாளர் சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சில இடங்களில் தனித்து மரச்சின்னத்திலும், சில இடங்களில் ஐக்கிய தேசியக் கட்சியுடன்இணைந்துயானைச்சின்னத்திலும் போட்டியிடும்.

அதேபோன்றுமட்டக்களப்பு மாநகர சபை, ஓட்டமாவடி பிரதேச சபை மற்றும் வாகரை பிரதேச சபை போன்ற இடங்களில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சுயேட்சையாக போட்டியிடுகின்றது.

ஏறாவூரில் எமது அணிக்குள் இரண்டு அணிகள் வெவ்வேறு சின்னங்களில் போட்டியிடுகின்றனர். காத்தான்குடியில் முஸ்லிம் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து தராசு சின்னத்தில் போட்டியிடுகின்றது. இங்கு சின்னங்கள் முக் கியமல்ல இலட்சியங்கள் தான் முக்கியமான



தொன்றாகும்

நாம் மட்டக்களப்பு மாவட்டத்தில், மக்களோடு மக்களாக சமூகத்தில் பணியாற்றுகின்ற வேட்பாளர்களையே நிறுத்தியுள்ளோம்.

மண்முனைப் பற்று பிரதேச சபை தேர்தலில் காங்கேயனோடை வட்டாரத்தில் எமது வேட்பாளர் மதீனின் வேட்புமனு நிராகரிக்கப் பட்டிருந்தாலும், எமது சின்னமான மரச்சின்னம் நிராகரிக்கப்படவில்லை.

இங்கு மரச்சின்னத்திற்கு வாக்களித்து மரத்தினை வெற்றிபெறச் செய்யும் போது, நாம் மதீனை மண்முனைப் பற்று உறுப்பினராக தெரிவு செய்வோம்.

ஒரு வேட்பாளரின் வேட்புமனுப்பத்திரம் நிராகரிக்கப்படும் போது அந்தக் கட்சியின் சின்னம் இருக்கும் அந்த சின்னத்திற்கு அதிக வாக்குகள் அளிக்கப்படுமாக இருந்தால், மற்றைய கட்சியிலிருந்து உறுப்பினர் தெரிவு செய்யப்படுவதென்பது இங்கு ஒரு பிரச்சினையான விடயமாகும்.

இதனை தேர்தல் ஆணைக்குழுவின் கவனத்திற்கு கொண்டு சென்றதைப் போன்று கட்சியின் செயலாளர்களின் கூட்டத்திலும் இது தொடர்பில் கலந்துரையாடியுள்ளோம்.

தேர்தல் முடிந்தவுடன் எங்களுக்கு அவ்வாறான நிலைமை ஏற்படுமாக இருந்தால், நாங்கள் அதனை சட்டமா அதிபரை அணுகி சட்டத்தின் ஊடாக அவற்றை கையாள்வோம் எனத் தெரிவித்தார். (இ-7)

# காடுகளைப் பாதுகாக்க இராணுவ முகாம்களை அமைக்கத் தீர்மானம்

## அமைச்சர் காமினி தெரிவிப்பு



(கொழும்பு)

காடுகளைப் பாதுகாக்கும் நோக்கில் இராணுவ முகாம்களை அமைக்கவுள்ளதாக வனவிலங்கு பாதுகாப்பு அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா தெரிவித்துள்ளார். சிங்கள பத்திரிகை ஒன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் வனவிலங்கு அழிப்பு மற்றும் காட்டுப்பு தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடினேன். வனவிலங்கு சரணாலயங்கள் மற்றும் காடுகளை பாதுகாக்கும் நோக்கில் இராணுவ முகாம்களை அமைப்பதற்கு இந்த கலந்துரையாடலின் போது தீர்மானிக்கப்பட்டது.

2010 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பின் போது இலங்கையில் 50 வளர்ந்த தந்தங்களையுடைய யானைகள் காணப்பட்டன, எனினும் தற்பொழுது அந்த எண்ணிக்கை 30 ஆக வீழ்ச்சியடைந்துள்ளது. கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் வளர்ந்த தந்தங்களை உடைய ஐந்து யானைகள் கொல்லப்பட்டுள்ளன.

இலங்கைக்கு விஜயம் செய்யும் ஒரு தரப்பு சுற்றுலாப் பயணிகள் யானைத் தந்தங்களினால் செய்யப்பட்ட பொருட்களுக்கு அதிக விலை கொடுக்கின்றனர். இதனால் இவ்வாறு யானைகள் கொல்லப்படுகின்றன.

யானைகள் கொல்லப்படுதல், காடழிப்பு, வன விலங்குகள் வேட்டையாடப்படுதல் உள்ளிட்டனவற்றை கட்டுப்படுத்தும் நோக்கில் நாடு முழுவதிலும் வனவிலங்குப் பாதுகாப்பு பொலிஸ் பிரிவுகள், இராணுவப் பிரிவுகள், விமான மற்றும் கடற்படைப் பிரிவுகள் கடமையில் ஈடுபடுத்தப்பட உள்ளது.

தேசிய வனவிலங்கு பாதுகாப்புச் சரணாலயங்களை பாதுகாக்கும் நோக்கில் ஒவ்வொரு கிலோ மீற்றருக்கு ஒரு காவலரண் என்ற அடிப்படையில் பாதுகாப்பு வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளது என தெரிவித்தார். (இ-7)

# ரக்பி அணியிலிருந்து ஓரங்கட்டப்பட்ட நாமல்




(கொழும்பு)

கடந்த ஆட்சியின் போது தேசிய ரக்பி அணியின் ஆதிக்கம் ராஜபக்ஷர்களின் கைகளிலேயே இருந்தது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகன்களான நாமல் ராஜபக்ஷ மற்றும் யோசித ராஜபக்ஷ ஆகியோர் ரக்பி அணியின் பிரதான வீரர்களாக செயற்பட்டனர்.

எனினும் தற்போது நாமல் ராஜபக்ஷ ரக்பி அணியிலிருந்து ஓரங்கட்டப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ரக்பி அணியின் பிரதான வீரராக செயற்பட்ட நாமல் ராஜபக்ஷ தற்போது அணிக்கு உதவிகளை வழங்கும் மேலதிக வீரராக செயற்பட்டு வருகிறார்.

சீ.எச் மற்றும் எப்.சீ அணிகளுக்கும் கடற்படை அணிக்கும் இடையில் கடந்த 30 ஆம் திகதி ரக்பி போட்டி இடம் பெற்றுள்ளது.

அங்கு நாமல் உதவிகளை செய்து கொடுக்கும் மேலதிக வீரராகவே செயற்பட்ட புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் பரவி வருகிறது.

இலங்கையின் சமகால அரசியல் நிலவரப்படி ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியுடன் மீண்டும் இணைந்து கொள்ளும் தீவிர முயற்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஈடுபட்டுள்ளார்.

இந்த நடவடிக்கைக்காக கூட்டு எதிர்க்கட்சி கடந்த இரண்டு வருடங்களாக முயற்சிகளை மேற்கொண்டு வரும் போதும், இந்த வருடத்திலாவது இணைவு சாத்தியமாக வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாமலுக்கு தேசிய அரசாங்கத்தில் இடம் உண்டா? இல்லையா? இன்னும் ஒரு சந்தர்ப்பம் வழங்கப்படுமா என்பது தொடர்பிலான கேள்விகளுக்கு பதில் உள்ளூராட்சி தேர்தலுக்கு பின்னரே கிடைக்கும் என கூறப்படுகின்றது. (இ-8)

# தபால்மூல வாக்களிப்பு அட்டைகள் 11-ம் திகதி கையளிக்கப்படவுள்ளன

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு அட்டைகள் இம்மாதம் 11ஆம் திகதி கையளிக்கப்படவுள்ளது.

இதன்படி குறித்த அட்டைகளுக்கான ஆவணப் பரிசோதனைகள் தற்போது மாவட்ட தேர்தல் அலுவலகங்களில் இடம்பெறுவதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் செயலாளர் நாயகம் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார். இதுகுறித்து கருத்துத் தெரிவித்த அவர்,

"உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு இந்த மாதம் 25,26ஆம் திகதிகளில் இடம் பெறவிருப்பதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை விநியோகிக்கும் நடவடிக்கை எதிர்வரும் 18ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. வாக்குகள் எண்ணும் பணி வாக்களிப்பு நிலையங்களில் இடம்பெறுவதால் இது தொடர்பில் அதிகாரிகளுக்கு பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளன. தேர்தல் முறைப்பாடுகளை ஏற்றுக் கொள்வதற்காக தேர்தல் செயலக அலுவலகத்திலும் மாவட்ட தேர்தல் அலுவலகங்களிலும் பிரிவொன்று அமைக்கப்பட்டுள்ளது" என்றார்.

இதேவேளை நாட்டின் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் எதிர்வரும் பெப்ரவரி மாதம் பத்தாம் திகதி நடைபெறவுள்ளது. இதற்காக நாடு முழுவதும் பல கட்சிகள் வேட்பு மனுத் தாக்கல்களைச் செய்துள்ள நிலையில் பிரசார நடவடிக்கைகளைத் தொடங்கியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஐரோப்பாவாக மாறும் இலங்கை! 25000 வெளிநாட்டவருக்கு அனுமதி

இலங்கையில் பல்வேறு பணிகளில் 25000 வெளிநாட்டவர்கள் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அவற்றில் இந்தியா மற்றும் சீனா முதலிடம் பிடித்துள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டு ஆணையாளர் நிஹால் ரணசிங்க தெரிவித்துள்ளார். பல நாடுகளில் உள்ள தொழில் வல்லுநர்கள் பல்வேறு தொழிற்றுறைகளில் பல்வேறு வேலைத்திட்டங்களில் இலங்கையில் வேலை செய்து வருவதாக அவர் தெரிவித்தார்.

மேலாளர்கள், மூத்த நிர்வாகிகள், இளநிலை நிர்வாகிகள், திறமையான தொழிலாளர்கள் மற்றும் உதவி ஊழியர்கள் ஆகியோருக்கு தங்கள் வேலையின் தேவைகளைப் பொறுத்து நாட்டில் வேலை செய்யும் குடியுரிமை விசாக்கள் அல்லது தொழில் விசாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

பல்வேறு துறைகளில் முதலீட்டு சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள், துறைமுக நகரங்கள் போன்ற அரசாங்க திட்டங்கள், கொழும்பு நகரத்தில் உள்ள பெரிய வணிக நிறுவனங்கள் மற்றும் வானளாவிய கட்டுமானங்கள் ஆகியவை அடங்கும்.

நாட்டின் வெளிநாட்டு அபிவிருத்தி நடவடிக்கைகளை கருத்தில் கொண்டு இந்த வெளிநாட்டு நிபுணர்களுக்கான குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் விசாவுக்கு அனுமதி வழங்கியுள்ளதென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கையிலுள்ள பலர் ஐரோப்பிய நாடுகளில் வேலை செய்வதற்கு அங்கு செல்ல முயன்று வருகின்றனர். இந்நிலையில் இலங்கையில் பணியாற்ற வெளிநாட்டவர்கள் விருப்பம் வெளியிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-8)

# தேர்தலில் பாதாள உலகக்குழுக்கள்?

இதற்கு முன்னர் மக்கள் பிரதிநிதிகளான நபர்கள் பின்னாளில் குற்றவாளிகளாக மாறியதாகவும் இம்முறை பெயர் பெற்ற குற்றவாளிகள் வேட்பாளர்களாக களமிறக்கப்பட்டுள்ளமை முன்னைய நிலைமையை விட அபாயகரமானது என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

சிவில் அமைப்புகள் மட்டுமல்லாது தேர்தல் ஆணைக்குழுவின் தலைவரும் இது பற்றி நேரடியாக கூறியுள்ள போதிலும் ஏழு முதல் எட்டு குற்றவியல் வழக்குகளுடன் தொடர்புடைய நபர்களுக்கு இரண்டு பிரதான கட்சிகள் வேட்புமனுக்களை வழங்கியுள்ளன எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இவ்வாறு குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் கிராமத்தின் மக்கள் பிரதிநிதிகளாக தெரிவுசெய்யப்பட்டால், அழிவான நிலைமை ஏற்படுமே அன்றி ஜனநாயக சூழலை எதிர்பார்க்க முடியாது.

இதனால், மக்கள் இப்படியான குற்றவாளிகளை தெரிவு செய்யக் கூடாது எனவும் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதனிடையே உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகளுக்கு உதவிகளை வழங்க தயாராக இருக்கும் 10 பிரதான பாதாள உலகக் குழுக்கள் குறித்து பாதாள உலகக்குழுக்களை அடக்கும் பிரிவினர் கடும் அவதானிப்புடன் இருந்து வருகின்றனர்.

குறிப்பாக கொழும்பு தெற்கு பகுதியின் அரசியல்வாதிகளின் பாதுகாப்பை பெற்றுள்ள பாதாள உலகக்குழுக்களின் தலைவர்கள் தேர்தல் காலத்தில் வெளியில் வரலாம் என்ற அனுமானத்துடன் பாதாள உலகக்குழுக்களை அடக்கும் பிரிவினர் உன்னிப்பாக கண்காணித்து வருவதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 2015 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த இரண்டு பாதாள உலகக்குழு தலைவர்களான புளூமெண்டல் சங்கா மற்றும் ஆமி சம்பத் ஆகியோரை இலக்கு வைத்து, கொழும்பை சேர்ந்த முன்னணி அரசியல்வாதியின் பாதுகாப்பைப்பெற்ற பாதாள உலகக்குழு தலைவரான தெமட்டகொட சமிந்தவின் குழுவினர் துப்பாக்கி பிரயோகம்செய்தனர்.

இம்முறை தேர்தலில் பாதாள உலகக் குழுக்களுக்கிடையில் மோதல் ஏற்படும் வாய்ப்புள்ளதால், பொலிஸாரும் அதிரடிப்படையிரும் பாதாள உலகக்குழுக்களின் நடமாட்டத்தை அவதானித்து வருகின்றனர்.

கொழும்பில் பாதாள உலகக்குழுக்களை வழிநடத்தும் தெமட்டகொட சமிந்த, அங்கொட லொக்காவின் குழுவினர் உள்ளிட்ட சில பாதாள உலகக்குழுக்கள் மற்றும் தென் பகுதியில் பாதாள உலகக்குழுக்களை வழிநடத்தும் மாகந்துரே மதுஷ், கொஸ்கொட சுஜீ, கொஸ்கொட தாரக, அம்பலாங்கொடையை தளமாக கொண்டு இயங்கும் மேலும் சில பாதாள உலகக்குழுக்கள் பல வேட்பாளர்களுக்கு உதவ தயாராகி வருவதாக பாதாள உலகக்குழுக்களை அடக்கும் பிரிவினருக்கு தகவல் கிடைத்துள்ளது. (இ-8)

## போதைக்கு அடிமை

# 2012 தொடக்கம் 2017 வரை 88916 பேருக்கு புனர்வாழ்வு

(கொழும்பு)

2012ஆம் ஆண்டு தொடக்கம் 2017ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள்போதை தொடர்பான குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடைய 88916 பேர் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமூக திருத்தங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் நீதிமன்றங்கள் ஊடாக இவர்கள் புனர்வாழ்வுக்காக அனுப்பப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் அமைச்சின் கீழ் இயங்கும் சமூக திருத்தங்கள் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாடுபூராகவும் உள்ள நீதவான் நீதிமன்றங்கள் மட்டும் சுற்றுலா நீதிமன்றங்கள் 125 இன் ஊடாக போதை தொடர்பான குற்றச்சாட்டுக்கு உள்ளான 88916 பேருக்கும் புனர்வாழ்வளிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-8)

# அரசியல்வாதிகளின் அற்ப செயலுக்கு இளைஞர்கள் பலியாகின்றனர்


## ஷிப்லி பாறூக் கவலை

(கொழும்பு)

அரசியல்வாதிகளின் அற்ப சொற்ப அரசியல் வாழ்க்கைக்கு இளைஞர் சமுதாயம் பலியாகின்றது என கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஷிப்லி பாறூக் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகரித்துவரும் போதைப் பொருள் சார்ந்த குற்றச்செயல்கள் பற்றி சமூகத்திற்கு விழிப்பூட்டும் வகையில் நேற்று ஊடகங்களுக்கு தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"போதையை ஒழிக்க வேண்டும், போதைக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும் என்று சொல்லுகின்ற எந்த அரசியல்வாதியாவது இவற்றை தடுப்பதற்கு இறுக்கமான சட்டங்களை நடைமுறைப்படுத்த உதவியதுண்டா? அல்லது சட்டங்களை இன்னும் இறுக்கமாக இயற்றும் அதிகாரம் கொண்ட நாடாளுமன்றத்தில் உரையாற்றி, அதற்கான தீர்க்கமான சட்டத்தினை இயற்ற முயற்சித்ததுண்டா?



சில அரசியல்வாதிகளும், அரசியல் அதிகாரம் கொண்ட நபர்களும் தங்களது அதிகாரத்தினை ஒரு சமூகம் அழியும் செயற்பாட்டிற்கும், தங்களது அரசியல் இலாபங்களுக்காகவும் மாத்திரம் பயன்படுத்திக்கொண்டு மனித சமூகத்தினை சீரழிக்க போதை மாத்திரை வியாபாரிகளுடன் கைகோர்த்து நிற்கின்றனர்.

இவ்வாறான, செயற்பாடுகளை இன்னும் நமது பிரதேசங்களில் இருந்து நீக்காவிட்டால் அதனால் பாதிக்கப்படப் போவது அப்பிரதேசங்களிலுள்ள எதிர்கால அப்பாவி சமூகந்தான் என்பதை நினைவிலிருத்திக் கொள்ள வேண்டும்.

எனவே போதைப் பொருளுக்கெதிராக அனைவரும் அணிதிரள வேண்டும். பிரதேசங்களை மையப்படுத்தி சிந்தித்து செயற்படக்கூடிய செயற்பாட்டாளர்கள் ஒன்றிணைந்து பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்கி நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# புத்தாண்டு தினத்தில் அரசு ஊழியர்களுக்கு மகிழ்ச்சியான தகவல்

## அதிகரிக்கப்படும் சம்பளம்

(கொழும்பு)

இலங்கை அரசாங்க ஊழியர்களின் அடிப்படை சம்பளம் 2500 ரூபாவினால் அதிகரிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

2016ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம்ஆண்டு வரை வருடாந்தம் 2500 ரூபாய் என்ற கணக்கில் 4 கட்டங்களில் அரசாங்க ஊழியர்களின் அடிப்படை சம்பளத்தை 10000 ரூபாவரை அதிகரிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதற்கமைய மூன்றாம் கட்ட சம்பளம் அதிகரிப்பு நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

2015ஆம்ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதி அதிகாரத்திற்கு வந்த நல்லாட்சி அரசினால் 14 இலட்சம் அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை 10000 ரூபாவரை அதிகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டது.

முதலில் 2500 ரூபாய் அரச ஊழியர்களின் சம்பளத்துடன் இணைக்கப்பட்டது. 2016ஆம் ஆண்டு முதல் இந்த 2500 ரூபாய் பணத்தை அடிப்படை சம்பளத்துடன் இணைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அதற்கமைய இந்த வருடத்தின் ஆரம்ப நாளான நேற்று முதல் அரசாங்க ஊழியர்களின் அடிப்படை சம்பளத்துடன் மூன்றாம் கட்டமாக 2500 ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

இவ்வாறான முறையில் அரசாங்க ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்துடன் இந்த கொடுப்பனவு இணைக்கப்படுவதனால், ஓய்வு பெறும் அரசாங்க ஊழிய்ர்களுக்கும் பல்வேறு சலுகைகள் வழங்கப்படவுள்ளதாக திறைசேரி அறிவித்துள்ளது.

அடிப்படை சம்பளம் அதிகரிக்கப்படுகின்றமையினால் அரசாங்க ஊழியர்களின் மேலதிக கொடுப்பனவுகள் அதிகரிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-8)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1293

### சாளினி

ஓ... இதுக்கு பேருதான் கட்டையில போறதோ



### சந்துரு

பயபுள்ள இலங்கையை வல்லரசா ஆக்காம வெளிய வரமாட்டான் போல...



### மேரி

அழகில்லாத ஆண்களை இறைவன் இன்னும் படைக்கவில்லை



ரசனை இல்லாத கண்களைதான் சில பெண்களுக்கு படைத்து விட்டான்...

### சாந்தினி


இப்பலாம் யாரும் நல்ல நேரம் பாத்து வெளிய கிளம்புறதில்லை...



மொபைல் பட்டறியில் புல் சார்ஜ் ஆன பிறகுதான் வெளியேறுறாங்க...

### வெனிசி


வாழப்போறது 50 வருசம். இதுல படிச்சே 25 வருசத்தை காலி பண்ணனுமாம்



எவன்டா கண்டுபிடிச்சது இந்த படிப்பை எல்லாம்... டாமிட்

### கௌதம்

சிஸ்டர்... ஒருத்தர்தானே தீக்குளிச்சாரு... ரெண்டு பேஷன்ட் இருக்காங்க..."




இன்னொருத்தர் செல்ஃபி எடுக்கப் பார்த்தார் டாக்டர்

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ‘முத்தலாக்’ நடைமுறையிலிருந்து முஸ்லிம் பெண்கள் விடுதலை

## பிரதமர் மோடி தெரிவிப்பு



(டில்லி)

முத்தலாக் நடைமுறையிலிருந்து முஸ்லிம் பெண்கள் விடுதலை பெற்றுள்ளனர் என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

கேரள மாநிலம் வர்கலாவிலுள்ள சிவகிரி மடத்தில் 85 ஆ வது சிவகிரி யாத்திரை கொண்டாட்டங்களை பிரதமர் மோடி நேற்று முன்தினம் டில்லியிலிருந்தவாறு வீடியோ கான்பரன்ஸ் மூலம் தொடங்கி வைத்தார்.

அப்போது அவர் பேசும் போது அண்மையில் நாடாளுமன்ற மக்களவையில் நிறைவேறிய முத்தலாக் சட்ட மசோதா முஸ்லிம் பெண்கள் திருமண உரிமைகள் பாதுகாப்பு மசோதா குறித்து மறைமுகமாகச் சுட்டிக் காட்டினார்.

அவர் கூறுகையில், உடனடி முத்தலாக் ஒரே நேரத்தில் 3 முறை கூறுதல் நடைமுறையால் முஸ்லிம் பெண்கள் நீண்டகாலமாக இன்னல்களை அனுபவித்து வந்தனர். தற்போது இதற்கு முடிவு கட்டும் விதமாக அந்த பழக்கத்தில் இருந்து அவர்கள் தாங்களாகவே விடுதலை பெறுவதற்கு வழி முறை காணப்பட்டுள்ளது என்றார்.

2018 இல் நாட்டை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்வதற்கு மக்கள் அனைத்து வழிகளிலும் ஒத்துழைத்து பணியாற்ற வேண்டுகிறேன். அதற்காகத்தான் எனது அரசு கறுப்புப்பண ஒழிப்பு , ஊழல் பினாமி சொத்து தடுப்பு, பயங்கரவாதம் போன்றவற்றில் பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இந்த புத்தாண்டில் மந்திரச் சொல் சீர்திருத்தம் சிறப்பாக செயற்படுதல், மாற்றத்தை ஏற்படுத்துதல் என்பதாக இருக்கட்டும் அனைவரும் ஒன்றிணைவோம் அனைவரும் வளர்ச்சிகாண்போம் என்றும் அவர் தெரிவித்தார். (இ)

## விமானம் கடலில் மூழ்கியதில் பயணம் செய்த 6 பேர் பலி!



(மெல்போர்ன்)

அவுஸ்திரேலியாவில் புது வருடக் கொண்டாட்டத்தினை முன்னிட்டு கடலில் விமானத்தில் பயணம் செய்ததில் விபத்து ஏற்பட்டு 6 பேர் பலியாகினர்.

அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் புதுவருடத் தினை முன்னிட்டு அதனை கொண்டாடுவதற்காக கடல் விமானத்தில் சிலர் பயணம் செய்துள்ளனர். 20 நிமிடங்கள் வரையிலான இந்த பயணத்தில் கடல் விமானம் கோவன் என்ற பகுதியருகே நீருக்குள் 13 மீற்றர் ஆழத்தில் மூழ்கியது.

இந்த சம்பவத்தில் அதில் பயணம் செய்த 6 பேர் பலியாகினர்.

நீருக்குள் மூழ்கிய கடல் விமானத்தினை மீட்கும் பணியில், அவுஸ்திரேலிய போக்குவரத்து பாதுகாப்பு கழகத்துடன் இணைந்து பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (இ-8)

# அரசியல் யுகங்களில் ஏற்கனவே வெற்றி கண்டவர் தான் ரஜினி

## ஜி.கே.வாசன் சுட்டிக்காட்டு



(திருவண்ணாமலை)

சுப்பர் ஸ்ரார் ரஜினிகாந்த் பல நேரங்களில் அரசியல் யுகங்களில் வெற்றி கண்டுள்ளார் என திருவண்ணாமலையில் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் தலைவர்ஜி.கே. வாசன்தெரிவித்தார்.

திருவண்ணாமலையில் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜி.கே. வாசன் நேற்று முன்தினம் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

நடிகர் ரஜினிகாந்த் அரசியலுக்கு வருவதை தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி வரவேற்கிறது. ரஜினிகாந்த் அரசியல் அறிவிப்பு வெளியிட வேண்டும் என்று சில ஆண்டுகளாகவே பல துறையைச் சேர்ந்தவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஜனநாயகத்தில் ஒரு கட்சி தொடங்குவதும், மக்களைச் சந்திப்பதும் புதிது அல்ல. யாரும் அதற்கு தடையாகவோ, இடையூறாகவோ இருக்க முடியாது.

அதேநேரத்தில் மக்கள் பணியினை அவர்களுடைய எண்ணங்களுக்கு ஏற்றாற் போல் செய்தால் அதற்கான அங்கீகாரம் கிடைக்க வாய்ப்பு உள்ளது. ரஜினிகாந்த் பல நேரங் களில் அரசியல் யுகங்களில் வெற்றி கண்டு உள்ளார். ரஜினிகாந்த் அரசியல் ஆழம் தெரிந்தவர். அவரை யாரும் இயக்க முடியாது என்பது எனது கருத்து.

உள்ளாட்சி தேர்தல் என்பது முக்கிய தேர்தல். உள்ளாட்சி தேர்தலில் இடைதேர்தல் போன்று ஒரு போதும் நடக்கக்கூடாது. பொதுவாக தேர்தல் ஆணையத்தை பொறுத்தவரையில் தேர்தல் சீர்திருத்தங்களை கொண்டு வர வேண்டும். தேர்தல்கள் மக்களின் நம்பிக்கைக்கு ஏற்றவாறு நடைபெறுவதைவிட சந்தேகத்திற்கு ஏற்றவாறு நடக்கிறது என்ற மனநிலை ஏற்பட்டு உள்ளது.

இது மாற்றப்பட வேண்டும். எதிர்வரும் 8 ஆம் திகதி தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் மாவட்ட தலைவர், பொறுப்பாளர்கள் கூட்டம் சென்னையில் நடைபெற உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். - (இ)

## 10 வயது சிறுவனை வேலைக்கமர்த்திய இருவர் கைதாகினர்



பண்டாரகம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பண்டாரகம பிலியந்தலை வீதியில் ஹார்ட்வெயார் ஒன்றில் 10 வயது சிறுவனை வேலைக் கமர்த்திய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் 12.05 மணியளவில் சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள் ளனர்.

119 என்ற அலைபேசி இலக்கத்திற்கு கிடைத்த முறைபாட்டிற்கு அமைய பத்தேகொடவைச் சேர்ந்த 34 வயது நபரும், ஹார்ட்வெயார் நிறுவனத்தின் உரிமையாளரான 55 வயதுடைய நபரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (இ-7)

# லொறி - பேருந்து விபத்து 30 பேர் பரிதாபமாகப் பலி

(நைரோபி)

கென்யா நாட்டின் மத்திய பகுதியில் நேற்று முன்தினம் காலை எதிர்த்திசையில் வந்த லொறி மீது பேருந்து மோதிய விபத்தில் 30 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.



கிழக்காபிரிக்க நாடுகளில் ஒன்றான கென்யாவில் மோசமான வீதிகள் மற்றும் சரியான பராமரிப்பு இல்லாத வாகனங்களால் ஆண்டுதோறும் வீதி விபத்துகளில் சுமார் 3 ஆயிரம் பேர் பலியாகி வருகின்றனர்.

இந்நிலையில், கென்யாவின் மேற்கு பகுதியில் உள்ள புசியா நகரில் இருந்து சென்ற பேருந்து நேற்று முன்தினம் அதிகாலை நாகுரு-எல்டோரெட் நெடுஞ்சாலை வழியாக வந்தபோது எதிர்த்திசையில் நாகுரு நகரில் இருந்து வேகமாக வந்த லொறி பேருந்தின் மீது பயங்கரமாக மோதியது.

இந்த விபத்தில் இரு வாகனங்களின் சாரதிகள் உட்பட 30 பேர் உயிரிழந்தனர். 16 பேர் காயமடைந்தனர்.

படுகாயங்களுடன் சிகிச்சை பெற்று வரும் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் இவ்விபத்தின் பலி எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது. (இ-8)

## புத்தாண்டில் பெருந்தொகை மதுபானத்துடன் ஒருவர் கைது

ஹற்றன் - வெலியோயா பகுதியில் சட்டவிரோதமாக அனுமதிப் பத்திரமின்றி மதுபானம் விற்பனை செய்து வந்த ஒருவர் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

பெருந் தொகை மதுபான போத்தல்களும் இவர் வசம் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் இன்று ஹற்றன் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட உள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹற்றன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# யாழ்., முல்லை. மரணங்கள் குறித்து முறையான விசாரணைக்குப் பணிப்பு

## சுகாதார அமைச்சர் ராஜித

(கொழும்பு)

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்களில் கடந்த மூன்று மாத காலமாக பதிவான மரணங்கள் குறித்து முறையான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு சுகாதார அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன அபாயகர நோய் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் அனில் திசாநாயக்கவுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.



இதற்கமைவாக, வடமாகாணத்தில் சுகாதார அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் ஆரம்ப விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த விசாரணைகளுக்கு அமைவாக இந்தக் காலப்பகுதியில் ஏற்பட்ட மரணங்கள் அனைத்தும் தெளிவான நோய் நிலைமை காரணமாக இடம்பெற்றதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மரணங்கள் அனைத்தும் பல்வேறு நோய்கள் காரணமாக ஏற்பட்டமை வைத்திய ஆதாரங்களுடன் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. இந்த மரணங்கள் ஒரு குடும்பத்திலோ அல்லது அவர்களது உறவினர்கள் மத்தியிலோ ஏற்படவில்லை.

சம்பந்தப்பட்ட மரணங்கள் அடையாளம் காணப்படாத நோயினால் இடம்பெற்றிருப்பதாக பரவும் வதந்தியில் எந்தவித உண்மையும் இல்லை என்பது விஞ்ஞான ரீதியில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அபாயகர நோய் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது. (இ-7)

## அவிசாவளை, நாப்பாவலயில் வீடு தீக்கிரை





(கொழும்பு)

அவிசாவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாப்பாவல, வியாவல் பிரதேசத்திலுள்ள இரு மாடி வீடொன்று திடீரென தீப்பிடித்துக் கொண்டதில் வீடு முற்றாக சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஹாரிஸ் ஹாஜியார் என்பவருக்குச் சொந்தமான வீடே இவ்வாறு தீப்பற்றியுள்ளது. விழாக்களை அலங்கரிக்கும் பொருட்களை களஞ்சியப்படுத்தி வைத்திருந்த பகுதியிலேயே தீ ஏற்பட்டுள்ளதாக அவிசாவளைப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை நேரத்தில் இந்த தீ ஏற்பட்டுள்ளது. இவ்விபத்தில் உயிர் ஆபத்துக்கள் இல்லை.

அவிசாவளை பொலிஸாரும், பிரதேச வாசிகளும், இரத்தினபுரி நகர சபை தீயணைப்பு ஊழியர்களும் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளை அவிசாவளை பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

## வீதிப்புனரமைப்பு ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

வரணி உப அஞ்சல் அலுவலகத்திலிருந்து இடைக்குறிச்சி மேற்கு வரையிலான சுமார் 212 மீற்றர் வீதி கடந்த 10 வருடங்களுக்கு மேலாக புனர்மைக்கப்படாதிருந்த நிலையில் தற்போது புனரமைக்கப்பட்டு வருவதால் இவ் வீதி புனரமைப்பிற்குதவிய அனைவருக்கும் பிரதேச மக்கள் நன்றி தெரிவித்துள்ளனர். (இ-10-103)

## ஒரு கிலோ தங்கத்துடன் சீனப் பிரஜை கைது



(கொழும்பு)

ஒரு கிலோ கிராம் தங்கக் கட்டியை சட்டவிரோதமாக ஹொங்கொங் கொண்டு செல்ல முயற்சித்த ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹொங்கொங் நோக்கி புறப்பட்டுச் செல்வதற்கு கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு நேற்றுக் காலை 6.30 மணிக்குச் சென்றிருந்த சீனப் பிரஜையே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் இருந்து கைப்பற்றிய தங்கத்தின் பெறுமதி 65 இலட்சம் ரூபா என சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர். குறித்த சீனப் பிரஜையை தடுத்து வைத்து விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, இலங்கையில் இருந்து கடல் வழியாகவும், விமானங்கள் மூலம் தொடர்ந்தும் தங்கம் கடத்தப்பட்டு வருவதாக சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (இ-8)

## கையா, மொட்டா இன்று தெரியவரும்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ஷ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலேயே தொடர்ந்து அங்கம் வகிப்பாரா அல்லது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இணைந்துகொள்வாரா என்பது தொடர்பில், இன்று தெரியவருமென தகவல் வெளியாகியுள்ளது.

கையை விட்டுவிட்டு, மொட்டில் இணைந்துகொள்வாராயின், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து அவர் விலகக்கூடுமென, அந்தத் தகவல் தெரிவிக்கின்றது.

இதற்கமைய, சுதந்திரக் கட்சியுடன் தொடர்ந்து இருப்பதா, இல்லையா என்பது தொடர்பாக, உத்தியோக பூர்வமான அறிவித்தலை, மகிந்த ராஜபக்ஷ இன்று வெளியிடுவாரென அத்தகவல் மேலும் தெரிவித்துள்ளது.



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியுடன் இணைந்து போட்டியிடும் கட்சிகள் இணைந்து ஒன்றிணைந்த பொதுஜன பெரமுன என்ற புதிய கூட்டணியை அமைக்கவுள்ளது. இதற்கமைய, இந்த முன்னணியின் தலைமைப் பொறுப்பை மகிந்த ராஜபக்ஷவே ஏற்கவேண்டுமென வலியுறுத்தப்பட்டு வந்தன.

இதற்கமைய, அந்த முன்னணிக்குத் தலைமை தாங்குவதற்கு, மகிந்த ராஜபக்ஷவும் இணக்கம் தெரிவித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

## இராணுவத்தினரை பயன்படுத்தி விவசாயம் செய்யத் திட்டம்!

### இராணுவத் தளபதி லண்டனில் தெரிவிப்பு



(கொழும்பு)

எதிர்காலத்தில் இராணுவத்தினரை விவசாய நடவடிக்கையில் ஈடுபடுத்தப் போவதாக இராணுவத் தளபதி லெஃப்டினன் ஜெனரல் மகேஸ் சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

லண்டன் நகரில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இராணுவத்தினரை பயன்படுத்தி எதிர்காலத்தில் வில்பத்து பிரதேசத்தில் விவசாய நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

வில்பத்து பிரதேசத் தில் அமைச்சர் ஒருவரினால் மேற்கொள்ளப்பட்டுவரும் சட்டவிரோத குடியேற்றம் தொடர்பான சர்ச்சை நிலவுகிறது.

அதற்கு இந்த வருடம் தீர்வை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார். (இ-7)

## வலம்புரி சங்குடன் நால்வர் கைது

(கொழும்பு)


டைட்டேரியன் வர்க்கத்திலான வலம்புரி சங்கினை 4 கோடி ரூபாய்க்கு விற்க முயற்சித்த நால்வர் வத்தளை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வத்தளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாபோலை பகுதியில் வைத்து நேற்று முன்தினம் இரவு 8.40 மணியளவில் குறித்த சந்தேகநபர்களை கைது செய்ததாக வத்தளை பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 31, 34, 36 மற்றும் 37 வயதானவர்கள் எனவும், இவர்கள் மருதானை, வெல்லம்பிட்டி, கிராண்ட்பாஸ் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)




# குருவின் சமயோசிதம்



"நினைத்துப் பார்த்தால் நெஞ்சு கொதிக்கிறது சாமி. எத்தனை பேர் என்னை கேலி செய்து இருக்கிறார்கள்? எத்தனை பேர் வசை பாடி இருக்கிறார்கள்?

எத்தனை பேர் என் முதுகில் குத்தி இருக்கிறார்கள்? அவர்கள் ஒவ்வொருவரையும் பழி வாங்காமல் ஓய மாட்டேன்" என்று அந்த சாமியார் முன் வந்து பொருமினான் ஒரு சீடன்.

"ஏதாவது மந்திரம் கிந்திரம் இருந்தா சொல்லுங்க சாமி" என்றான்.

சாமி யோசித்தார். "சரி ஒன்று செய்யலாம்" என்று கோணிப்பையை சீடன் கையில் கொடுத்தார் சாமி.

"நீ யாரையெல்லாம் பழி வாங்க வேண்டும் என நினைக்கிறாயோ, அவர்கள் பெயரை ஒரு உருளைக் கிழங்கில் செதுக்கி இந்த கோணிப் பையில் போட்டுக் கொண்டே வா" என்றார்.

"ஆனால் இரண்டு நிபந்தனைகள்" என்று தொடர்ந்தார். "ஒரு உருளைக்கிழங்கில் இரண்டு மூன்று பெயர்களை செதுக்கக் கூடாது. ஒவ்வொரு பெயரையும் தனித் தனியாய் செதுக்க வேண்டும்"

"சரி! அப்புறம்?" "நீ எங்கெல்லாம் போகிறாயோ அங்கெல்லாம் இந்த கோணியை தூக்கி கொண்டு போக வேண்டும்"

"இவ்வளவு தானா? நான் என்னமோ பெரிசா ஏதோ சொல்லப் போறீங்கன்னு நினைச்சேன்" என்று சீடன் எழுந்து போனான். அன்றிலிருந்து யார் மீதெல்லாம் ஆத்திரமோ யார் யாரை பழிவாங்க வேண்டும் என்று நினைப்பு வருகிறதோ, அப்போதெல்லாம் ஒரு உருளைக் கிழங்கை எடுத்து பெயரை செதுக்கி கோணிப்பையில்போட்டுக்கொண்டே வந்தான்.

ஆரம்பத்தில் கோணியை தூக்கி கொண்டு திரிவது ஒன்றும் பெரிய சிரமமாய் தெரியவில்லை.

ஆனால் நாளாக. நாளாக, அது சுமையாக தோன்றியது. இன்னும் கொஞ்சநாள் போனதும் தூக்குவதே சிரமமாகிவிட்டது. இதனிடையே சில நாட்களுக்கு பின் அந்த உரித்த உரு, ளைக் கிழங்குகளிலிருந்து வாசனை வர ஆரம்பித்தது. நாள் போக போக அது சகிக்க முடியாத அழுகிய நாற்றமாக வீச ஆரம்பித்தது.

அவன்மூட்டையை தூக்கிகொண்டு வந்தாலே, எல்லோரும் நெருங்கிய நண்பர்கள், கட்டிய மனைவி, பெற்ற பிள்ளைகள் என எல்லோரும் ஓட ஆரம்பித்தார்கள்.

அவனிடம் பேசவோ. அவன் சொல்வதை யாரும் காதுகொடுத்து கேட்கவோ கூட தயாராக இல்லை. சீடன் மறுபடியும் சாமியிடம் வந்தான்.

"என்ன சாமி இப்படிப் பண்ணிட்டீங்களே...?" என்றான். "என்ன புரிந்தது?" என்றார் சாமி.

"பழி வாங்கும் குரோத உணர்வை சேகரித்துக் கொண்டே வந்தால் அது சுமையாகி விடும்.

துர்நாற்றம் வீசும். யாரும் பக்கத்தில் வர மாட்டார்கள். அதை எனக்கு விலக்கத்தானே இப்படி செய்தீர்கள்?" என்றான் சீடன். "ம்! சரி. ஆனால் நீ இன்னும் முழுக் கிணற்றை தாண்டவில்லை" என்றார் சாமி. "புரியலையே?"

"உன் பிரச்சினை சுமை கூடி போச்சே என்பதும் நாற்றமடிக்கிறதே என்பதும் தான் என நீ நினைக்கிறாய், இல்லையா?" "ஆமாம்"

"சரி! அந்த உருளைக்கிழங்குகளை அவ்வப்போது கொட்டி அந்த கோணியை காலி செய்து கொண்டே வந்தால் இந்த சுமைப் பிரச்சினை, நாற்றப் பிரச்சினை தீர்ந்து விடும் என்று நினைக்கிறாய் இல்லையா?"

ஆமாம் மகனே. பிரச்சினை உருளைக்கிழங்கில் இல்லை. கோணிப்பை?!

கோணி இருப்பதால் தானே அதில் உருளைக்கிழங்கை சேர்க்க ஆரம்பித்தாய்?

எனவே, உனக்கு சுமை இல்லாமல் இருக்க வேண்டுமானால், அந்த சுமை நாற்றம் எடுக்காமல் இருக்க வேண்டுமானால் கோணியை முதலில் தூக்கி எறி. உனக்கு துன்பம் இழைத்தவர்கள் தண்டனை பெற்றே தீருவார்கள்... நீ உன் வேலையில் கவனம் செலுத்தி உன் கடமையை சரியாக செய்து வா...என்றார்..

ஆம், நண்பர்களே... கைவிட வேண்டியது பழிவாங்கும் நினைப்பை மட்டுமல்ல, பழி வாங்கும் மனதையும் கூடத்தான்.

"மறக்க வேண்டியவைகளை மறக்காமல் நினைத்திருப்பதும்... மறக்க வேண்டாதவைகளை மறந்து விடுவதும் தான்"

இந்த உலகத்தின் இன்றைய துன்பங்களுக்கு எல்லாம் காரணம்.




- ❖1492- ஸ்பெயினில் முஸ்லிம்களின் ஆளுகைக்குட்பட்ட கடைசி நகரமான கிரனாடா சரணடைந்தது.
- ❖1782- பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனி அட்மிரல் எட்வெர்ட் ஹியூஸ் தலைமையில் இந்தியாவில் இருந்து திருகோணமலை நோக்கிப் புறப்பட்டது.
- ❖1788- ஜோர்ஜியா ஐக்கிய அமெரிக்க அரசியலமைப்பை ஏற்றுக் கொண்ட 4வது மாநிலமானது.
- ❖1791- ஒகையோ மாநிலத்தில் குழந்தைகள் உட்பட குடியேற்றவாசிகள் 14 பேரை இந்திய ஆதிகுடிகள் படுகொலை செய்தனர்.
- ❖1793- ரஷ்யாவும் புருசியாவும் போலந்தை பங்கிட்டன.
- ❖1818- பிரித்தானிய குடிசார் பொறியாளர்கள் நிறுவனம் நிறுவப்பட்டது.
- ❖1905- ரஷ்யக் கடற்படையினர் சீனாவின் போர்ட் ஆதரில் ஜப்பானியரிடம் சரணடைந்தனர்.
- ❖1941- இரண்டாம் உலகப் போர்: வேல்ஸில் கார்டிஃப். என்ற இடத்தில் லாண்டாஃப் தேவாலய ஜேர்மனியரின் குண்டுவீச்சில் பலத்த சேதம் அடைந்தது.
- ❖1954- பத்மசிறீ, பத்மபூசண், பத்மவிபூசன் விருதுகள் இந்திய அரசினால் ஏற்படுத்தப்பட்டது.
- ❖1959- முதலாவது செயற்கைச் செய்மதி, லூனா 1, சோவியத் ஒன்றியத்தால் விண்ணுக்கு ஏவப்பட்டது.
- ❖1971- கிளாஸ்கோவில் உதைபந்தாட்ட மைதானம் ஒன்றில் இடம்பெற்ற விபத்தில் சிறுவர்கள் உட்பட 66 பேர் கொல்லப்பட்டனர்.
- ❖1982- சோமாலிய அரசுக்கு எதிரான தமது முதலாவது இராணுவ நடவடிக்கையை சோமாலிய தேசிய இயக்கம் தொடங்கியது. சோமாலியாவின் வடபகுதியில் அரசியல் கைதிகளை விடுவித்தனர்.
- ❖1993- யாழ்ப்பாணக் கடல் நீரேரிப் படுகொலை: கிளாலி நீரேரியில் 35-100 பயணிகள் இலங்கைப் படையினரால் படுகொலை செய்யப்பட்டனர்.
- ❖1999-விஸ்கொன்சின் மாநிலத்தில் இடம்பெற்ற பலத்த பனிப்புயலில் சிக்கி 68 பேர் கொல்லப்பட்டனர்.
- ❖2004- ஸ்டார்டஸ்ட் விண்கலம் வைல்டு 2 என்ற வால் வெள்ளியை வெற்றிகரமாகத் தாண்டியது.
- ❖2006- திருகோணமலை மாணவர்கள் படுகொலை: இலங்கையின் கிழக்கே திருகோணமலை, நிலாவெளி கடற்கரையில் 5 தமிழ் மாணவர்கள் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டனர்.
- ❖2008-விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்குமிடையே 2002 இல் கைச்சாத்திடப்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கையில் இருந்து வெளியேறுவதாக இலங்கை அரசு அறிவித்தது.

**பிறப்புகள்**

- ❖1914- நூர் இனாயத் கான், ரஷ்ய-ஆங்கிலேய உளவாளி (இ. 1944)
- ❖1920- ஐசாக் அசிமோவ், உருசிய-அமெரிக்க வேதியியலாளர், எழுத்தாளர் (இ. 1992)
- ❖1920- ஜார்ஜ் எர்பிக், அமெரிக்க வானியலாளர் (இ. 2013)
- ❖1935- க. நவரத்தினம், இலங்கை அரசியல்வாதி
- ❖1940- எஸ். ஆர். ஸ்ரீனிவாச வரதன், இந்திய-அமெரிக்கக் கணிதவியலாளர்
- ❖1940- அ. சண்முகதாஸ், இலங்கை கல்வியாளர், தமிழறிஞர்
- ❖1943- பாரிசு மான்கோ, துருக்கிய பாடகர், தயாரிப்பாளர் (இ. 1999)
- ❖1961- கேணல் கிட்டு, விடுதலைப் புலிகளின் தளபதி (இ. 1993)

**இறப்புகள்**

- ❖1782- கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் - கண்டியின் கடைசி அரசன்.
- ❖1876- மீனாட்சி சுந்தரம் பிள்ளை, தமிழறிஞர் (பி. 1815)
- ❖1892- ஜார்ஜ் பிடெல் ஏரி, ஆங்கிலேய கணிதவியலாளர், வானியலாளர் (பி. 1801)
- ❖1960- தி. வை. சதாசிவ பண்டாரத்தார், தமிழக வரலாற்று அறிஞர் (பி. 1892)
- ❖1989- சப்தர் ஆசுமி, இந்திய நடிகர், இயக்குநர் (பி. 1954)
- ❖2012- கே. ஜே. சரசா, தமிழ்நாட்டின் பரத நாட்டிய ஆசிரியை, முதலாவது பெண் நட்டுவனார்
- ❖2013- கெர்டா லெர்னர், ஆஸ்திரிய-அமெரிக்க வரலாற்றாளர், எழுத்தாளர் (பி. 1920)
- ❖2016- அ. பூ. பர்தன், இந்திய அரசியல்வாதி (பி. 1924)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 240 | 250 | 200 | 160 | 220 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 180 | 50 | 70 |
| பச்சைமிளகாய் | 350 | 350 | 300 | 300 | 350 |
| தக்காளி | 160 | 150 | 140 | 120 | 180 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 60 | 40 | 40 |
| கோவா | 120 | 100 | 140 | 50 | 120 |
| கரட் | 140 | 200 | 200 | 200 | 180 |
| பூசணி | 80 | 30 | 60 | 80 | 50 |
| புடோல் | 100 | 100 | 100 | 120 | 140 |
| வாழைக்காய் | 80 | 60 | 80 | 120 | 80 |
| சின்ன வெங்காயம் | 350 | 550 | 400 | 400 | 350 |
| பெரிய வெங்காயம் | 160 | 200 | 140 | 140 | 140 |
| பாகற்காய் | 300 | 200 | 280 | 300 | 300 |
| வெண்டிக்காய் | 140 | 100 | 120 | 160 | 160 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | 60 | 80 | 50 |
| பயற்றங்காய் | 250 | 250 | 240 | 160 | 200 |
| லீக்ஸ் | 250 | 300 | 180 | 250 | 220 |
| பீற்றூட் | 250 | 200 | 160 | 200 | 140 |
| கறிமிளகாய் | 300 | 200 | 250 | 280 | 400 |
| முருங்கைக்காய் | — | — | 90 | — | — |
| போஞ்சி | 300 | 250 | 200 | 200 | 220 |
| கத்தரிதம்புள்ள | 200 | — | 180 | 120 | 200 |
| கீரை - 1பிடி | 50 | 50 | 50 | 60 | 40 |
| தேசிக்காய் | 60 | 20 | 40 | 80 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 90-120 | 80 | 75 | 100 |
| இராசவள்ளி | 300 | 250 | 250 | 250 | 400 |
| வெங்காயப்பூ | 350 | 350 | — | — | 350 |
| முள்ளங்கி | 80 | 150 | 120 | 80 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 40 | 40 | 40 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | 50 | 60 | 100 | — |

நம்முடைய எண்ணங்களை நாம் மறைத்தாலும் நமது செயல்கள் அவற்றை அம்பலப்படுத்தி விடும்.

– மெர்ரி கிளாட்சன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வேலைநிறுத்தப் போராட்டத்தில் உள்நோக்கம் இருக்கக்கூடாது

வட பிராந்திய போக்குவரத்துச் சபை சார்ந்த தொழிற்சங்கங்கள் நேற்று புதுவருடத்தில் இருந்து வேலைநிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளன.

வவனியாவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பஸ் தரிப்பு நிலையத்தில் இருந்து சேவையை ஆரம்பிக்க வேண்டும் என்ற தீர்மானத்துக்கு எதிராகவே வேலைநிறுத்தப் போராட்டம் நடைபெறுவதாகக் கூறப்படுகிறது.

வட பிராந்திய போக்குவரத்துச் சபை சார்ந்த சாரதிகளும் நடத்துநர்களும் முன்வைக்கின்ற கோரிக்கைகள் தொடர்பில் சரியான முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்பதில் எந்த மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை.

அதேவேளை அரசியல் நோக்கத்துக்காக வேலைநிறுத்தப் போராட்டம் நடைபெறவில்லை என்பதை வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் அனைத்து சாரதிகளும் நடத்துநர்களும் அவர்கள் சார்ந்த தொழிற்சங்கங்களும் உறுதி செய்ய வேண்டும்.

ஏனெனில், அரசியல் சார்பு என்பது வேறு. உரிமை என்பது வேறு. இந்த நாட்டில் எவரும் எந்த அரசியல் கட்சி சார்ந்தும் தமது ஆதரவுகளை வழங்குவது அவரவர் உரிமை. அதில் யாரும் தலையிட முடியாது.

அதேநேரம் தாம் ஆதரவு தெரிவிக்கும் கட்சிக்காக தமது பதவியையோ அன்றி தொழிற்சங்க நடவடிக்கைகளையோ பயன்படுத்துவதென்பதும் தர்மத்துக்கு முரணானது.

தான் சார்ந்த கட்சிக்கான ஆதரவு என்பது மற்றவர்களைப் பாதிப்பதாக அல்லது மற்றவர்களின் கட்சிச் சார்புக்குத் தடையாக இருக்கக்கூடாது என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்வர்.

எனவே இது விடயத்தில் வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் சாரதிகளும் நடத்துநர்களும் நடுநிலை நின்று முடிவெடுக்க வேண்டும்.

தவிர, வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் சேவை என்பது மிகவும் மதிப்புக்குரியது. யுத்த காலசூழ்நிலைகளிலும் எமது சாரதிகளும் நடத்துநர்களும் ஆற்றிய பணிகள் என்றும் நன்றிக்குரியவை. அதேபோன்று தனியார் போக்குவரத்துச் சேவையையும் எவரும் மட்டம் தட்டிவிட முடியாது.

இரண்டு சேவைகளும் இடையிடையே முரண்பட்டுக் கொள்வது வேதனைக்குரியதாயினும் இணைந்த திட்டமிடல்களும் புரிந்துணர்வுகளும் பொருத்தமான நடவடிக்கைகளும் இருந்தால், இரு தரப்பு சேவையும் சுமுகமாக நடைபெறுவதுடன் அதனால் பொதுமக்களும் மிகுந்த நன்மையடைய முடியும்.

எனினும் வவுனியாவில் புதிதாக அமைக்கப்பட்ட பஸ் தரிப்பு நிலையம் தொடர்பில்

- குறித்த இடத்தைத் தெரிவு செய்தது யார்?
- அந்த இடத்தில் சேவையை நடத்துவதனால் ஏற்படும் சாதகபாதகங்கள் எவை?
- புதிய பஸ் தரிப்பு நிலையத்தை அமைத்த போது இப்படியான வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்காதது ஏன்?
- வவுனியா பஸ் தரிப்பு நிலையத்தின் உருவாக்கத்தில் பலரும் சம்பந்தப்பட்டிருக்க, வடக்கின் முதலமைச்சரை மட்டும் மையப்படுத்தி; உள்ளூராட்சி சபைத் தேர்தல் காலத்தில் இப்படியான பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை முன்னெடுப்பதன் உள்நோக்கம் என்ன?

என்பன குறித்து நியாயம் உரைக்கவல்ல – துணிச்சல்மிக்க நம் சாரதிகளும் நடத்துநர்களும் தமக்குள் கேள்வி எழுப்ப வேண்டும்.

# நாட்டு சொத்துக்களை வெளிநாடுகளுக்கு குத்தகைக்கு விற்பனை செய்யும் ஆட்சியாளர்கள்

## பதவிக்கு பொருத்தமில்லை – ஒமாரே கஸ்ஸப்ப தேரர்



ஐந்து வருடத்திற்கு ஆட்சிக்கு வந்துவிட்டு 99 வருடங்களுக்கு நாட்டு சொத்துக்களை வெளிநாடுகளுக்கு குத்தகைக்கு விற்பனை செய்யும் ஆட்சியாளர்கள் ஆட்சிபீடத்தில் இருப்பதற்கே தகுதியற்றவர்கள் என்று ஶ்ரீரோஹண சங்க சபையின் செயலாளர் ஒமாரே கஸ்ஸப்ப தேரர் தெரிவித்துள்ளார்.

புதிய அரசியலமைப்பில் பௌத்த மதத்திற்கு உரிய இடம், தேசிய சொத்துக்களின் பாதுகாப்பு உள்ளிட்ட பல விடயங்களையும் கருத்திற்கொண்டு யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்ற தீர்மானத்தை மக்கள் உன்னிப்பாக அவதானித்தும், ஆராய்ந்தும் மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

காலி - கம்புருப்பிட்டியவில் உள்ள கப்புகொட புராதன விகாரை வளாகத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட ஒமாரே கஸ்ஸப்ப தேரர் மேலும் கருத்து வெளியிட்டார்:

“5 வருடங்களுக்கு ஆட்சியை ஏற்றுக்கொண்ட நபர் அந்த வருடங்களிற்குள் எப்படி நாட்டை ஆட்சி செய்வது பற்றி தெரிந்துகொள்ள வேண்டும். 5 வருடங்களுக்கு ஆட்சிக்கு வந்துவிட்டு எவ்வாறு அவர்கள் 99 வருட குத்தகைக்கு நிலங்களை விற்பனை செய்வது? இந்த நாட்டின் தேசிய ஐக்கியத்திற்கு பங்கம் ஏற்படுகின்ற தீர்மானங்களை எடுப்பது முட்டாள்தனமாகும். இந்த நாட்டை வெளிநாடுகளுக்கு குத்தகைக்கு வழங்கமுடியாது. அவற்றை யாராகிலும் செய்வாராகில் இந்த தேர்தலில் யாருக்கு ஆதரவளிப்பது என்பதை மக்களே தீர்மானிக்க வேணடும்.

தேசிய பாதுகாப்பிற்கும், ஐக்கியத்திற்கும் பாதிப்பை ஏற்படுத்தும் புதிய அரசியலமைப்பில் வெளிநாட்டு முகவர்களுக்கு தேவையான வகையில் திருத்தங்களை கொண்டுவருபவர்களும், நாட்டிற்கு பாதிப்பை ஏற்படுத்தும் தீர்மானங்களை கொண்டு வருபவர்களுமே தாய்நாட்டிற்கு பங்கம் ஏற்படுத்துபவர்களாவர். இந்த நாட்டின் பொதுச் சொத்துக்களை பாதுகாக்கின்ற, வெளிநாடுகளுக்கு இந்நாட்டுச் சொத்துக்களை விற்பனை செய்யாத ஒரு திட்டம் யாரிடமாவது இருந்தால் அவர்களுக்கு ஆதரவளிப்பதே சங்க சபையின் தீர்மானமாகும். அண்மையில் கொழும்பு சுகததாஸ உள்ளக அரங்கில்மாநாடு ஒன்றை நடத்தி நாட்டுச் சொத்துக்களை விற்பனை செய்வதில்லை என்று மார்பில் கைவைத்தபடி வாக்குறுதியளித்தது சிறந்ததுதான். ஆனால் நடைமுறையில் அது சாத்தியமில்லை.

எனவே அப்படிப்பட்டவர்கள் ஆட்சியிலிருக்கக் கூடாது. எனவே மக்கள் சிந்தித்து நாட்டு சொத்துக்களை பாதுகாப்பதாக உறுதியளிக்கும் பிரிவினருக்கு ஆதரவளிப்பது குறித்து பொறுமையான தீர்மானம் எடுக்க வேண்டும். புத்த சாசனம் பாதுகாக்கப்பட வேண்டும், மதமற்ற நாட்டில் மக்கள் வாழ்க்கையை கட்டியெழுப்ப முடியாது. பௌத்த மதத்திற்கான இடத்தை அரசியலமைப்பிலிருந்து இல்லாதொழிப்பதற்கு எவராகிலும் முயற்சி செய்தால் அதற்கெதிராக மக்கள் கிளர்ந்தெழும்பவும் வேண்டும். இவற்றை அவதானித்து ஆராய்ந்தே மக்கள் வாக்களிகக வேண்டும் என்றார். (ம)

### உயர்தரத்தில் சித்தியடைந்த

## 30 சதவீதமான மாணவர்கள் பல்கலைக்கு உள்ளீர்ப்பு

(கொழும்பு)

க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த 30 சதவீதமான மாணவர்களை பல்கலைக்கழகங்களில் இணைத்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

“பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை உள்ளீர்ப்பதற்கான விண்ணப்பங்கள் அடங்கிய கைநூல் அடுத்த வாரத்துக்கு முன்னதாக வெளியிடப்படும். விண்ணப்ப கைநூல் வெளியாகி ஒரு மாத காலப்பகுதியில் இணையத்தளத்தின் ஊடாக மாத்திரமே விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியும் ஏன்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (ம)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




### கல்வி கற்பதில் கவனிக்க வேண்டியவை?

எதார்த்தக் கல்வி என்பது ஈஸ்வர ஞானத்தைப் பெறுவது. இறைவனை அறிவது. தன்னைத் தானே அறிந்து கொள்வது என்பதாகும். அதற்கான வழிமுறைதான் இறை நம்பிக்கையுடன் கல்வியைக் கற்பது. அதாவது இறைவனை நினைத்துச் செய்யப்படும் எந்தக் காரியமும் சுபமாக முடியும் என்பதாகும்.

இன்று நாம் கல்விக் கூடங்களில் கற்கும் கல்வி ஒரு கல்வியே அல்ல. அத்தகைய கல்வியால் நாம் புற இன்பங்களை அடைகிறோம். ஆனால் உண்மையான கலவியறிவு நமக்குக் கிடைப்பதில்லை. இறைவனைக் கற்க வேண்டும். அதுதான் உண்மையான கல்வி. அதன்மூலம் இறை ஞானமும் ஆத்மஞானமும் அடைய முடியும்.

அதை அடைந்தால் தமது வாழ்க்கைப் பயணம் எவ்விதத் தடங்கலுமின்றிச் செல்லும். நமது மனம் பக்குவமடையும். அப்போது வெற்றி தோல்விகளை ஏற்றுக் கொண்டு வாழ நம்மால் முடியும். சுக துக்கங்களை ஒன்றுபோல் சந்திக்க நம்மால் இயலும். இயற்கைக்கும் இறைவனுக்கும் கட்டுப்பட்டு வாழ முடியும். பெற்றோர்கள் இந்த விடயத்தில் குழந்தைகளுக்கு உதவி புரிய வேண்டும்.

ஒரு காரியத்தில் யோசிக்காமல் முடிவெடுப்பது விவேகமில்லாமல் செயற்படுவது ஆகியவை முன்னுக்கு வர உதவாது. (தொடரும்)

## தொடருந்துடன் மோதுண்டு மோட்டார் சைக்கிள் விபத்து

### இருவர் பலி

(கண்டி)

பேராதனை - எலுகொட ரயில் குறுக்கு வீதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளாகியதில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

கண்டியில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த ரயிலிலேயே குறித்த மோட்டார் சைக்கிள் மோதியுள்ளது.

இதனையடுத்து, சம்பவத்தில படுகாயமடைந்த மோடடார் சைக்கிளில் பயணித்த இருவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் பலியாகியுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள்மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ம)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8.30 மணியி லிருந்து மாலை 5 மணி வரை யாழ்.பிரதேசத்தில வலந்தலை சந்தி, சிவகாமி அம்மன் கோவிலடி, ஆலடி, மருதபுரம், வியாவில், கருங்காலி, காரைநகர் சிவன் கோவிலடி, பொன்னாலை கிருஸ்ணன் கோவிலடி, பொன்னாலை வீட்டுத்திட்டம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில அரசமுறிப்பு கிராமம், ராஜ் மீன்பிடிக் கூட்டுத்தாபனம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- மனித வடிவம் கொண்ட ஒவ்வொரு உயிரையும் வழிபடுங்கள், பகவானை அனைத்து வடிவத்திலும் வழிபடுவதே நன்மை பெற நல்ல வழி.
- உடல் மற்றும் மனதிலுள்ள குறைகளை நினைத்து துயரப்படுவதால் நமக்கு பயன் எதுவும் கிடைக்காது. அவற்றை ஒரு பொருட்டாக எண்ணாமல் ஊக்கத்தோடு இருப்பதே நன்மை தரும்.
- எதிலும் பரபரப்பு தேவையில்லை, ஆனால், சுறுசுறுப்பு எப்போதும் தேவை. இந்த இரண்டையும் படைக்கலனாகக் கொள்பவர்கள் எந்த தடையையும் எதிர்த்து வெற்றி பெறுவர்.
- மனித வடிவம் கொண்ட ஒவ்வொரு உயிரையும் வழிபடுங்கள், பகவானை அனைத்து வடிவத்திலும் வழிபடுவதே நன்மை பெற நல்ல வழி.
- இனிமையோடும், புன்னகையோடும் இருப்பது ஒருவனைக் கடவுள் அருகில் கொண்டு செல்லும்.
- வாழ்வில் ஒருவன் விருப்பங்களையும், கோபத்தையும் அடக்கி ஆண்டால் உண்மையான சுதந்திரத்தையும், இன்பத்தையும் அவனால் உணர முடியும்.

# மாகாணங்களுக்கிடையிலான போட்டி வடக்கு மாகாணம் அசத்தல் வெற்றி





தேசிய கொள்கை மற்றும் பொருளாதார விவகார அமைச்சின் கீழ் இயங்கிவரும் தேசிய இளைஞர் படை அணியின் வீரர்கள் இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட மாகாணங்களுக்கிடையிலான போட்டியில் வடக்கு மாகாணம் அதிகளவான புள்ளிகளை பெற்று முதல் நிலையினை அடைந்துள்ளது.

வடக்கில் முல்லைத்தீவு மாவட்டத்திலும், மன்னார் மாவட்டத்திலும் உள்ள தேசிய இளைஞர் படைஅணி வீரர்கள் கடந்த 19 திகதி தொடக்கம் 22 ஆம் திகதி வரை திவுலப்பிட்டிய தேசிய இளைஞர் படையணி பாசறையில் நடைபெற்ற தேசிய மட்ட விளையாட்டுப் போட்டியில் பங்கு கொண்டு முதல் நிலை பெற்றுள்ளது.

இலங்கையில் உள்ள 51 தேசிய இளைஞர் படைஅணியினை சேர்ந்த இளைஞர் யுவதிகள் பங்கு கொண்டு மாகாணங்களை வலுச்சேர்க்கும் வகையில் போட்டிகளில் பங்கு கொண்டு வெற்றி பெற்றுள்ளார்கள்.

வடக்கு மாகாணத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் போட்டியில் ஆண்களுக்கான வலைப்பந்தாட்டத்தில் முதல் இடத்தினையும், ஆண்களுக்கான துடுப்பாட்டத்தில் முதல் இடத்தினையும், பெண்களுக்கான வலைப்பந்தாட்டத்தில் முதல் இடத்திலும், ஆண்களுக்கான உதைபந்தாட்டத்தில் முதல் இடத்தினையும் பெற்று வட மாகாணத்திற்கு பெருமை சேர்த்துள்ளார்கள். இந்த போட்டிகளில் விளையாடி தங்கள் திறமைகளை வெளிக்கொணர்ந்த வீரர்களை பாராட்டும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை வட்டுவாகல் பகுதியில் அமைந்துள்ள தேசிய இளைஞர் படையணியின் அலுவலகத்தில் நடை பெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் மாவட்ட இளைஞர் படைஅணியின் பொறுப்பாளர் மேஜர் பி.வன்னிநாயக்க, தேசிய இளைஞர் படைஅணியின் வட மாகாணபணிப்பாளர் மேஜர் பண்டாரநாயக்க ஆகியோர் கலந்து கொர்ண்டு சிறப்பித்துள்ளாரகள். (க-281)

# கபில்தேவ் சிறப்பாட்டம் மல்லாகம் ஸ்ரீமுருகன் வெற்றி



மல்லாகம் ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழகம் வரலாற்றில் முதன் முறையாக சிநேகபூர்வ வன்பந்து துடுப்பாட்ட போட்டி ஒன்றில் கிளிநொச்சி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து 27.12.2017 அன்று விளையாடியது.

நாணயச்சுழற்சியில் வென்ற கிளிநொச்சி மத்திய கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி களமிறங்கிய கிளிநொச்சி மத்திய கல்லூரி அணி 27.1 ஓவர்கள் விளையாடி சகல இலக்குகளையும் இழந்து 101 ஓட்டங்களை பெற்றது.

பந்துவீச்சில் மல்லாகம் ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழகத்தின் தனுசன், மகிழன், கபில் தேவ் தலா 2 இலக்குகளையும் தர்சன், கஜீபன்,வரன்,சாரு தலா 1 இலக்கினையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மல்லாகம்ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகம்19 ஓவர்கள் நிறைவில் 5 இலக்குகளை மாத்திரம் இழந்து 102 ஓட்டங்களை பெற்று 5 இலக்குகளால் வெற்றி பெற்றது.

துடுப்பாட்டத்தில் கபில்தேவ் 37 ஓட்டங்களையும் தனுசன் ஆட்டமிழக்காமல் 34 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். (க)

# துசாந்தன்- தசோபன்- ஜதர்சன் அசத்தல் யாழ்.மத்திய கல்லூரி அணி இனிங்ஸ் வெற்றி



தசோபனின் சதம் மற்றும் துல்லியமான பந்துவீச்சும், ஜதர்சனின் சதம் ஆகியன கைகொடுக்க, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் 19 வயதுப்பிரிவு அணி, கண்டி அசார் கல்லூரி அணியை இனிங்ஸ் மற்றும் 172 ஓட்டங்களால் வீழ்த்தியது.

பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில், பாடசாலைகளின் 19 வயதுப்பிரிவு பிரிவு 3 துடுப்பாட்ட அணிகளுக்கிடையிலான 2 நாட்கள் கொண்ட மட்டுப்படுத்தப்படாத ஓவர்கள் கொண்ட துடுப்பாட்டச் சுற்றுப் போட்டி நடைபெற்று வருகின்றது.

இந்தச் சுற்றுப்போட்டியின் போட்டியொன்று கண்டி அக்குரண அசார் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து அசார் கல்லூரி அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வென்ற அசார் அணி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது. 32.1 ஓவர்களில் 69 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்களையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் எவரும் இரட்டை இலக்க ஓட்ட எண்ணிக்கையை அடையவில்லை.

பந்துவீச்சில் யாழ்ப்பாணம் மத்தி அணி சார்பாக, துசாந்தன் 11 ஓவர்கள் பந்துவீசி 69 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்களையும், தசோபன், மதுசன், சுஜன் ஆகியோர் தலா 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் தமது முதலாவது இனிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி, 103 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து 314 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் தசோபன் ஆட்டமிழக்காமல் 114 ஓட்டங்களையும், ஜதர்சன் 112 ஓட்டங்களையும் கௌதமன் 22 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் அசார் அணி சார்பாக, எம்.என்.ஜாபர் 3 விக்கெட்களைக் கைப்பற்றினர்.

245 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய அசார் அணி, 37 ஓவர்களில் 73 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்களையும் இழந்தது.

பந்துவீச்சில் யாழ்ப்பாணம் மத்தி சார்பாக, தசோபன் 16 ஓவர்கள் பந்துவீசி 24 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 8 விக்கெட்களையும், துசாந்தன் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.இதன் மூலம் யாழ். மத்திய கல்லூரி அணி இன்னிங்ஸ் மற்றும் 172 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது. (க-26)

# தேசிய பளுதூக்கல் போட்டி யாழ். மத்திக்கு இரு தங்கம்






இலங்கை பளுதூக்கல் சங்கத்தினால் தேசிய ரீதியில் நடத்திய பளுதூக்கல் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணிக்கு இரண்டு தங்கப் பதக்கங்கள் கிடைத்துள்ளன.

தேசிய மட்டப் பளுதூக்கல் போட்டி கொழும்பு ரொறிங்டன் உள்ளக அரங்கில் கடந்த 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்றது.இதில், 18 வயதுப்பிரிவு 69 எடைப்பிரிவில் 200 கிலோகிராம் எடையைத் தூக்கி ச.சிவப்பிரியன் தங்கப்பதக்கம் வென்றார்.

20 வயதுப்பிரிவு 77 எடைப்பிரிவில் 240 கிலோகிராம் எடையைத் தூக்கி ச.விஸ்ணுகாந்த் தங்கப்பதக்கத்தை வென்றார். (க-26)

# உடல் வலுவூட்டல் விளையாட்டு உபகரணங்கள் கையளிப்பு



முல்லைத்தீவு மாவட்டத்தில் உடல் வலுவூட்டும் விளையாட்டை ஊக்கிவிப்பதற்காக ஒரு தொகுதி உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை முல்லைத்தீவு மாவட்டத்தில் உடல் வலுவூட்டும் விளையாட்டு (ஜிம்) ஊக்கிவிக்கும் நோக்கில் யாழ்ப்பாணத்தில் உள்ள கனகசபை உதயகுமார் என்பவரால் மாவட்ட பயிற்சியாளர்களுக்கு ஊக்கிவிக்கும் நோக்கில் இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான உபகரணம் ஒன்று வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட பயிற்றுவிப்பாளர் இ.சகிதரசீலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கோ.தனபாலசுந்தரம்,மாகாண விளையாட்டு துறை பணிப்பாளர் ஆர்.குருபரன், முதன்மை மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் எஸ்.சதானந்தன், முல்லை.வலய விளையாட்டுத்துறை ஆசிரிய ஆலோசகர் டிலான் ஆகியோர் கலந்துகொண்ட நிகழ்வில் மாவட்டத்தில் விளையாட்டு துறையினை ஊக்கிவிக்கும் நோக்கில் உடல் வலு விளையாட்டில் மாவட்ட வீரர்கள் பல சாதனைகளை படைத்துள்ளார்கள் இன்னிலையில் அவர்களின் பயிற்சிக்கான அடிப்படை தேவைகள பூர்தி செய்து கொடுக்க வேண்டிய நிலையில் இந்த உபகரணங்கள் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)



2017 ஆம் ஆண்டிற்கான தேசிய கராத்தே சுற்றுப் போட்டி அண்மையில் கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது. இதில் 21 வயதிற்கு மேற்பட்ட பிரிவில் பதக்கங்கள் வென்ற சக்குறா சோட்டோ கான் கராத்தே கழகத்தைச் சேர் ந்த போட்டியாளர்கள் பதக்கங்கள் வென்றனர். இப் போட்டியில் 21 வயதிற்குட் பட்ட 55-60 கிலோ பிரிவு குமித்தே போட்டியில் விசுவமடுவைச் சேர்ந்த சி. பிரபாகரன் வெண்கலப் பதக்கத்தையும் 60-67 கிலோ பிரிவில் யாழ்ப்பாண த்தைச் சேர்ந்த எ.வகுல பூசனன் தங்கப் பதக்கத் தையும், 36-40 வயதிற்குட்பட்ட 60-75 கிலோ பிரிவில் கிளிநொச்சியைச் சேர்ந்த எஸ். லவன் வெள்ளிப் பதக் கத்தையும் 40-45 வயதிற் குட்பட்ட காட்டா போட்டியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எஸ். விஜயராஜ் வெள்ளிப் பதக்கத்தையும் பெற்று வட மாகாணத்திற்குப் பெருமை சேர்த்துள்ளனர். (க-107)

## வவுனியா பஸ் நிலைய...

மைச்சர் பாராமுகமாக இருப்பதாகவும் குறித்த தொழிற்சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அச் சங்கத்தின் செயலாளர் அருளானந்தம் அருட்பிரகாஸ் கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு அவர் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது, வடபிராந்திய போக்குவரத்து சபையானது வடமாகாண முதலமைச்சருக்கு எதிராக பணிப்புறக்கணிப்பொன்றை மேற்கொண்டுவருகின்றது. இதனால் அனைத்து தரப்பு பொதுமக்களும் பாதிப்படைந்துள்ளமைக்கு நாம் மனம்வருந்துகின்றோம். ஆனால் நாம் இப் பணிப்புறக்கணிப்பை முன்னெடுத்திருப்பதன் நோக்கம் எமது சேவை மக்களுக்கு தேவையா இல்லையா என்பது தொடர்பாக முடிவெடுப்பதற்கேயாகும் என தெரிவித்தார்.

கடந்த வருடத்தின் ஆரம்பத்தில் புதிய பேருந்து நிலையத்தில் நாம் சேவையை ஆரம்பித்திருந்தோம். எனினும் அங்கு தனியார் போக்குவரத்து தரப்பினரால் நாம் கடுமையாகத் தாக்கப்பட்டோம். இது தொடர்பில் நாம் முதலமைச்சரிடம் முறையிட்டுள்ளோம்.

எனினும் இதுவரை எமது பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கவில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-4)

## பிணைமுறி மோசடி...

சட்டமானது தனது கடமையை உரிய வகையில் நிறைவேற்றவேண்டும். அத்துடன், ஊழல்களை அங்கீகரிக்கும் வகையில் என்னால் செயற்படமுடியாது. இந்த விடயத்தில் முன்வைத்த காலை நான் பின்வைக்க மாட்டேன் என்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திட்டவட்டமாக இடித்துரைத்துள்ளார்.

1 ஆயிரத்து 400 பக்கங்களடங்கிய பிணைமுறி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கடந்த 30ஆம் திகதி கையளிக்கப்பட்டது. இந்த அறிக்கையை அடுத்தவாரமளவில் அவர் பகிரங்கப்படுத்துவார் என எதிர்பார்க்கப்பட்டது.

தேர்தலொன்று நடைபெறவுள்ள தறுவாயில் இந்த அறிக்கை வெளிவருமானால் அது ஒருதரப்புக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் அமையுமென்பதை சுட்டிக்காட்டியே, தேர்தலுக்குப் பின்னர் அதை வெளியிடுமாறு ஐ.தே.கவிலுள்ள சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் நட்பு ரீதியில் ஜனாதிபதியிடம் கோரினர் எனத் தெரியவருகின்றது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் சட்டமா அதிபருக்குமிடையிலான கலந்துரையாடலொன்று இன்று இடம்பெறவுள்ளது எனத் தெரியவந்துள்ளது.

பிணைமுறி தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவினர் தமது இறுதி அறிக்கையை ஜனாதிபதியிடம் கையளித்திருந்தனர்.

குறித்த அறிக்கையின் அடுத்தகட்ட சட்ட ஏற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடவே இருவருக்குமிடையில் சந்திப்பு இடம்பெறவுள்ளது. (ம)

## பணிப் பகிஷ்கரி...

காத்து நின்று தவித்த நிலையிலும் தனியார் பேருந்து சங்கத்தினர் பொது மக்களுக்கு சிறந்த சேவைகளை வழங்கியிருந்தனர்.

வவுனியா பேருந்து நிலையத்திலிருந்து புதிதாக அமைக்கப்பட்ட பேருந்து நிலையத்திற்கு இலங்கைப் போக்குவரத்துச் சபையினரும் தனியார் பேருந்து சங்கத்தினரும் செல்ல வேண்டுமென வடக்கு முதலமைச்சர் தெரிவித்திருந்தார்.இதற்கமைய தனியார் பேருந்துச் சங்கத்தினர் புதிய பஸ் நிலையத்திற்குச் சென்று தமது சேவைகளை தொடர்ந்த போதும் இ.போ.ச சபையினர் அங்கு செல்வதற்கு மறுத்து பழைய பஸ் நிலையத்திலிருந்தே தொடர்ந்தும் செயற்பட்டு வந்திருந்தனர்.

இந்நிலையில் கடந்த வருட இறுதி நாட்களில் வடக்கு முதலமைச்சர் விக்கினேஸ்வரன் வவுனியா இ.போ.ச மற்றும் தனியார் சங்கத்தினரை அழைத்துக் கலந்துரையாடியிருந்தார். அதில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் இரண்டு தரப்பினரையும் புதிய பஸ்நிலையத்திலிருந்து சேவைகளை ஆரம்பிக்குமாறு தெரிவித்திருந்தார். அத்தோடு பழைய பஸ் நிலையத்திற்கு உட் செல்லாத வகையில் பலத்த பாதுகாப்புகளையும் ஏற்பாடு செய்திருந்தார். இவ்வாறானதொரு நிலையில் இ.போ.சபையினர் தமது கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்திருந்ததுடன் தொடர்ச்சியான போராட்டங்களை மேற்கொள்ளப் போவதாகவும் குறிப்பிட்டிருந்தனர்.

இதனையடுத்து நேற்றுத் தொடக்கம் பணிப் பகிஸ்கரிப்பை தொடர்ச்சியாக ஆரம்பிததிருக்கின்ற இ.போ.ச சபையினர் தமக்கான தீர்வு கிடைக்கும் வரையில் இந்தப் போராட்டம் தொடருமென்றும் குறிப்பிட்டுள்ளனர். இதே வேளை நேற்று புதுவருடப் பிறப்பு நாளிலும் இ.போ.ச சபையினர் பணிப் பகிஸ்கரிப்பில் ஈடுபட்டதால் பொது மக்கள் கடும் அலைச்சல் மற்றும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியிருந்தனர். இவ்வாறானதொரு நெருக்கடியான நிலையிலும் தனியார் பேருந்துச் சங்கத்தினர் சிறந்த சேவைகளை வழங்கியிருந்ததாக பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் இன்றையதினம் பாடசாலைகள் ஆரம்பமாக இருக்கின்ற நிலையில் இ.போ.ச பணிப் பகிஸ்கரிப்பு பாடசாலை மாணவர்கள் மற்றும் அதிகாரிகள் பொது மக்கள் எனப் பலருக்கும் கடுமையான பாதிப்புக்களை ஏற்படுத்துமென்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஆகவே மக்களின் தேவைகளை உணர்ந்து மக்களுக்கான சேவைகளை முன்னிலைப்படுத்தி அதனை சிறந்த முறையில் செயற்படுத்த இ.போ.ச சபையினர் முன்வர வேண்டுமென்றும் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். எனினும் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற குறித்த பணி புறக்கணிப்புக்கு இலங்கை பேருந்து ஊழியர் சங்கத்தில் உள்ள உறுப்பினர்கள் சிலர் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். (ம-4)

## சுவாசக் குழாய்க்குள்...

தை யாருமான செல்லத்துரை சுரேஷ்குமார் (வயது 40) என்பவரே நேற்றுமுன்தினம் உயிரிழந்தவராவார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, மேற்படி குடும்பஸ்தர் பணி நிமித்தம் அரியாலையில் உள்ள வீடொன்றில் தங்கியிருந்து யாழில் வேலை செய்து வந்துள்ளார்.

இதன்போது இரவு உணவு விருந்தொன்று யாழில் உள்ள ஹோட்டல் ஒன்றின் ஏற்பாட்டில் நடைபெற்றுள்ளது. இதன்போது குறித்த குடும்பஸ்தர்களும் சக நண்பர்களும் உணவு அருந்தியுள்ளனர்.

விருந்து முடிந்த பின் குறித்த குடும்பஸ்தர் அண்ணாந்து பார்த்து கொண்டு நிலத்தில் படுத்துள்ளார். இதன்போது வாந்தியும் எடுத்துள்ளார். அண்ணாந்து படுத்து கொண்டு வாந்தி எடுத்ததால்,

சுவாச குழாய்க்குள் உணவு அடைத்து மூச்சு திணறல் ஏற்பட்டு உயிரிழந்துள்ளார். சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. உணவு சுவாசக் குழாய்க்குள் அடைத்தமையினாலேயே இறப்பு நிகழ்ந்துள்ளதாக பிரேத பரிசோதனை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இறப்பு தொடர்பில் திடீர் மரண விசாரணையை முத்துக்குமாரு உதயசிறி மேற்கொண டிருந்தார். மேலும் இவ்வாறான விடயங்கள் தொடர்பில் அனைவரும் அவதானமாக இருக்க வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ம-4)

## 3 இராணுவத்தினர்...

பவங்களுடன் தொடர்புடைய குற்றவாளிகளுக்கே இந்த மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

யாழ் மேல் நீதிமன்று யாழ் மாவட்டத்தில் புதிதாக அமைக்கப்பட்ட பின்னர் இது வரை மேல் நீதிமன்ற நீதிபதிகளாக 9 நீதிபதிகள் கடமையாற்றியுள்ளனர். அந்த வகையில் கடந்த 2000ஆம் ஆண்டு தொடக்கம் 2005 ஆம் ஆண்டு வரை நீதிபதி கே.பி.எஸ்.வரதராஜா, 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2007ஆம் ஆண்டு வரை நீதிபதி எஸ்.தியாகேந்திரன், 2007ஆம் ஆண்டு தொடக்கம் 2008ஆம் ஆண்டு வரை நீதிபதி பி.ஸ்வர்ணராஜா, 2008ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரை நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா, 2010ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆம் ஆண்டு வரை நீதிபதி எஸ். பரமராஜா, 2012ஆம் ஆண்டு தொடக்கம் 2013ஆம் ஆண்டு வரை நீதிபதி ஜெ.விஸ்வானந்தன், 2013ஆம் ஆண்டு தொடக்கம் 2014ஆம் ஆண்டு வரை நீதிபதி அ.பிறேம்சங்கர், 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 மே மாதம் வரை நீதிபதி திருமதி கே.சிவபாதசுந்தரம், ஆகியோர் யாழ் மேல் நீதிமன்ற நீதிபதிகளாக கடமையாற்றியுள்ளதுடன், கடந்த 2015ஆம் ஆண்டு ஜுன் மாதம் தொடக்கம் இன்று வரை யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதியாக நீதிபதி மா.இளஞ்செழியன் கடமையாற்றி வருகிறார்.

மேற்குறிப்பட்ட நீதிபதிகளின் சேவைக் காலப்பகுதியிலேயே மேற்குறித்த 41 பேருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் கடந்த 2005, 2008, 2010 ஆம்.ஆண்டுகளில் தலா ஒருவருக்கும், 2012 ஆம் ஆண்டு 2 பேருக்கும், 2013ஆம் ஆண்டு ஒருவருக்கும், 2014ஆம் ஆண்டு 4 பேருக்கும், 2015ஆம் ஆண்டு 8 பேருக்கும், 2016ஆம் ஆண்டு 11 பேருக்கும் 2017ஆம் ஆண்டு 12 பேருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மேல் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இடம்பெற்ற கொலை சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு நீதவான் நீதிமன்றங்கள் ஊடாக வழக்கு விசாரணைகள் இடம்பெற்று பின்னர் மேல் நீதிமன்றில் குறித்த வழக்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு அதில் குற்றவாளிகளாக இனங்காணப்பட்டவர்களுக்கு இந்த மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (ம-9)

## சம்பந்தன் விடுத்த...

நிராகரித்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

ரணில்-மைத்திரி தலைமையிலான நல்லாட்சி அரசாங்கம் 2015ஆம் ஆண்டு ஜனவரியில் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு வழங்கிய சமஷ்டி அரசியலமைப்பு தொடர்பான வாக்குறுதியை நிறைவேற்றும்படி நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கோரி வருகின்ற போதிலும், நாட்டை அடகுவைக்கும் திட்டத்தை அமுல்படுத்த அனுமதிக்க முடியாது என்றும் அவர் கூறினார்.

2018ஆம் ஆண்டு புத்தாண்டை முன்னிட்டு கண்டி மாவட்டத்திலுள்ள தனது தொகுதியைச் சேர்ந்த ஆதரவாளர்கள் மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியில் போட்டியிடும் உள்ளூராட்சி சபை தேர்தல் வேட்பாளர்களை நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல்ல கண்டியிலுள்ள தனது இல்லத்தில் வைத்து நேற்றையதினம் சந்தித்தார்.

கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையில் கடந்தவாரம் அனுமதிக்கப்பட்டிருந்த எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தனை சந்தித்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கலந்துரையாடிய விடயங்கள் குறித்தும் இதன்போது கருத்து வெளியிட்டார்.

சுமந்திரன் எம்.பி யாழ்ப்பாணத்தில் வைத்து மிகத் தெளிவான விடயமொன்றை கூறியிருந்தார். நாங்கள் புதியவொரு விடயத்தை கோரவில்லை. 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதி மைத்திரிபால-ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றுமாறே கோருகின்றோம். அந்த வாக்குறுதிக்காக 6 இலட்சத்து 72 ஆயிரம் வாக்குகளை வடக்கில் பெற்றுக்கொடுத்துள்ளோம். அதனால் அரசியலமைப்பு திருத்தமல்ல, அன்று வழங்கிய வாக்குறுதியான புதிய சமஷ்டி அரசியலமைப்பையே கோருவதாக சுமந்திரன் தெரிவித்திருக்கின்றார்.

அத்துடன் சமஷ்டிக்கும் மேல்சென்ற அரசியலமைப்பை வழங்குவது அரசாங்கத்தின் கடமையாகும் என்றும் அவர் குறிப்பிட்டிருக்கின்றார். ஜே.வி.பி இதற்கு ஆதரவளிப்பதாக கூறுகின்றது. ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இதற்கு ஒத்துழைப்பு வழங்குவது இன்றைய இயற்கையாகும். அன்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த எதிர்கட்சித் தலைவரும், கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தனை சந்தித்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் புதிய அரசியலமைப்பிற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென சம்பந்தன் விடுத்த வேண்டுகோளை நிராகரித்தவர் மகிந்த ராஜபக்ஷ. எனினும் அந்த இடத்தில் வேறு தலைவர்கள் இருந்திருந்தால் ஆம் அப்படியே அதனை செய்துவிடுவோம் என்று கோழைத்தனமாக சொல்லியிருப்பார்கள். மகிந்த ராஜபக்ஷவைப் போன்று அவரையொத்த தலைவர்கள் இந்த நாட்டில் இல்லை என தெரிவித்தார். (ம)

## மோட்டார் சைக்கிள்...

க்கு அண்மையில் வீதியில் காணப்பட்ட பம்மிங்கில் வேகமாக செலுத்தி வந்த மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து இருவரையும் தூக்கி வீசியுள்ளது.

இதனால் அருகில் இருந்த கம்பம் ஒன்றுடன் மோதுண்டு படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த னர்.

இருப்பினும் சிகிச்சை பலனின்றி ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு 5 நிமிடங்களிலும் மற்றைய நபர் சுமார் 30 நிமிடங்களின் பின்னரும் உயிரிழந்ததாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன. இதேவேளை இவ் விபத்து சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-4.9)

## செய்தியில் திருத்தம்

வைரஸினால் பாதிக்கப்பட்ட பெண் முல்லையில் மரணம் என கடந்த 31.12.2017 அன்று வலம்புரியில் வெளியான செய்தியில் உயிரிழந்த பெண்ணின் கணவர் முருகானந்தன் என தவறுதலாக பிரசுரிக்கப்பட்டுள்ளது. இதற்கான மனம்வருந்துகிறோம். (ம)

## தனியார் பேருந்தில்...

வித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா பேருந்து நிலைய விவகாரம் தொடர்பில் இன்றையதினம் இ.போ.ச பேருந்துகள் பணிபகிஷ்கரிப்பில் ஈடுபடும் பட்சத்தில் பருவச்சீட்டுக்களை பெற்றுள்ள பாடசாலைக்கு செல்லும் மாணவர்கள் தனியார் பேருந்துகளில் இலவசமாக பயணிக்க முடியும்.

அத்துடன், பயணிகளின் நலன் கருதி பழைய பேருந்து நிலையத்தில் இருந்து புதிய பேருந்து நிலையம் வரை இலவச பேருந்து சேவையை முன்னெடுத்துள்ளதுடன் வடமாகாணத்திற்கான அனைத்து சேவைகளையும் அதிகரித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-250)

## ஐ.தே.கட்சி...

ரணை ஆணைக்குழு அறிக்கையின் பக்கங்கள் அதிகம் என்பதற்காக பயப்பட வேண்டியதில்லையென ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியும் அதற்குத் தேவையான சாட்சிகளை வழங்கியுள்ளதாக ஐ.தே.கட்சியின் அமைச்சர் பி.ஹரிசன் தெரிவித்துள்ளார்.

அம்பேவெல பிரதேசத்தில் ஊடகவியலாளர்களிடம் நேற் கருத்துத் தெரிவிக்கையில் அமைச்சர் இதனைக் கூறியுள்ளார். (ம)

## புளொட்டுக்கு...

அதனை நீதிமன்றமே உறுதிப்படுத்திவிட்டது. சில ஊடகங்களே எமது கட்சியை இலக்குவைத்து தவறான செய்தியை வெளியிடுகின்றன

இவ்வாறு புளொட்டின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்தார். யாழ்ப்பாணத்தில் நேற்று காலை தன்னைச் சந்தித்த செய்தியாளர்களிடமே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஊடகவியலாளர் சிவ்ராம் படுகொலையுடன் எமது கட்சியின் மூத்த உறுப்பினர் ஒருவர் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. அந்தக் குற்றச்சாட்டிலிருந்து அவர் நீதிமன்றால் முற்றுமுழுதாக விடுவிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு இருக்கையில் சிவராம் கொலையுடன் தொடர்புடையவர் எவ்வாறு தேர்தலில் நிற்கிறார்" எனத் தெரிவிக்க முடியும். அத்துடன், புளொட் உறுப்பினர் யார் என்றும் சொல்லப்படவில்லை. தற்போது எமது கட்சி மீது அவதூறைப் பரப் பும் நோக்குடன் சில ஊடகங்களால் உண் மைக்கு மாறாகச் செய்தி வெளியிடப்படுகிறது என்றார். (ம)

## வாய்க்காலில் விழுந்த...

மணியளவில் வீட்டின் முன்பாக உள்ள வாய்க்கால் அருகே விளையாடிக்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் இந்த அசம்பாவிதம் நேர்ந்துள்ளது.

இரணைமடு குளத்திலிருந்து கிளிநொச்சி நீரேந்தும் குளத்திற்கு செல்லும் குறித்த கால்வாயானது மிகவும் ஆழமானதென தெரிவிக்கப்படுகிறது. குழந்தை தவறி விழுந்த பின்னர் அதனை மீட்க முயற்சித்த போதும், சுமார் 150 மீற்றருக்கு அப்பால் குழந்தை நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளது. குற்றுயிருடன் குழந்தை மீட்கப்பட்டபோதும், வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளது.

குழந்தையின் சடலம் கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதோடு, மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை கடந்த 21ஆம் திகதி கிளிநொச்சி கண்ணகிபுரம் பகுதியிலும் நீரில் மூழ்கி ஒன்றரை வயது குழந்தையொன்று உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-312)

FALC FRENCH LANGUAGE CENTRE

# FRENCH வகுப்புக்கள்

V. ஜெகன் (Trained in France- 2007)

Diploma Classes : DELF A1, A2, B1, B2. (C-1002)

40, பலாலி வீதி, இலுப்பையடி 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் :06.01.18 சனி காலை 10மணி.

181, பிரதான வீதி, நெல்லியடி. 021 320 2973 ஆரம்பம் :08.01.18 மாலை 3.30மணி

திருமணம் முடித்து U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1, Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன.



# பொருளியற் கல்லூரி

நாவலர் றோட், யாழ்ப்பாணம் - கே.கே.எஸ்.றோட், இணுவில்.

## A/L Day Class

கலை, வர்த்தகப்பிரிவு ஆரம்பம் : 04.01.2018 வியாழன் - 8.00 am

இரு இடங்களிலும் அன்றையதினம் உங்கள் அனுமதிகளை பெற்றுக்கொள்ளவும். (C-1058)



# வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603, 021 567 1532



## விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

(C-1003)



UK-550/=Kg

மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்

DELIVERY IN 3 - 5 DAYS

V2 TRAVELS-0768226240

- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி
- பருத்தித்துறை • வல்வெட்டித்துறை



## ALLIANCE FRANÇAISE DE JAFFNA-

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

# af பிரெஞ்சு மொழி



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org

(C-950)

021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்



# ECONOMICS HALL

நாவலர் றோட், யாழ்ப்பாணம்

## A/L Day - வர்த்தகப்பிரிவு

ஆரம்பம் 10.01.2018 காலை 8.00

பொருளியல் R.தர்சன் (திங்கள் - வெள் 8.00 a.m - 10.00 a.m)

அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளவும். (2227)

வணிகக்கல்வி N.S.கபில் சனி, ஞாயிறு 7.00-8.00

கணக்கீடு : P.அஜந்தன் பிரி-I திங்-வெ 6.30-7.30 பிரி-II திங்-வெ 3.30-5.30



## A/L Accounting MR.BALAKAJEN (Tutorial staff)

B.com(jaf)H.N.Dip-in-Acc(ATI), Dip-in-Edu(ousl), M.com(Acc)

## A/L 2020 புதிய பிரிவு

பின்வரும் கல்வி நிலையங்களில் ஆரம்பம் (தமிழ்/ஆங்கில மொழி மூலம்)

- KBK ACCOUNTING CENTRE (கந்தர்மடம்) 05/01/2018 வெள்ளி மாலை 4 மணி
- KBK ACCOUNTING CENTRE (கொழும்புத்துறை) 06/01/2018 சனி மாலை 4 மணி
- NEC-யாழ்ப்பாணம், ஆனைப்பந்தி 06/01/2018 சனி காலை 8மணி, 9மணி
- BPI-குருநகர் 08.01.2018 திங்கள் மாலை 4 மணி

(1949)

A/L 2017, A/L 2016 இல் முன்னணி பெறுபேறுகளைப்பெற்ற மாணவர்கள் என்னிடம் கல்வி கற்ற மாணவர்களே...

தொடர்புகளுக்கு : 0765655956



# Beacon

வெலிங்டன் சந்தி (லிங்கம் கூல்பார் அருகாமை), யாழ்ப்பாணம்.

பௌதிகவியல் → திரு.P.ராகவா (B.Sc) பிரபல ஆசிரியர் (M.Sc, Physics)

உயிரியல் → திரு.P.ஸ்ரீதரன் (M.Sc) திரு.கௌதமன் (B.Sc.Spl.Bio)

இரசாயனவியல் → திரு.S.ஸ்ரீதரன் (M.Sc) திரு.S.ஏகன் (B.Sc Spl.che)

இணை.கணிதம் → திரு.T.S.தஜீதரன் (B.Sc) திரு.T.சுகந்தன் (B.Sc)

## A/L கணித, உயிரியல் பிரிவு - 2020

## Day Class ஆரம்பம்:06.01.2018

077 069 0654 (C-1028)


# கண்ணீர் அஞ்சலி

## இளையதம்பி கனகசபாபதி

(ஓய்வு பெற்ற உப அதிபர்)



சுகந்தி நடேசராசன் ஆசிரியரின் அன்புத்தந்தை **இளையதம்பி கனகசபாபதி** அவர்கள் 31.12.2017 அன்று காலமான செய்தி அறிந்து துயர் அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறை வனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிறப்பு : 29-08-1939
இறப்பு : 31-12-2017

பாடசாலைச்சமூகம்
யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்.

# மரண அறிவித்தல்

## சதாசிவம் இராசரத்தினம்

தோற்றம் - 08.10.1949 மறைவு - 31.12.2017



யாழ்ப்பாணம் திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் உடையார்கட்டு வடக்கை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் இராசரத்தினம் அவர்கள் 31.12.2017 அன்று காலமானார்.

அன்னார் காலம் சென்றவர்களான சதாசிவம் - மாணிக்கம் அவர்களின் மகனும் நடராசா-பூமணி அவர்களின் அன்பு மருமகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், கனகரத்தினம் (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்), காலஞ்சென்றவரான செல்வநாயகம், சரஸ்வதி, சந்தானலட்சுமி (ஆயுர்வேத மருந்தாளர் கைதடி), யோக ராணி (சமுர்த்தி உத்தியோ கத்தர்), யோகேஸ்வரி (மாவட்ட பொது வைத்தியசாலை ஊழியர், முல்லைத்தீவு), ஆகியோரின் அன்புச் சகோதரரும், பாஸ்கரன் (பிரான்ஸ்), காலஞ்சென்றவரான மனோகரன், சுமதி, காயத்திரி ஆகியோரின் அன்புத் தந்தையும் காஞ்சனாதேவி, பாலகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும் அமலன், சாருஜன், புவிதன், தசாயினி, துளசிகா, சஜிந்தன், ரதுர்சிகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02.01.2018 இன்று பகல் 11 மணியளவில் உடையார் கட்டில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (C-1055)

தகவல் - குடும்பத்தினர்

உடையார்கட்டு, வடக்கு. தொடர்புகளுக்கு - ச.கனகரத்தினம் (077 074 2882)


## கல்வி ஆண்டு 2018 புதிய பிரிவுகளுக்கான விண்ணப்பம் கோரல்

# தொழில்சார் கணக்கியல் கற்கை நெறிகளுக்கான புதிய பிரிவுகள் 06.01.2017 சனிக்கிழமை ஆரம்பம்

| | | |
|---|---|---|
| ACCA | - | 2 ½ Years |
| ICASL | - | 3 Years |
| AAT | - | 1½ Years |

பின்வரும் கற்கைநெறிகளை பூர்த்தி செய்தவர்களுக்கு பாட விலக்களிப்பு வழங்கப்படும்

HNDA, HNDM, IBSL, CMA, AAT, CIMA, APFASL, CIM (UK) and Any local or foreign degrees.

## K-AIMS BUSINESS SCHOOL

T.P : 077 372 2104

NO 59, Point Pedro road, Ariyakulam, Jaffna. (C-1031)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.01.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.